பக்கங்கள்: 20
விலை: 30.00

# தீம்புனல்
THEEMPUNAL
வாராந்தப் பத்திரிகை

தீ : 01 புனல்:22 25.09.2021 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052



அவமானப்படுத்தப்பட்டது

தமிழ் அரசியல் கைதிகள் அல்ல தமிழ்த்தேசமே!

பக்கம் 11



சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு!

பக்கம் 05




# நாடு திறந்த பின் நடக்கப் போவதென்ன?

நோக்கன்

இலங்கையில் கடந்த வாரத்தில் இருவேறு காட்சிகளை நாம் பார்த்தோம். எந்தவித அறிவித்தலோ, சுற்றறிக்கையோ வெளியிடப்படாமலேயே மதுபான சாலைகள் திறக்கப்பட்டன. தனிமைப்படுத்தல் சட்டவிதிகள், சுகாதாரப் பாதுகாப்பு எதுவும் இல்லாமல் நீண்ட வரிசையில் குடிமக்கள் முண்டியடித்து நின்று மதுபானத்தைப் பெற்றுக் கொள்ளும் காட்சிகளைப் பார்க்க முடிந்தது. ஏதோ ஒரு மதுபானசாலை தனிமைப்படுத்தப்பட்டது என்ற செய்தியைத் தவிர வேறு எந்தச் சட்ட நடவடிக்கையும் எந்த மதுபான சாலை தொடர்பிலும் மேற்கொள்ளப்பட்டதாக ஊடகங்களில் செய்தியைப் பார்க்க முடியவில்லை. மக்கள், கும்பல் கும்பலாக மதுபான சாலைகளை அண்டி நிற்பதை இப்போதும் அவதானிக்கலாம்.

▶19



# “பேய் அரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்!”

அவதானி

இது இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன்னர் மறைந்தாலும் இறவாப் புகழுடன் வாழும் மகாகவி பாரதி, தான் எழுதிய பாஞ்சாலி சபதம் காவியத்தில், அவளது துகிலுரியும் படலம் வரும் போது எழுதப்பட்ட அர்த்தமுள்ள வரிகள்.

இன்றும் இந்த வரிகள் பொருந்தத்தக்கதாகப் பேய் அரசுகள் இயங்குகின்றன.

அதிகாரத்திலிருப்பவர்கள் சொற்படிதான் சட்ட அறிஞர்களும் நீதித்துறையும் நடக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுவிட்டது.

மரண தண்டனைக் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு. நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறையிலிருந்தவரை மீட்டு, பொது மன்னிப்பு வழங்கி, சிறை மீண்ட செம்மலாகக் குறிப்பிட்ட நபர் வீடமைப்பு அதிகார சபையின் தலைவராக நியமனமாகியுள்ளார்.

தென்மராட்சியில் சில மனித உயிர்களை கொன்றழித்து மலசலகூடக்குழியில் போட்டு மூடி வெளியுலகத்தின் கண்களை மறைத்த இராணுவ அதிகாரியைச் சட்டத்தின் முன்னிலையில் நிறுத்திய போதும், மரண தண்டனைதான் விதிக்கப்பட்டது. குறிப்பிட்ட நபரும் சமகால குடும்ப ஆட்சியில் பொது மன்னிப்பில் வெளியே வந்துவிட்டார்.

அவருக்கும் நிறுத்திவைக்கப்பட்ட அரசகொடுப்பனவுகள் அனைத்தும் கிடைத்திருக்கும்!.

அதேசமயம் பல அப்பாவித்தமிழ் - சிங்கள - முஸ்லிம் அரசியல் கைதிகள் இன்னமும் சிறைகளில் வாடிக்கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் சிறைச்சாலைகள் மறு சீரமைப்புக்குப் பொறுப்பான இராஜாங்க

▶19

‘பேசாப் பொருளையும் பேசும் குரல்’



# “ஆக்கஸ் பாதுகாப்பு ஒப்பந்தம்” ஐரோப்பிய - அமெரிக்க முரண்பாட்டை அதிகரித்துள்ளது?

ஐ.வி.மகாசேனன்

சர்வதேச அரசியலில் கடந்த வாரம் பூதாகரமாகிய விடயம் நேட்டோ பங்காளி நாடுகளிடையே ஏற்பட்ட பூசலாகும். அமெரிக்காவும் பிரிட்டனும் இணைந்து அவுஸ்ரேலியாவுடன் நீர்மூழ்கிக் கப்பல் ஒப்பந்தத்தை மேற்கொண்டதையடுத்து பிரான்ஸ் தனது ஏமாற்றத்தையும் கோபத்தையும் வெளிப்படுத்தியிருந்தது. குறிப்பாக பகைமை நாடுகளிடையே கையாளப்படும் தூதரர்களை மீளழைக்கும் செயற்பாட்டை பிரான்ஸ் அமெரிக்கா மற்றும் அவுஸ்ரேலியாவிற்கு எதிராக நகர்த்தி இருப்பது பிளவின் உச்சத்தை வெளிப்படுத்துகிறது. இதனை அமெரிக்க ஐரோப்பிய உறவில் அதிகரிக்கும் முறுகலின் ஓர் பகுதியாகவே சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் கருத்துரைக்கின்றனர். இக்கட்டுரையும் அதிகரிக்கும் அமெரிக்க - ஐரோப்பிய முறுகலை தேடுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.

ஆக்கஸ் (AUKUS) பாதுகாப்பு உடன்பாட்டு அவுஸ்ரேலியா(Aus), அமெரிக்கா (US), பிரிட்டன்(UK) ஆகிய நாடுகளுக்கு இடையே செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. இதன் பிரகாரம் பல்வேறு வகையான தொழில்நுட்பங்களை அவுஸ்ரேலியாவுக்கு அமெரிக்காவும், பிரிட்டனும் வழங்க இருக்கின்றன. முதல் முறையாக அணுசக்தியில் இயங்கும் நீர்மூழ்கிகளும் அவுஸ்ரேலியாவுக்குக் கிடைக்க இருக்கின்றன. உளவுத் தகவல்களைப் பகிர்ந்து கொள்வது, குவாண்டத் தொழில்நுட்பம், க்ரூஸ் ரக ஏவுகணைகளை வழங்குவது என பல்வேறு அம்சங்கள் இந்த உடன்பாட்டில் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றுக்கெல்லாம் மேலாக அணுசக்தியில் இயங்கும் நீர்மூழ்க்கிக் கப்பல்கள்தான் முக்கியமானவை. அவை தெற்கு அவுஸ்ரேலியாவில் அடிலெய்டில் கட்டப்பட உள்ளன. அவற்றைக் கட்டுவதற்கான தொழில்நுட்பம் மற்றும் ஆலோசனையை அமெரிக்காவும் பிரிட்டனும் அவுஸ்ரேலியாவிற்கு வழங்க இருக்கின்றன. நீர்மூழ்கி கப்பலை மையப்படுத்தியே ஆக்கஸ் பாதுகாப்பு ஒப்பந்தம் அமெரிக்கா, அவுஸ்ரேலியா, பிரித்தானியா உடனான பிரான்ஸின் மோதலை உருவாக்கி உள்ளது.

அவுஸ்ரேலியாவுக்காக டீசல்-மின்சார நீர்மூழ்கிக் கப்பல்களை வடிவமைப்பதற்கு சுமார் **3.5** லட்சம் கோடி ரூபாய் அளவிலான உடன்பாட்டை பிரான்ஸ் ஏற்கனவே செய்து கொண்டிருந்தது. இந்த ஒப்பந்தம் நிமிர்த்தமாக **2016** ஆம் ஆண்டிலிருந்தே பிரான்ஸ், அவுஸ்ரேலிய நாடுகளிடையே பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே கடந்த செப்ரெம்பர்-**15** அன்று இணையவழி சந்திப்பினூடான ஆக்கஸ் ஒப்பந்தம் பொதுவெளியில் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆக்கஸ் உடன்பாட்டால் பிரான்ஸின் உடன்பாடு ரத்து செய்யப்பட்டிருக்கிறது. ஆக்கஸ் உடன்பாடு பொதுவெளியில் அறிவிக்கப்படுவதற்கு சில மணி நேரத்துக்கு முன்புதான் அது பற்றி பிரான்சிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது பிரான்ஸை கொதிப்படையச் செய்திருக்கிறது. உடனடியாக அவுஸ்ரேலியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கான பிரான்ஸ் நாட்டின் தூதர்கள் திரும்ப அழைக்கப்பட்டனர். மேலும், பிரான்ஸின் வெளியுறவு அமைச்சர் லே ட்ரியன், அமெரிக்காவின் செயல் “இரட்டை நிலைப்பாடு, நம்பிக்கைத் துரோகம்” எனவும், “நாங்கள் நம்பிக்கை கொண்ட உறவை ஆஸ்திரேலியாவுடன் வைத்திருந்தோம். அந்த நம்பிக்கைக்குத் துரோகம் செய்யப்பட்டுள்ளது” என்றும், பிரிட்டன் “தொடர்ச்சியான சந்தர்ப்பவாத நாடு” எனவும் குற்றம் சாட்டினார்.

**“ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க படைகள் வெளியேறும் திட்டத்தை அமெரிக்க ஏதேச்சதிகாரமாக முன்னெடுத்த போதே பைடன் நிர்வாகம் மீதான ஐரோப்பிய நாடுகளின் நம்பிக்கை சிதைய ஆரம்பித்தது. ஆப்கானிஸ்தான் தலிபான்களினால் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து, ஐரோப்பிய எல்லைகளில் இடம்பெயரும் அழுத்தங்கள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பலதரப்புவாதம் மற்றொரு வெற்றியைப் பெற்றுள்ளது.”**

பிரான்ஸ்-அமெரிக்க முரண்பாட்டை இலகுவாக தனித்து இரு அரசுகளிடையிலான முரண்பாடாக கடந்து செல்ல முடியாது. பிரான்ஸ் அமெரிக்காவின் பிரதான பங்காளிகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் ஓர் உறுப்புரிமை அரசாகும். ஐரோப்பிய ஒன்றியக் கோட்பாட்டில், ஐரோப்பிய ஆணையம் 27 உறுப்பு நாடுகளின் சார்பாக வர்த்தகப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான பிரத்தியேக அதிகாரங்களைக் கொண்டுள்ளது. ஆனால் ஐரோப்பிய ஒன்றியம் வெளிப்படையான பிரெஞ்சு எதிர்ப்பை எதிர்கொண்டு நகர்வது சாத்தியமில்லை. வெளிப்படையான பகைமை மூலம் ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தக நிகழ்ச்சி நிரலை பிரான்ஸ் கடந்த காலங்களில் மாற்றி உள்ளது. **2016** ஆம் ஆண்டில், அப்போதைய ஜனாதிபதி பிரான்சுவா ஹாலண்ட் வாஷிங்டனுடனான டிரான்ஸ் அட்லாண்டிக் டிரேடு அண்ட் இன்வெஸ்ட்மென்ட் பார்ட்னர்ஷிப் பேச்சுவார்த்தையை திறம்பட முறியடித்தார். மேலும் தென்அமெரிக்க நாடுகளுடனான மெர்கோசர் ஒப்பந்தம் நடைமுறைக்கு வர அனுமதிக்க மாட்டேன் என்று மக்ரோன் தெளிவுபடுத்தினார். எனவே அமெரிக்காவுடனான பிரான்சின் முரண்பாடு அமெரிக்கா-ஐரோப்பிய ஒன்றிய உறவின் நெருக்கடியையே உறுதி செய்கிறது.



சர்வதேச அரசியலில் நீண்டகால பங்காளிகளாக காணப்படும் அமெரிக்க-ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கிடையிலான உறவில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் காலத்திலிருந்து சில நெருக்கடிகள் உருவாகியது. ‘அமெரிக்கா முதன்மை’ கொள்கையை மையப்படுத்திய ட்ரம்பின் வெளியுறவுக்கொள்கை செயற்பாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்துடனான அமெரிக்க உறவை பலவீனப்படுத்தியது. புதிய ஜனாதிபதி ஜோ பைடனின் வருகையை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் வரவேற்றிருந்தது. மேலும், ஜோ பைடன் ஜனாதிபதியாகி தனது உத்தியோகபூர்வ முதல் பயணத்தை ஐரோப்பியக் கண்டத்திற்கு மேற்கொண்டிருந்தமை மற்றும் ஜி-7, நேட்டோ மாநாடுகளில் மீளப்புதுப்பிக்கப்படும் அமெரிக்க-ஐரோப்பிய ஒன்றிய உறவுகள் பற்றியும் உரையாடப்பட்டது. இவை சர்வதேச அரசியலில் அமெரிக்க-ஐரோப்பிய உறவு மீள புத்துணர்வு பெறுவதாக எதிர்பார்க்கப்பட்டது. எனினும் பைடன் நிர்வாகத்தின் அண்மைய செயற்பாடுகளும் எழும் விமர்சனங்களும் பைடனின் நிர்வாகமும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் உறவிலிருந்து விலகிச் செல்லும் போக்கின் சாட்சியமாகவே அமைகிறது. இதனை கவனமாக அவதானித்தல் வேண்டும்.




முதலாவது, ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க படைகள் வெளியேறும் திட்டத்தை அமெரிக்க ஏதேச்சதிகாரமாக முன்னெடுத்த போதே பைடன் நிர்வாகம் மீதான ஐரோப்பிய நாடுகளின் நம்பிக்கை சிதைய ஆரம்பித்தது. ஆப்கானிஸ்தான் தலிபான்களினால் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து, ஐரோப்பிய எல்லைகளில் இடம்பெயரும் அழுத்தங்கள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பலதரப்புவாதம் மற்றொரு வெற்றியைப் பெற்றுள்ளது. மேலும் அமெரிக்கா திரும்பப் பெறும் பதிவு அதிகரித்த போது உலகின் பல பகுதிகளில் உறுதியற்ற தன்மை அதிகரித்தது. ஆனால், பாரம்பரியமாக அட்லாண்டிக் உறவுகளை ஊக்குவிக்கும் ஒரு வழக்கமான சொல்லாட்சியைத் தவிர்த்து, புதிய அமெரிக்க ஜனாதிபதி வெள்ளை மாளிகையில் டொனால்ட் டிரம்பின் பதவியில் இருந்து அமெரிக்க-ஐரோப்பிய ஒன்றிய உறவுகளுக்கு ஏற்பட்ட சேதத்தை மாற்றியமைக்க பெரிதாக எதுவும் செய்யவில்லை. இப்போது, அமெரிக்க விலகல் மற்றும் ஆப்கானிஸ்தானின் தலிபான்களின் எழுச்சியைத் தொடர்ந்து, ஐரோப்பா இரண்டு வெவ்வேறு அமெரிக்க நிர்வாகங்களுக்கிடையில் ஒரு சங்கடமான, தொடர்ச்சியான உணர்வை எழுப்புகிறது என்ற கருத்தே ஐரோப்பிய நாடுகளிடையே ஏற்பட்டுள்ளது.

இரண்டாவது, கடந்த செப்ரெம்பர்-15 ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றிய நாடான பிரான்சுடன் அவுஸ்ரேலியா மேற்கொண்டிருந்த நீர்மூழ்கிக் கப்பல் வடிவமைப்பு வர்த்தக ஒப்பந்தத்தை முறியடித்து ஆக்கஸ் எனும் புதியதொரு பாதுகாப்பு ஒப்பந்தத்தை அமெரிக்கா, பிரிட்டன் கூட்டு அவுஸ்ரேலியாவுடன் மேற்கொண்டமையானது அமெரிக்க மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் நம்பிக்கையீனத்தை மேலும் அதிகரித்துள்ளது. இது அமெரிக்காவின் பைடன் நிர்வாகமும் தொடர்ச்சியாக ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவில் வெளிப்படைத்தன்மை மற்றும் விசுவாசத்தை நிராகரித்துள்ளது என்ற உரையாடலையே ஐரோப்பிய ஒன்றிய தலைவர்களிடையே எழுப்பியுள்ளது. ஐரோப்பிய கவுன்சில் தலைவர் சார்லஸ் மைக்கேல், பிரெஞ்சு நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்குவதற்கான ஒரு பிளாக்பஸ்டர் ஒப்பந்தத்தை அவுஸ்ரேலியா ரத்து செய்து அமெரிக்காவுடன் மேற்கொள்ளும் புதிய இந்தோ-பசிபிக் மூலோபாயம் பற்றி ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் அமெரிக்கா ஆலோசிக்கத் தவறியதன் மூலம், ஜூன் மாதம் பிரிட்டனில் நடந்த G-7 உச்சி மாநாட்டில் பல மணிநேரப் பேச்சுவார்த்தைக்குப் பிறகு தலைவர்கள் எட்டிய ஒப்பந்தத்தை பைடன் நிராகரித்ததாக கூறினார். மேலும், “கூட்டணிக்கான அடிப்படை கொள்கைகள், விசுவாசம் மற்றும் வெளிப்படைத் தன்மை. வெளிப்படையான தன்மை மற்றும் விசுவாசத்தின் தெளிவான பற்றாக்குறையை நாங்கள் கவனிக்கிறோம்.” என்றும் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்காவின் வெளியேற்றம் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி பைடன் நிர்வாகத்தின் மீதான நம்பிக்கையை சிதைத்தது. ஐரோப்பிய அதிகாரிகள் தங்கள் தொனியை கூர்மையாக்கினர், இருப்பினும் அவர்கள் உறுதியான நடவடிக்கையை நிறுத்திவிட்டனர். எனினும் பிரான்ஸ்-அவுஸ்ரேலிய ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டு அவுஸ்ரேலியாவுடன் அமெரிக்க பிரிட்டன் கூட்டு மேற்கொண்டுள்ள ஆக்கஸ் ஒப்பந்தம் அமெரிக்க ஐரோப்பிய ஒன்றிய உறவில் கடுமையான நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

ஒன்று, ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் அமெரிக்காவிற்குமான வர்த்தக உறவுகளே கடும் நெருக்கடிக்குச் செல்லும் நிலைமை உருவாகியுள்ளது. சி.என்.என் (CNN) உடனான நேர்காணலின் போது ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் தனது சொந்த அதிருப்தியை வெளிப்படுத்தினார். அதில் அவர் பைடன் “நிறைய திறந்த கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டும். எங்கள் உறுப்பு நாடுகளில் ஒன்று ஏற்றுக்கொள்ள முடியாத வகையில் நடத்தப்பட்டுள்ளது, எனவே என்ன நடந்தது, ஏன் என்று நாங்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். எனவே நீங்கள் வழக்கம்போல வியாபாரத்தைத் தொடர்வதற்கு முன்பு அதை முதலில் தெளிவுபடுத்துங்கள்.” என்று கோரியுள்ளார். மேலும், ஐரோப்பிய இராஜதந்திரிகள் தற்போது வரவிருக்கும் தொழில்நுட்பம் மற்றும் வர்த்தகம் பற்றிய கூட்டுக் கொள்கைகளை விவாதிக்க உள்ள EU-U.S உச்சி மாநாட்டை ரத்து செய்யலாமா? அல்லது தள்ளிவைக்கலாமா? என்று ஆலோசித்து வருகின்றனர். (06 ஆம் பக்கம் பார்க்க)

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564
www.theempunal.lk
news@theempunal.com

THEEMPUNAL தீம்புனல்

# தன்வினை தன்னைச் சுடும் என்பது தெரியாததா என்ன?

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் போராட்டம் தொடர்ந்தும் கண்ணீர்க் கதையாகவே மாறிக் கொண்டிருக்கின்றது. இற்றைக்கு 1677 நாட்களைத் தாண்டி போராட்டத்தை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள். எப்படியாவது தமது போராட்டத்திற்கு நீதி கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையுடன் நிகழ்த்தப்படும் போராட்டத்திற்கு இம்முறை நடைபெற்ற ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொடரில் ஏதாவது விமோசனம் கிடைக்கும் என்று நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால் ஐ.நா மனித உரிமைச் செயலாளருடனான சந்திப்பில் இலங்கையின் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ காணாமல் போனோருக்கான மரணச் சான்றிதழை வழங்குவதோடு அவர்களின் உறவுகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கையினையும் முன்னெடுப்பதாக உறுதி வழங்கியிருக்கின்றார். இது காணாமல் போனோர் உறவுகளைப் பெரிதும் ஏமாற்றத்திற்கு உள்ளாக்கியிருக்கின்றது.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான மரணச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளுமாறு அரசாங்கம் அறிவித்திருந்தது. ஆனால் எங்களுக்குத் தேவை மரணச் சான்றிதழ் இல்லை, நீதியே என்று அதனை நிராகரித்திருந்தனர் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள். இந்நிலையில் மீண்டும் மரணச் சான்றிதழ் வழங்குவது தொடர்பான கருத்தினையே அரச தலைவர் முன்வைத்துள்ளார். இது எந்த வகைக்குரியது?. முள்ளிவாய்க்கால் யுத்த முடிவின் தறுவாயில் தமது உறவுகளை இன்றைய ஜனாதிபதி அன்று பாதுகாப்புச் செயலாளராக இருந்த போது அவரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களே இன்று காணாமல் போனோர் என்று அழைக்கப்படுபவர்கள். அப்படியிருக்க அவர்களுக்கு இதுவரை என்ன நடந்தது? என்ற தெளிவான விளக்கத்தினை முன்வைக்காது மரணச் சான்றிதழ் வழங்குவது தொடர்பில் கொண்டுள்ள எண்ணம் காணாமல் போனோர் எவரும் உயிருடன் இல்லை என்று மறைமுகமாகச் சொல்ல வருவதாகவே அர்த்தம் தருகின்றது. ஆனால் அப்படி மெத்தனமாகச் சொல்லித் தப்பித்துவிடவும் முடியாது. அவர்கள் உயிருடன் இல்லை என்றால் எவ்வாறு மரணமானார்கள்? என்பதனைத் தெளிவுபடுத்த வேண்டும். நிச்சயமாக இயற்கை மரணம் அடைந்தார்கள் என்று சொல்லித் தப்பிக்க முடியாது. அவ்வாறு எல்லோரும் மரணமடைவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்பதும் தெளிவு. அதனை விடவும் அப்படிச் சிலர் இறந்திருந்தால் அந்தக் காலப்பகுதியிலேயே உறவுகளுக்கு அறிவித்திருக்க வேண்டும். அதேபோல் காணாமல் போனவர்கள் கனடாவில் நிற்கின்றார்கள் என்று பசப்பு வார்த்தைகளையும் சொல்லிக் கொண்டு திரியவும் முடியாது. அவர்கள் ஒப்படைத்தது வன்னியில் இருந்து மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் நுழைகின்ற நுழைவாயிலில் நின்ற இராணுவத்தினரிடம். அங்கு அவர்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் ஒருநாள் இருந்தாலும் வந்து சரணடையுங்கள் அவர்களுக்கான புனர்வாழ்வினை வழங்கி உறவுகளிம் மீள ஒப்படைப்போம் என்று வழங்கிய வாக்குறுதிகளை நம்பியே தமது உறவுகளை ஒப்படைத்திருந்தார்கள். இவ்வாறு உயிருடன் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழைத் தருவதாகக் கூறுவது எவ்வளவு பெரிய மனித உரிமை மீறல் என்பதனை அரச தரப்பும் புரிந்து கொள்ள வேண்டும், ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பும் புரிந்து கொள்ள வேண்டும். நீதி கோரும் ஒரு தரப்புக்கு வெறும் சான்றிதழை வழங்குவதன் மூலம் தீர்வினைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்று நம்புவது இலங்கையில் நீதி என்ற ஒன்றுக்கே இடம் இல்லை என்பதனைப் பறை சாற்றுவதாகவே அமைகின்றது.

மரணச் சான்றிதழையும் நட்டஈட்டுத் தொகையையும் உறவினர்கள் பெற்றுக் கொள்வதாக இருந்தால் அதனை எப்போதோ பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் ஒப்புதல் அளித்திருப்பார்கள். நட்டஈட்டுத் தொகையினை வாங்கிக் கொண்டு மௌனமாக இருந்திருப்பார்கள். இத்தனை காலம் போராட்டத்தினை முன்னெடுக்க வேண்டிய அவசியத்துக்கு உள்ளாகியிருக்க மாட்டார்கள். அரசு அவர்களின் போராட்டத்தின் தன்மையினை வெறும் நட்டஈட்டுத்தொகைக்குரியதாக எண்ணியிருப்பது அவர்களின் ஆத்மார்த்தமான உணர்வுகளைக் கொச்சைப்படுத்துவதாகவே அமைகின்றது. ஒரு பிரச்சினைக்குச் சரியான வழியில் தீர்வினை எட்டுவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும். முதலில் சம்பந்தப்பட்டவர்கள் முன் வந்து வெளிப்படையாகப் பேச வேண்டும். சாத்தியமான தீர்வுகள் தொடர்பில் அவர்களுடன் கலந்துரையாட வேண்டும்.

உண்மையில் காணாமல் ஆக்கப்பட்டோர் என்பவர்கள் தெருவில் தொலைக்கப்பட்டவர்கள் இல்லை. தேடிக் கிடைக்கவில்லை என்றால் அதற்குரிய நட்ட ஈட்டினைத் தருகிறோம் என்று சொல்வதற்கு. அவர்கள் இரத்தமும் சதையுமாக அரசாங்கத் தரப்பிடம் திரும்பக் கிடைப்பார்கள் என்ற நம்பிக்கையில் ஒப்படைக்கப்பட்டவர்கள். அதற்கு முழுப்பொறுப்புமே அரசாங்கம்தான். அவர்களை திரும்ப உறவுகளிடம் ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கே உண்டு. அவ்வாறு இல்லை என்றால் வெளிப்படையாகத் தமது குற்றங்களை ஒப்புக் கொண்டு அதற்குரிய தண்டனையினை ஏற்றுக் கொள்ள வேண்டும். யுத்த களத்தில் இறந்து போனவர்களை மீளவும் தரும்படி எந்த உறவுகளும் கோரிக்கை விடுக்கவில்லை. பாதுகாப்பான பிரதேசத்தில் ஒப்படைக்கப்பட்ட உறவுகளைத்தான் உறவினர்கள் திரும்பக் கேட்கின்றார்கள். ஒரு பொருளை ஒருவரிடம் பொறுப்பாகக் கொடுத்தால் அந்தப் பொருளுக்கு அவரே பொறுப்பு. அதனை மீளக் கொடுக்க வேண்டியதும் அவரேதான். அதனை விடுத்து அப்பொருளைக் காணவில்லை என்று சான்றிதழ் தருவதாகக் கூறுவது எவ்வளவு சின்னத்தனமான செயல். அரசு ஏன் திரும்பத் திரும்ப சின்னத்தனமான செயலைச் செய்கின்றது? என்று தெரியவில்லை.

மரணச் சான்றிதழ் வழங்குவதாக அரச தலைவர் அறிவித்திருந்த நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளிடம் இருந்து எழுந்துள்ள எதிர்க் குரல்களைத் தொடர்ந்து அரசு இன்னொரு இராஜதந்திர நகர்வை முன்னெடுக்கத் தொடங்கியதாகத் தெரிகின்றது. கடந்த பாராளுமன்ற அமர்வில் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன காணாமல் போனோர் தொடர்பிலான விசாரணைகள் பாதிக்கப்படாத வகையில், குறித்த குடும்பங்கள் எதிர்கொள்ளும் நடைமுறைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் “காணாமல் போனோர் சான்றிதழ்” அடுத்த இரண்டு மாதங்களுக்குள் வழங்கப்படும் என்றும் தீர்வு கண்டடையப்பட்டதும் சான்றிதழ் மீளப் பெற்றுக் கொள்ளப்படும் என்றும் சிறுபிள்ளைத்தனமான இன்னொரு கருத்தினை வெளியிட்டுள்ளார். தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட ஒருவர் இருக்கின்றாரா இல்லையா? என்று தேடிக் கண்டுபிடிக்க முடியாத நிலையிலேயே ஒரு அரசு இருக்கின்றது என்றால் அதன் இயலுமை எத்தகையது? என்று சிந்திக்க வேண்டியிருக்கின்றது. அவர்களுக்கும் தெரியாமல் அரசுக்குள் இன்னொரு அதி சக்திவாய்ந்த குழு இயங்கிக் கொண்டு இருப்பது போலவும் அது மறைத்து வைத்துள்ளதெதனையும் தங்களால் தேடிப் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்றும் தேடிக் கண்டுபிடித்ததும் காணாமல் போனோர் சான்றிதழை மீளப் பெற்றுக் கொண்டு அவர்களை திருப்பி ஒப்படைக்கின்றோம் என்பது போன்ற தோரணையிலே இவர்கள் இவ்வாறு எல்லாம் பேசுகின்றார்கள் போல் தெரிகின்றது.

உண்மையில் இவ்வாறு பொருத்தமில்லாத வீண் பேச்சுக்களை நிறுத்தி காணாமல் போனோர் உறவுகள் எதிர்பார்க்கும் நீதி தொடர்பில் சிந்திக்க வேண்டும். ஆனால் அப்படி அரசு சிந்திக்குமா? என்பது சந்தேகமே. அப்படிச் சிந்தித்தால் தண்டனைகள் அவர்கள் பக்கமும் திரும்பும் என்பது அவர்கள் அறியாதது இல்லையே! ■

---

# எலும்பைக் காட்டி வாலை ஆட்ட வைக்கும் முயற்சியா? ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு

**தந்திரன்**

அதிபர், ஆசிரியர் தொழில்சங்கப் போராட்டங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளது. தமது சம்பள முரண்பாடு உள்ளிட்ட உரிமைகள் கிடைக்கப் பெறும் வரை போராட்டத்தைத் தாங்கள் நிறுத்தப் போவதில்லை என்று போராட்டத்தில் ஈடுபடும் தரப்பினைத் தொடர்ந்தும் வலியுறுத்திக் கொண்டே வருகின்றனர்.

கடந்த அதிபர், ஆசிரியர் சங்கங்களுடனான உப குழுக் கூட்டத்தில் செப்ரெம்பர் மாதம் முதல் அதிபர், ஆசிரியர்களுக்கு மாதாந்தம் ரூபா ஐயாயிரம் சம்பளம் அதிகரிக்கப்படுமென முடிவு எட்டப்பட்டிருந்தது. இதனை ஆசிரியர் சங்கம் ஏற்றுக்கொள்ளாத நிலையிலும் நல்லெண்ண முயற்சியாகவேனும் குறித்த ரூபா ஐயாயிரத்தினை வழங்கியிருக்க வேண்டும். ஆக அது ஒரு ஏமாற்று முயற்சியாகவே இருந்துள்ளது.

அடுத்து அரசாங்கம் இன்னொரு முயற்சியை மேற்கொண்டுள்ளது. அதாவது நிகழ்நிலையின் ஊடாகக் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு, செப்ரெம்பர் மாதமும் ஒக்ரோபர் மாதமும் தலா ஐயாயிரம் வழங்கப்படுமென அறிவித்துள்ளது. இதில் வேடிக்கை என்னவெனில் செப்ரெம்பர் மாத சம்பளத் திட்டத்தில் எந்தவொரு அதிகரிப்பும் இடம்பெறவில்லை.

நிகழ்நிலையூடாகக் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களை அதிபர்கள் உறுதிப்படுத்த வேண்டும். மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் ஈடுபாடு காட்டும் அதிபர்களை இனம் கண்டு வலயக்கல்விப் பணிப்பாளர் உறுதிப்படுத்த வேண்டும் என்பதே கல்வி அமைச்சினால் முன்வைக்கப்பட்ட விடயமாக அமைகின்றது. இதற்கான சாத்தியங்களை உருவாக்குதல் என்பது முடியாத காரியமாகவே காணப்படும். பாரபட்சங்களின் ஊடாக முறையற்ற விடயங்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்களே காணப்படுகின்றன.

சரி, எதற்காக இந்த நிகழ்நிலை வகுப்புக்களுக்கான கொடுப்பனவு. யாரும் எளிதில் நம்பி விடலாம் மாணவர்களின் மீது அரசாங்கத்திற்கு அதீத அக்கறை உண்டென்று. அப்படி அக்கறை உண்டெனின் அதிபர் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டினைத் தீர்த்து வைத்தலே பொருத்தமான நடவடிக்கை ஆகும். ஆனால் அதை விடுத்து அரசாங்கம் ஆசிரியர்களே ஆசிரியர்களின் போராட்டத்தினைக் காட்டிக் கொடுக்கும் நிர்பந்தத்திற்கு உள்ளாக்க நினைக்கிறார்கள். இத்தகைய கபடங்களுடன் தான் அரசாங்கம் தனது திருகு தாளங்களை செய்ய முனைகின்றது.

அதாவது ஆசிரியர்களையும் அதிபர்களையும் ஆசிரிய சங்கங்களையும் பிரித்தாழ முனைகின்றது என்றே எண்ணத் தோன்றுகின்றது. ஆயினும் அதிபர்கள், ஆசிரியர்களின் தொழில்சங்க போராட்டங்களின் மத்தியிலும், ஆசிரியர்கள் மாணவர்களின் நலன் கருதி நிகழ்நிலையூடாகக் கற்பித்தலில் ஈடுபடுகிறார்கள். அத்தகைய செயற்பாடு பணத்திற்கானது அல்ல. அது மனிதாபிமானத்திற்கானது. தியாக மனப்பான்மையின்பாற்பட்டது. அதனை கொச்சைப்படுத்தும் விதமாக அரசு கொடுப்பனவுகளை அறிவித்து ஆசிரியர்களின் தியாக உணர்வினை மலினப்படுத்த முனைகிறது.




அதேவேளை சில பாடசாலைகளில் நிகழ்நிலையூடாக கற்பித்தலில் ஈடுபடும் வண்ணம் ஆசிரியர்களை அதிபர் வற்புறுத்துவதாகவும் அறியக் கிடக்கிறது. சில அதிபர்கள் இத்தகைய செயற்பாடுகளுக்கு விதிவிலக்காக, அதிபர் ஆசிரியர் தொழில் சங்க போராட்டங்களிற்குப் பலம் சேர்த்து வருவதனையும் குறிப்பிட்டே ஆக வேண்டும். பெரும்பாலான ஆசிரியர் நலன் புரிக்கழகங்கள் தங்களுக்குக் கொடுப்பனவுகள் அவசியமில்லை என்றும் நாங்கள் மாணவர்களின் நலன் கருதி மாத்திரம் கற்பித்தலில் ஈடுபடுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

ஆகையால் அரசாங்கம் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும், எந்வொரு அற்ப சலுகைகளுக்காகவும் ஆசிரியர்கள் தங்கள் போராட்டங்களைக் கைவிடமாட்டார்கள் என்பதனையும் இருபத்துமூன்று ஆண்டுகால உரிமைகளை விட்டுக் கொடுக்கத் தயாரில்லை என்பதனையும் அதனை வென்றெடுக்கும் தொடர் போராட்டங்களில் பங்கெடுப்பார்கள் என்பதும் வெளிப்படை.

எனவே அதிபர் ஆசிரியர் தொழில்சங்கப் போராட்டங்களில் ஈடுபடும் இக்காலம் கொரோனாக் காலம். இதுவே ஒரு சாதாரண காலமாகவிருந்தால் அரசு எத்தகைய நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டிவரும் என்பதனைச் சிந்தித்தல் வேண்டும். அதிபர், ஆசிரியர் தொழில் சங்க போராட்டங்கள் மட்டுமன்றி பெற்றோர் மாணவர் போராட்டங்களும் இடம்பெற வாய்ப்பிருக்கும். இதனைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் ஆசிரியர்களுக்கான நீதியை தாமாகவே தீர்த்துவைக்க முன்வர வேண்டும். ■


செல்வின்

# தேசம் என்பது கிராமத்திலிருந்துதான் தொடங்குகின்றது.

இலங்கைத் தீவில் தனித்துவமாகவும் நில ரீதியாக வேறுபட்டும் வாழ்ந்த பல் இனக் குழுமங்கள்மீது பிரித்தானியக்குடியேற்றவாத ஆட்சியாளர் தங்களது பரிசோதனை முயற்சியாகத் திணித்த ஒற்றையாட்சி அரசியல் முறைமையானது அன்றைய காலகட்டத்தில் இருந்த இலங்கை மக்களின் தலைவர்கள் கொண்டிருந்த எதிர்மறையான மனநிலையினை முழுமையாகக் கவனத்திற் கொள்ளத் தவறியிருந்தது. அதேபோன்று தமிழ்மக்களின் தலைவர்கள் எனத் தங்களைக் காட்டிக் கொண்டிருந்தவர்களும் தங்களது சகபாடிகளான சிங்கள பௌத்த தலைவர்களின் உண்மையான நோக்கங்களையும் அவர்களது சூழ்ச்சித்திறன் மிக்கச் சிந்தனைப்போக்குகளையும் மிக குறைவாகவே கணிப்பிட்டிருந்தனர். அதன் ஒட்டுமொத்த விளைவே நாங்கள் எங்கள் இருப்பினைத் தக்கவைப்பதற்கு இன்று செலுத்தும் பாரிய விலையாக மாறியுள்ளது.

என்றுமே சவாலுக்கு உட்படுத்த முடியாத எண்ணிக்கைப் பெரும்பான்மையைக் கொண்ட சிங்கள பௌத்த மக்களுடன் இணைந்து ஏனைய எண்ணிக்கையில் சிறியளவான தமிழ்த்தேசிய இனத்தின் அரசியல் அதிகாரத்தையும் பிணைத்ததாக உருவாக்கப்பட்ட அரசியல் அதிகார வடிவமே கடந்த எட்டு தசாப்தங்களாக தொடரும் இனவழிப்பு முறைமையின் மூலவேராக அமைந்துள்ளது.

பிரித்தானியரால் இத்தீவில் போடப்பட்ட தவறான முடிச்சுகாரணமாக இலங்கையில் சிங்கள பௌத்த வாக்குப் பெரும்பான்மையினால் தொடர்ந்து உருவாக்கப்பட்டு வரும் அரசுகள் தமிழ்மக்கள் பரந்தும் பாரம்பரியமாகவும் வாழ்ந்துகொண்டிருந்த அவர்களது தாயக பூமியிலிருந்து அவர்களது இருப்பை இல்லாது ஒழிக்கும் நிகழ்ச்சி நிரலை எந்தவிதமான இடையீடும் இன்றித் தொடருகின்றனர்.

தனிமனிதனுக்கும் குடும்பத்திற்கும் தேவையான கல்வி, சுகாதாரம், குடியிருப்பு, பாதுகாப்பு, பொருளாதார வாய்ப்புகள் போன்ற இன்னோரன்ன அடிப்படைத் தேவைகளை வழங்கிக்கொண்டு கூடிவாழ்வதற்கும் கூட்டாகப் பண்பாடு மற்றும் வரலாற்று பாரம்பரியங்களை பேணும் உரிமைகளை மறுத்துக்கொண்டிருக்கும் பேரினவாதச் சிந்தனையாளர்களால் கட்டமைக்கப்படுகின்ற இந்த அரசுகள் தமிழ் மக்களின் கூட்டுவாழ்வுக்கான உரிமையையும் தங்களது பாரம்பரிய வாழ்நிலத்திலும் புலத்திலும் அவர்கள் கொண்டிருக்கக்கூடிய ஆளுகை உரிமையினை முற்றாக மறுக்கின்ற சமகாலத்தில் அவர்களது கூட்டுஇருப்பிற்கும் பொருண்மிய செழுமைக்கும் மூலத்தூண்களாகவும் அடிச் சட்டங்களாகவும் அமைந்துள்ள சமூக நிறுவனங்களின் இருப்பினைத் தகர்ப்பதனையே முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டு தங்களது செயற்திட்டங்களை முன்னெடுக்கின்றனர்.

இந்த நிலையில் தமிழ்மக்கள் தங்கள் சமூக இருப்பினைத் தக்கவைப்பதற்கான கூட்டுக்கட்டப்பாடு கொண்டவர்களாகத் தங்களை மீளுருவாக்கம் செய்யவேண்டியுள்ளது.

மகாவம்சத்தினை அடிப்படையாகக் கொண்டு சுமார் 2500 ஆண்டுகால தமது வரலாற்றினைக் கட்டமைத்துக்கொண்ட ஒரு மக்கள் கூட்டம் இனக்குழுமமாக, தனக்கென ஒரு சிறப்பான மொழியினையும் பண்பாட்டினையும் வாழ்வியல் விழுமியங்களையும் கொண்ட ஒரு தேசிய இனமாக, தன்னைத்தானே ஆளுகின்ற தன்னாதிக்கத்தை இன்றைய நவீன அரசியல் கோட்பாடுகளுக்கு இசைவாகக் கட்டியெழுப்பி தக்கவைத்துக் கொள்ளும் ஆட்சித்திறனும் சூழ்ச்சித்திறனும் கொண்ட சக்தியாக, தன்னைக் கட்டமைத்துக்கொண்ட அதிசயம் இந்தத்தீவில் தான் நிகழ்ந்துள்ளது.

காலத்திற்கு காலம் தான் எதிர்கொண்ட படையெடுப்புகள், - சோழர்களில் தொடங்கி போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் பின் ஆங்கிலேயர் வரை-, மாற்று மொழிகளின் செல்வாக்கு, பண்பாடு, சமயம், அரசியல் உறவுகள் ஆகியவற்றின் செல்வாக்குகள் ஆகியவற்றையும் தாண்டி எவ்வாறு சிங்கள பௌத்த தேசிய இனம் தன்னைக்கட்டமைத்துக்கொண்டது என்பதிலிருந்து தமிழ்மக்களாகிய நாங்களும் பாடங்களைக் கற்றுக்கொள்ளவேண்டியுள்ளது.

அவர்கள் மற்றவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார்கள் என்பதனை விட தம்மைத் தாமே கட்டமைத்துக் கொண்டார்கள் என்பதே பேருண்மையாகும். தங்களிடையே தேசிய உணர்வினைக் கட்டியெழுப்புவதிலும் தாங்களே தேசமாக உருக்கொண்டெழுவதிலும் அவர்கள் கொண்டிருந்த பற்றுறுதியினை நாங்கள் முதலில் அங்கீகரிக்கவேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் வரலாறு தேசத்தைக் கட்டமைக்கும் வரலாறாகக் காணப்படாமைக்கு எமக்கு மிக அண்மைத் தூரத்தினுள் பலகோடி மக்களைக்கொண்ட தமிழர் நிலப்பரப்பு இருந்ததும் காரணம் எனலாம். அந்த பெரும் நிலப்பரப்பில் உருவாகிவந்த திராவிட அரசியல், திரைப்பட உலகம், மொழி ஆராச்சிகளும் பண்பாட்டு விரிவாக்கங்கள் போன்ற பலவிடயங்கள் எமக்கான புத்தாக்க உணர்வினையும் எமக்கென தனித்துவமான அடையாளங்களைக் கட்டமைப்பதில் இருந்திருக்கவேண்டிய எமது பொறுப்புணர்வினையும் மழுங்கடித்திருந்தன.

சுதேச இயக்கங்களின் முன்னோடிகளில் ஒருவராக வந்த ஆறுமுக நாவலரும் தனது முயற்சிகளை இந்தியாவின் தமிழ் நாட்டுடன் இணைந்ததாகவே முன்னெடுத்திருந்தார். ஆனால், அவருக்கு பல தசாப்தங்களுக்குப் பின்னால் வந்த அநாகரிக தர்மபால பௌத்த சமய மறுமலர்ச்சியுடன் சிங்கள மக்களின் எழுச்சியையும் ஒன்றிணைத்து சிங்கள பௌத்த தேசியவாத சிந்தனையினையும் செயற்பாட்டினையும் விரைவுபடுத்தினார்.

1940களிற்கு பின்வந்த சிங்கள மக்களின் அரசியற் தலைவர்கள் அனைவரும் தங்களது வர்க்க, குல, சாதி மற்றும் குடும்ப நலன்கள் புறக்கணிக்கப்படாத வகையில் அரசியலில் ஈடுபட்ட அதேவேளையில் சிங்கள பௌத்த தேசியவாதத்தினைக் கட்டமைப்பதில் தங்களது முதன்மையான பாத்திரத்தை ஆற்றுவதில் பின்னிற்கவில்லை.

ஆனால் தமிழ் தரப்பு தலைமைகள் தங்களுடைய சமூக உரிமைகளை மற்றவர்களிடமிருந்து கோரிப் பெற்றுக்கொள்ளும் விடயம் போன்றே கருதினர். தமிழ்ச் சமூகத்தினைக் கட்டமைப்பதிலும் அவர்களது பொருண்மிய ஆற்றல்களைப் பெருக்குவதிலும் தலைமைத்துவ ஆற்றல்களை விரிவுபடுத்துவதிலும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுக்கும் தலையாயப் பொறுப்பினைப் புறந்தள்ளியுள்ளனர்.

இத்தகைய பொறுப்பற்ற அணுகுமுறையினை நாம் தொடர்ந்தும் அனுமதிக்கமுடியாது. தமிழ்மக்களை ஒடுக்குகின்ற அரசின் நிர்வாக இயந்திரத்தினை நம்பி, நாம் சோரம்போக முடியாது. அதேவேளையில் புதிய அமைப்புக்கள் நிறுவனங்களை உருவாக்குவதிலும் அவற்றுக்கு சட்டமுறையான அங்கீகாரத்தை தேடுவதிலும் நாம் காலத்தையும் வளத்தையும் வீணடிக்கவும் முடியாது. எம்மிடம் இலங்கையின் அரசியலமைப்பிற்கும் சட்டவரம்புகளுக்கும் உட்பட்ட மிகவும் பலமான சமூக நிறுவனங்கள் உள்ளன. அவற்றில் முதன்மையானவையாகக் கிராம அபிவிருத்தி சங்கங்களும் கூட்டுறவு அமைப்புகளும் உள்ளூராட்சி சபைகளும் இருக்கின்றன.

இவற்றில் கிராம அபிவிருத்திச் சங்கங்களை முதலாவது கட்டத்தினுள் கையிலெடுப்போம்.

**“ சுதேச இயக்கங்களின் முன்னோடிகளில் ஒருவராக வந்த ஆறுமுக நாவலரும் தனது முயற்சிகளை இந்தியாவின் தமிழ் நாட்டுடன் இணைந்ததாகவே முன்னெடுத்திருந்தார் ஆனால் அவருக்கு பல தசாப்தங்களுக்குப் பின்னால் வந்த அநாகரிக தர்மபால பௌத்த சமய மறுமலர்ச்சியுடன் சிங்கள மக்களின் எழுச்சியையும் ஒன்றிணைத்து சிங்கள பௌத்த தேசியவாத சிந்தனையினையும் செயற்பாட்டினையும் விரைவுபடுத்தினார். ”**

கிராமஅபிவிருத்தி என்ற விடயம் 13வது திருத்தத்தின் கீழ் மாகாண சபைச் சட்டத்தின் கீழும் முழுமையாக மாகாண சபைகளின் அதிகாரங்களின் கீழ் கையளிக்கப்பட்டுள்ள விடயங்களாகும்.

ஒவ்வொரு கிராமமும் தங்களுக்கென கிராம அபிவிருத்திச் சங்கங்களைக் கொண்டிருக்கலாம். ஒரு கிராம சேவகர் பிரிவினுள் ஒன்றிற்கு மேற்பட்ட கிராம அபிவிருத்தி சங்கங்கள் இருக்கலாம். ஆனால் இரண்டு கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியதாக ஒரு கிராம அபிவிருத்திச் சங்கம் இருக்க முடியாது. கிராம அபிவிருத்திச் சங்கங்கள் என்பது ஒரு கிராமத்தின் ஒட்டுமொத்த அபிவிருத்தியையும் திட்டமிட்டு ஒருங்கிணைக்கும் குடை அமைப்பாகும்.

கிராம அபிவிருத்தி சங்கங்கள் கிராமத்தில் வாழும் குடும்பங்களினை அங்கத்தினர்களாக கொண்டு அம்மக்களால் உருவாக்கப்படுகின்றது. அவர்களே தங்களது கிராமம் தொடர்பான நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் தொடர்பான அபிவிருத்தி செல்நெறியையும் கிராமத்தின் வளங்கள், வாழ்வியல். மற்றும் முன்னுரிமைகளையும் அடையாளங்கண்டு மக்கள் சார்பான முன்மொழிவுகளாக அரசாங்கத்திற்கும் அபிவிருத்திப் பங்காள நிறுவனங்களுக்கும் வேறு நன்கொடையாளர்களுக்கும் சமர்ப்பித்து தமது தேவைகளை நிறைவு செய்வர். கிராமத்தின் வளங்களை பேண்தகு தன்மையுடன் பராமரித்துப் பயன்படுத்துவதற்கு உரிய கூட்டுப்பொறுப்பை கிராம அபிவிருத்திச் சங்கமே முன்னெடுக்கும் அதுபோன்று சமூகத்தின் சிறப்புத் தேவைகளையுடையோர், நலிவுற்றோர், எல்லைப்படுத்தப்பட்டோர் ஆகியோர்களின் நலன்களைப் பாதுகாப்பதும் சமூகத்தின் முதன்மையான கடமையாக கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கொண்டிருக்கும்.

ஆனால் நடைமுறையில் கிராம அபிவிருத்தி சங்கங்கள் தமது தார்மீக சமூகக் கடப்பாடுகள் பற்றிய புரிந்துணர்வுகள் எதுவுமின்றி முடங்கியுள்ளன. கிராமத்தின் அபிவிருத்தி திட்டமிடலில் மேலிருந்து அதிகாரிகளால் முன்மொழியப்படும் திட்டங்களுக்கு சம்பிரதாய பூர்வமான ஒப்புதல்கள் வழங்கும் தலையாட்டி நிறுவனங்களாக மாறியுள்ளன.

சமூகத்தின் இளையோரும் கற்றோரும் தலைமைத்துவ ஆற்றல்கள் கொண்ட மூத்தோரும் வெளியே நின்று பார்வையாளராக வேடிக்கை பார்க்கும் துர்பாக்கிய நிலைதான் எஞ்சியுள்ளது. எமது கிராமத்தினதும் மக்களினதும் எதிர்காலம் பற்றிய தொலைநோக்கினை கொண்டிராத கொண்டிருக்கத் தேவையில்லாத அரசாங்க உத்தியோகத்தர்கள் தான் கிராமங்களினதும் சமூகத்தினதும் எதிர்காலம் பற்றிய முடிவுகளை தன்னிச்சையாக மேற்கொள்கின்றனர். அவர்களை நெறிப்படுத்தும் முதன்மைக் காரணியாக மத்திய அரசினது கொள்கைகளும் வழிகாட்டல்களும் வள ஒதுக்கீட்டுப் பிரமாணங்களும் அமைந்துள்ளன. அவர்கள் தங்களது தொழில் மற்றும் பதவி உயர்வுகள் ஆகியவற்றின் பாதுகாப்பு என்பவற்றைக் கருதிக் கொண்டு அரசின் கொள்கைகளை அனுசரிப்பவர்களாகவும் நிறைவேற்றுபவர்களாகவுமே இருக்கின்றனர்.

திறந்த சந்தையின் வரையறையற்ற அத்துமீறல்கள், தனியார் நிதிக்கடன் கம்பனிகளின் கபடத்தனமான சுரண்டல் பொறிமுறைகள், சமூகத்தையும் கிராமத்தையும் குடும்பங்களையும் கூறுபடுத்தும் பல்வேறு அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்புத்திட்டங்கள், எந்தவித சமூகக்கடப்பாடுகளுமின்றி மத்தியப்படுத்தப்பட்ட உத்தரவுகளையும் அபிவிருத்தி திட்டங்களையும் மக்கள் மீது திணிக்கும் மாவட்ட மற்றும் பிரதேச நிர்வாக இயந்திரங்கள், பிரதேசத்தின் முன்னுரிமைகளையும் தேவைகளையும் எதிர்கால அபிவிருத்தி செல்நெறிகளையும் தீர்மானிக்கும் உரிமை கொண்ட பிரதேச சபைகளின் திட்டமிடல் கடப்பாட்டினை கபளீகரம் செய்துள்ள பிரதேச மற்றும் மாவட்ட திட்டமிடல் பொறிமுறைகள் ஆகியவற்றின் அளவுக்கு மீறிய அதிகார அத்துமீறல்களிலிருந்து மக்கள் தங்களது வாழ்க்கையினையும் வாழ்நிலபுலங்களையும் நிறுவனங்களையும் காப்பாற்ற வேண்டியுள்ளது.

ஒவ்வொரு கிராமத்திலும் வாழும் அனைத்து செயற்பாட்டாளர்களும் இணைந்து கிராம அபிவிருத்தி சங்கத்தின் அங்கத்தவர்களாக மாறுவோம். அச்சங்கங்களின் பொறுப்பு வாய்ந்த பணிப்பொறுப்புக்களை நாங்களாகவே விரும்பி பொறுப்பேற்போம். எமது கிராமத்தினதும் மக்களது இருப்பினையும் முன்னுரிமைகளையும் சவால்களையும் வாழ்வியல் பிரச்சனைகளையும் நாங்களே அறிக்கையிடுவோம். சாத்தியமான வழிமுறைகள் வள ஒதுக்கீடுகள் ஆகியவற்றுக்கு ஊடாக சிறப்பான கிராமத்தைக் கட்டமைப்போம். ■

# சம்மந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு!

**சிக்மலிங்கம் றெஜினோல்ட்**







> **100 ஆண்டுகால வரலாற்றை மட்டுமே கொண்ட கிளிநொச்சி, பேரெழுச்சியும் புகழும் அடைந்தது. அந்தளவுக்கு அது தொடர் நெருக்கடிகளையும் அழிவையும் சந்தித்தது. யுத்த முடிவுக்குப் பின்னர் இப் பொழுது மீண்டும் மெல்ல மெல்ல எழுச் சியடைந்து வருகிறது. ஆனால் அதை பின்னோக்கி இழுக்கும் எதிர்நிலைச் செயற்பாடுகள் இந்த முறைகேடுகளின் வழியே நடக்கின்றன. இதனால் கிளி நொச்சி மாவட்டத்தின் அடிப் படையான நீர், நிலவளமும் அதன் அமைப்பும் கெடுக்கப்படுகின்றன.**

முறைகேடுகளின் மைய மாவட்டமாக கிளிநொச்சி மாறிவிட்டது. “அப்படியென்றால் அங்கே நிர்வாகம் ஸ்தம்பித்து விட்டதா?” என்ற கேள்வி உடனடியாக உங்களுக்கு எழலாம். ஆனால் இது உண்மையே.

“அப்படியென்றால் அங்கே என்ன நடக்கிறது? பொறுப்பானவர்கள் அல்லது பொறுப்பான தரப்புகள் என்ன செய்கின்றன என்ற அடுக்கடுக்கான கேள்விகள் உங்களுக்கு வரும்.

என்ன செய்வது? இதே கேள்விகள்தான் சனங்களுக்கும் உண்டு. பதிலில்லாத கேள்விகள். அல்லது பதிலளிக்கக் கடினமான கேள்விகள்.

இவற்றுக்கான பதில்களை எவரிடமும் கேட்டறிய முடியாது. பொறுப்பான தரப்புகள் ஒரு போதுமே பதிலளிக்கப் போவதில்லை. அப்படி அவர்கள் பதிலளிப்பதாக இருந்தால் அது முறைகேடுகளைக் கட்டுப்படுத்தி நிலைமையைச் சீராக்கம் செய்வதாகவே இருக்க வேண்டும். அதாவது பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதாக இருக்க வேண்டும். பதிலாக, சப்பையான நியாயங்களை எங்கேனும் சொல்லிச் சமாளிக்க முற்படுவதோ - தப்பித்துக் கொள்ள முயற்சிப்பதோ அல்ல. ஆனால் அப்படி, சப்பை நியாயங்களைச் சொல்ல முயற்சிப்பதும் உண்மை நிலவரம் மக்களுக்குத் தெரியக் கூடாது என்று தடுப்பதிலுமே சில தரப்புகள் கடுமையாக முயற்சிக்கின்றன. இதற்காக அவை முறைகேடான முறையில் தமது அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றன.

முதலில் சிவில் மற்றும் சட்டத்துறைகளில் காணப்படும் முறைகேடுகள் என்ன என்று பார்க்கலாம்.

அரச காணிகள் சட்ட விரோதமாகப் புதிது புதிதாக அபகரிக்கப்படுகின்றன. கூடவே காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் (Land Reform Commision) பொறுப்பில் உள்ள காணிகள் இரகசியமாகச் செல்வாக்கான தரப்பினர்களுக்குக் கைமாற்றப்படுகின்றன. இது தொடர்ச்சியாகவே நடந்து கொண்டிருக்கிறது.

சட்டவிரோதமாக மணல் மற்றும் கிறவல் தொடர்ந்தும் அகழப்படுகிறது. இப்பொழுது இது ஓரளவுக்குப் பகிரங்கமாக - துணிகரமாக நடக்கிறது.

ஒப்பந்த வேலைகள் மற்றும் வழங்கல்களில் தொடரும் முறைகேடுகள். (பிரதேச சபைகளின் நிதி ஒதுக்கீடு, மாகாண சபை மற்றும் மத்திய அரசின் நிதி ஒதுக்கீடுகளில் மேற்கொள்ளப்படும் பல வேலைத் திட்டங்களில் சீரின்மையும் முறைகேடுகளும் நிலவுகின்றன).

கூட்டுறவுத்துறையில் காணப்படும் பிரச்சினைகள். (நிர்வாகக் குழப்பங்கள் அரசியல் தலையீடுகள் முதல் ஊழல் வரையில்)

காடழிப்பும் சட்ட விரோத மரம் கடத்தலும் வரவரக் கூடுகிறது.

சட்ட விரோத மது உற்பத்திகள் (கசிப்பு உற்பத்தியும் விற்பனையும்) இதுவும் அதிகரித்துக் கொண்டே உள்ளது.

விவசாய நிலங்கள் (நீர்ப்பாசன நிலங்கள்) மேடாக்கப்படுதல்.

வாய்க்கால்கள், மேய்ச்சல் நிலங்கள் அபகரிக்கப்படுதல்.

நிர்வாகப் பிரிவுகளில் காணப்படும் ஒழுங்கீனங்களும் முறைகேடான நடவடிக்கைகளும்.

இவ்வாறு நீண்ட கால அடிப்படையில் சமூகத்துக்கும் சூழலுக்கும் நிரந்தரப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய விடயங்களில் பல முறைகேடுகள் தொடருகின்றன. இந்த முறைகேடுகள் சாதாரணமானவை அல்ல. அடிப்படையான சமூகக் கட்டுமானத்தையும் சூழலையும் (நிலம் உள்ளடங்கலாக) எதிர்காலப் பொருளாதார நடவடிக்கைகளையும் பாதிப்பன. இவற்றைக் கட்டுப்படுத்தவில்லை என்றால் எதிர்காலத்தில் கிளிநொச்சி மாவட்டமே வரட்சியிலும் வளப்பற்றாக்குறையிலும் நீர்ப்பிரச்சினையிலும் சிக்கி விடும். மக்கள் தொடர்ந்தும் நெருக்கடிகளுக்குள்ளேயே வாழ வேண்டும். நெருக்கடிகளை முகம் கொடுக்க முடியாதோர் இந்த மாவட்டத்தை விட்டே வெளியேறிச் சென்று விடுவர்.

100 ஆண்டுகால வரலாற்றை மட்டுமே கொண்ட கிளிநொச்சி, பேரெழுச்சியும் புகழும் அடைந்தது. அந்தளவுக்கு அது தொடர் நெருக்கடிகளையும் அழிவையும் சந்தித்தது. யுத்த முடிவுக்குப் பின்னர் இப்பொழுது மீண்டும் மெல்ல மெல்ல எழுச்சியடைந்து வருகிறது. ஆனால் அதை பின்னோக்கி இழுக்கும் எதிர்நிலைச் செயற்பாடுகள் இந்த முறைகேடுகளின் வழியே நடக்கின்றன. இதனால் கிளிநொச்சி மாவட்டத்தின் அடிப்படையான நீர், நிலவளமும் அதன் அமைப்பும் கெடுக்கப்படுகின்றன.

இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு மாவட்டச் செயலகம், பொலிஸ் தரப்பு உட்பட சம்மந்தப்பட்ட நிறுவனங்களும் திணைக்களங்களும் பின்னிற்கின்றன. அல்லது இயலாதிருக்கின்றன. இதைப்போலவே மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லப்படுவோரும் இயலாதிருக்கின்றனர். சிலர் முறைகேடுகளோடு பங்காளிகளாகவும் முறைகேடுகளுக்கு ஆதரவாளர்களாகவும் இருக்கின்றனர். காவற்காரனே கள்வன் என்ற நிலையில். இல்லையென்றால் இவையெல்லாம் எப்படித் தொடரமுடியும்? முன்னரை விடக் கூடுதலாக நடக்க முடியும்?

இவற்றைப்பற்றியெல்லாம் தொடர்ச்சியாக ஊடகத்துறையினர் தேவையான ஆதாரங்களோடும் புள்ளிவிவரங்களோடும் செய்திகளை வெளியிட்டிருக்கிறார்கள். புலனாய்வுக் கட்டுரைகளில் தரவுகளையும் தகவல்களையும் முன்வைத்திருக்கிறார்கள்.

கிளிநொச்சி மக்கள் சிந்தனைக் களம், பிரசைகள் குழு, விவசாயிகள் அமைப்புகள், தென்னை பனை வளத்தொழிலாளர்கள், கால்நடை வளர்ப்போர் சங்கம் எனப் பல்வேறு தரப்பினரும் இந்த விடயங்களைக் குறித்துத் தொடர்ச்சியாக பொறுப்பானவர்களிடம் எடுத்துக் கூறியுள்ளனர். தமது கண்டனங்களையும் கவலைகளையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

ஆனாலும் நடவடிக்கையில் முன்னேற்றமில்லை. இதனால்தான் முறைகேடுகளில் ஈடுபடுவோர் மேலும் மேலும் அவற்றைத் தொடர்ந்து ஊக்கமுடன் செய்கிறார்கள். இது மக்களிடம் கவலையையும் சோர்வையும் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

ஏனென்றால் அவர்களுடைய கண்ணுக்கு முன்னே இவ்வளவு முறைகேடுகளும் நடக்கின்றன. இதைத் தடுப்பதற்காக யாருமில்லை என்றால் அவர்கள் கவலைப்படுவதைத் தவிர வேறு என்னதான் செய்ய முடியும்? ஆனாலும் அவ்வப்போது கிளாலி, முறிகண்டி, பளை, கிளிநொச்சி, இயக்கச்சி, தருமபுரம் என அங்கங்கே மக்கள் எதிர்ப்புப் போராட்டங்களையும் நடத்தியிருக்கிறார்கள். இருந்தும் இது கட்டுப்படா மல் பிறகும் பிறகும் முறைகேடுகளும் குற்றங்களும் நிகழுமென்றால்...!

அது மக்களிடம் கவலையையும் சோர்வையும் நம்பிக்கையீனத்தையும்தானே ஏற்படுத்தும்.

இதையெல்லாம் கவனித்துச் சீராக்கத்தைச் செய்ய வேண்டிய தரப்புகளான சிவில் நிர்வாகப் பிரிவும் சட்டம் ஒழுங்குக்குப் பொறுப்பான பொலிஸ் தரப்பும் செயலற்றிருந்தால் முறைகேடாளர்களுக்கு அது உற்சாகத்தைக் கொடுக்கும் என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்றில்லை. கூடவே அரசியல் தரப்பின் நேரடி - மறைமுக ஆதரவும் இருந்தால் இரண்டு மடங்கு ஊக்கம் வந்து விடுமல்லவா?

இந்த ஊக்கத்தினால் பச்சிலைப் பள்ளி, பூனகரி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து பெருமளவு மணல் அகழப்படுகிறது. இந்தப் பிரதேசங்களின் நில அமைப்புக் கெடும் அளவுக்கும் நீர் வளம் குன்றி உவராகும் அளவுக்கும் இது ஆபத்தான நிலையை எட்டியுள்ளது. இதைக்குறித்து பேராசிரியர்கள் பொ.பாலசுந்தரம்பிள்ளை, இரா. சிவச்சந்திரன், சத்தியசீலன் உள்ளடப் பல அறிஞர்களும் கவலையோடு எச்சரித்துள்ளனர். இதில் கனியவளத் துறையினரும் வனத்துறையினரும் சூழலியலாளர்களும் கவனம் கொள்ளாதிருப்பது மிகுந்த கவலையைத் தருவது. இதனால் இது மிகவும் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

இதைப்போலத்தான் அரச காணிகளை அபகரிக்கும் செயற்பாடுகள் தொடர்வதுமாகும். அரச காணிகள் என்பது மிகமிகக் குறைந்து விட்டன. அதுவும் முக்கியமான மையங்களில் காணிகளே இல்லை. கண்டி - யாழ்ப்பாணம் வீதியில் மிஞ்சியிருக்கின்ற சில காணிகளையும் ஆளாளுக்கு ஆட்டையைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதைக்குறித்து பல தடவை சிவில் அமைப்புகள் கவனப்படுத்தல்களைச் செய்துள்ளன. ஆனால் இந்த விடயத்தில் காணிப் பயன்பாட்டுக்குழு என்ன சிந்தனையோடு இருக்கிறது என்று கடவுளுக்கும் தெரியாது. இதைப் போல விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்ட காணிகளை மீளப் பயன்பாட்டுக்குட்படுத்துவதிலும் நிறையப் பிரச்சினைகள் உண்டு. அந்தக் காணிகளில் பலவும் சரியான பொதுப் பயன்பாட்டுக்குச் சென்றது என்றில்லை.

இப்படித்தான் மேய்ச்சல் நிலங்கள் காணாமல் போய்க்கொண்டிருப்பதுமாகும். கால் நடை விருத்தியைப் பற்றிப் பேசினால் சம அளவில் மேய்ச்சல் தரையைப் பற்றி யும் பேசவேண்டும். அதற்கான ஒதுக்கீடு களைச் செய்ய வேண்டும். ஆனால் அது வேறு, இது வேறு என்ற மாதிரியே திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. காணி இல்லாமல் காசை ஒதுக்கி என்ன பயன்? என்று மாடு வளர்ப்போரும் ஆடு வளர்ப்போரும் கேட்கிறார்கள். பதில்?

கூட்டுறவுத்துறை இங்கே மிக மோசமான அளவுக்கு நலிவடைந்திருக்கிறது. அதனை வளப்படுத்துவதற்கு ஏதுநிலைகள் உண்டு. குறிப்பாக நெல் உற்பத்தி அதிகமாக உள்ள இந்த மாவட்டம் அதனைக் கொள்வனவு செய்த Post production செய்வதன் மூலம் இதைச் சாத்தியப்படுத்தலாம். பலருக்கான வேலை வாய்ப்புகளையும் உருவாக்க முடியும். யுத்த காலத்தில் கூட அத்தனை நெருக்கடிகளின் மத்தியிலும் பெரிய அரிசி ஆலைகள் வன்னியெங்கும் இயங்கின. இன்று அவ்வளவு நெல்லும் வெளிமாவட்டங்களுக்கே கொண்டு செல்லப்படுகிறது. இதை மட்டுப்படுத்தி உள்ளூரில் மாற்று ஏற்பாடுகளைச் செய்ய முடியும்.

எல்லாவற்றுக்குமாகத்தான் கடந்த பத்து ஆண்டுக்கும் மேலாக ஒருங்கிணைப்புக் குழுக்களும் அதற்குத் தலைவர்களும் இருந்து வருகின்றனர். இவர்களும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டித் தப்ப முடியாது. பதவி என்பது அலங்காரத்துக்கு அல்ல. அதன் அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்கள் நலன்களை உருவாக்கவும் சூழலையும் வளங்களையும் பாதுகாக்கவுமே.

இங்கே (கிளிநொச்சியில்) இருந்த பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்குரிய காணிகளை கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுத்திருக்க முடியும். அதுதான் மக்கள் சேவை. அதுதான் மக்கள் நலன். ஆனால் நடந்ததோ அரசியல் செல்வாக்குடைய தரப்பினர் - மக்கள் பிரதிநிதிகளாக இருந்தோர் தமது செல்வாக்கின் வழியே அவரவர் தனியாக எடுத்துக் கொண்டதே.

இப்படித்தான் மேலும் பல பொதுச் சொத்துகளை தமது தனிப்பட்ட தேவைகளுக்கும் நலனுக்குமாக எடுத்துக் கொண்டு பொது நியாயம் பேசுகிறார்கள். இதைப் பற்றியெல்லாம் அ தொடக்கம் ஃ வரையில் மக்களுக்குத் தெரியும். அவர்களால் குமுறும் எரிமலைகளாக கொதிக்கத்தான் முடியுமே தவிர, தடுக்க முடியுமா? இதைப் பற்றி ஆளுநர் தொடக்கம் அரசாங்கத்தின் உயர் மட்டங்கள் வரையில் எடுத்துச் சொல்லியும் ஒன்றுமே நடக்கவில்லை.

இதே பத்தியில் கூட கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையம், மத்திய விளையாட்டு மைதானம், மாகாணசபையினால் மேற்கொள்ளப்பட்ட பல கட்டுமானங்கள் உட்பட பலவற்றின் குறைபாடுகளைப் பற்றியும் அவற்றில் உள்ள முறைகேடுகளைப் பற்றியும் பல தடவை எழுதியாச்சு. ஆனால் என்ன மாற்றம் நடந்தது? என்ன மாற்றம் நடக்கும்? அப்படி நடக்குமானால் அதை யாரும் முன்வந்து உத்தரவாதப்படுத்தலாம்.

கடந்த மூன்று தடவையாக கிளிநொச்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினராகத் தொடர்ச்சியாக இருக்கிறார் சிவஞானம் சிறிதரன். அவர் கிளிநொச்சியில் அபிவிருத்தி எதையும் செய்ய முடியாது போனாலும் பரவாயில்லை. இந்த முறைகேடுகளைக் கட்டுப்படுத்தினாலே போதும்.

வேலியே பயிரை மேய்ந்தால் எப்படியிருக்கும்? என்று நீங்கள் கேட்பது புரிகிறது. அப்படியான வேலிகளைத்தானே நாமும் நம்பியிருக்கிறோம். நம்பிக் கெட்டுக் கொண்டிருக்கிறோம். ■

# பயிற்சியும் பற்றின்மையும்

## பதஞ்சலி யோக சூத்திரத் தொடர்

நாம் ஒப்பற்ற மனிதப் பிறப்பெடுத்தது, சாதாரணமாய் கடந்து போய் விடுவதற்காகவா? பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் வரும் இன்ப, துன்பங்கள் போன்ற இருமைகளில் வாழ்ந்து ஆழ்மன கர்மவினைப் பதிவுகளோடு அடுத்த பிறப்பிற்கான கடவுச்சீட்டா இப்பிறப்பு? ஓயாது கரைமோதும் எண்ண அலைகள் அல்ல நாம், அமைதியான ஆழ்கடலென தன்னையுணர்ந்து தெளிந்து, நாம் பிறப்பதுவுமில்லை, இறப்பதுவுமில்லை எனும் சாகாக்கல்வியில் ஞானம் பெற்று வாழும் ஆனந்த வாழ்வு நம்முடையது.

இத்தகைய சாகாக்கல்வியைத் திருக்குறள், திருமந்திரம், திருவருட்பா, பதஞ்சலி யோக சூத்திரம் போன்ற எண்ணற்ற சித்தர் நூல்கள் நமக்கு வழங்கியுள்ளதோடு, எமக்கு வழிகாட்டச் சூட்சும வடிவில் தயாராகவும் இருக்கிறார்கள். இதனைப் பல பாடல்களில் சித்தர்கள் கூறியிருக்கிறார்கள்.

மனதின் விருத்திகள் ஐந்தென்றும், அவை உண்மை அறிவு, பொய்யான அறிவு, கற்பனை அல்லது ஒன்றை வேறொன்றாக நினைப்பது, தூக்கம் மற்றும் நினைவுகள் என்று கடந்த கட்டுரையில் பார்த்தோம்.

12 ஆவது சூத்திரமானது மனவிருத்திகளை எவ்வாறு நிறுத்துவது பற்றிய சூத்திரங்களில் முதலாவதும் முக்கியமானதுமாகும். இதனைத் தமிழில்,

'பயிற்சியாலும் பற்றின்மையாலும் அவற்றை (மனதின் விருத்திகளை) அடக்கலாம்.' - 1.12

சாதாரணமாக எமது மனத்தைக் கடந்து செல்கின்ற ஒவ்வொரு எண்ண விருத்தியும் விட்டுச் செல்கின்ற விளைவை சம்ஸ்காரம் என்பர். இதிலிருந்து உருவாகுவதே நம் குணம். அந்த விளைவால் எமது பழக்கங்கள் ஏற்படுகின்றன. விழிப்புணர்வற்ற நிலையில் ஏற்பட்டு விட்ட தீய பழக்கங்களை, விழிப்புணர்வுடன் கூடிய செயல்களினால் நல்ல பழக்கங்களாக நம்மால் மாற்றிக் கொள்ள முடியும் என்பது நல்ல செய்தியாகும்.

பற்றின்மை என்பதை வாழ்வில் ஈடுபாடற்ற, விரக்தியான என்ற பொருளில் அர்த்தப்படுத்திக் கொள்ளக் கூடாது. உண்மையில் ஆசை, பற்று என்று ஏதோ ஒரு பலனை எதிர்பார்த்துச் செய்யும் செயலோ, எண்ணமோ நிறைவேறாமல் போகும் போது தான் துன்பம், ஏமாற்றம் போன்ற மனநிலைகளில் கொண்டு போய் விடுகிறது. பற்றின்மை என்பது சமூகத்துடனான எமது வாழ்வின் தொடர்புகளைத் துண்டித்துக் கொள்வதல்ல, மாறாக அந்த வாழ்வின் கைதியாக நம்மைப் பிணைக்க முனையும்

உணர்வுகளில் இருந்து நம்மை வேறுபடுத்திக் கொள்வதே. செயலின் பயனில் தங்கியிருக்காதே என்ற பொருளில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு செயலை விழிப்புணர்வுடனும், பகுத்தறிவுடனும், நடுநிலைமையுடனும், செயலின் விளைவைப் பற்றிய எண்ணமற்ற நிலையில் செயற்படுவது பற்றின்மை என்றாகிறது. இதுவே உண்மையான அன்பு நிலை. எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி, மனதில் விருத்திகள் இன்றி ஏற்படும் அன்பென்ற அனுபவம். தன் போலியான சுயத்தை இழந்து, உண்மையான சுயமாக, ஆன்மார்த்தமாகச் செயற்படுவது. இன்ப துன்பங்கள், விருப்புவெறுப்புக்கள் போன்ற இருமைகளில் சிக்கிக் கொள்ளாதிருப்பது நடுநிலைமை என்றாகிறது. 'கடமையைச் செய், பலனை எதிர்பார்க்காதே' என்ற கீதை வசனமும், 'செயலைத் துறத்தலை விட, செயலில் துறத்தல் மேலானது' போன்ற வரிகள் பற்றின்மை பற்றி விளங்கிக் கொள்ள உதவும். இவ்வாறு செயற்படும் போது நல்வினை, தீவினை என்ற இருவினைப் பதிவுகளில் இருந்தும் நழுவி விடுகிறோம். நடுவுநிலைமை பற்றிய திருமந்திரப் பாடல் ஒன்றை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது.

நடுவு நின்றார்க்கு அன்றி ஞானமும் இல்லை
நடுவு நின்றார்க்கு நரகமும் இல்லை
நடுவு நின்றார் நல்ல தேவரும் ஆவர்
நடுவு நின்றார் வழி யானும் நின்றேனே.

இங்கு நடுவு நிற்றல் என்பதற்கு இருமைகளில் சிக்கிக் கொள்ளாது இருத்தல் என்று பொருள் கொள்பவர்களும் உண்டு. இடகலை, பிங்கலை நாடிகளில் ஓடும் பிராண சக்தி யோகியருக்கு நடுநாடியான சுழுமுனையில் ஓடுவதைப் குறிப்பிட்டுக் கூறுவதாகவும் கொள்ளலாம். மேலும் ஞானமும் அருளும் பெற்ற அடியார்களிடையே நிற்றல் என்பதாகவும் சிலர் பொருள் கொள்வர். மொத்தத்தில் பற்றின்மையானது இவையனைத்தையும் சாத்தியமாக்கும் என்பதே உண்மையாகும்.

இங்கு பதஞ்சலி முனிவர் குறிப்பிடும் பயிற்சி என்பது தொடர்ச்சியாக நமது மனவிருத்திகளை நிறுத்துவதற்கான முயற்சியாகும். மனதில் ஒரு அலை எழும் போது அதன் நன்மை, தீமைகளை ஆராய்ந்து, சாட்சி நிலையில் நின்று (ஆழ்மனப் பதிவுகளினால் வரும் ஆணவத்துடன் கூடிய எமது போலித்தனமான அடையாளத்தினால் முடிவுகளை, விருத்திகளை ஏற்படுத்தாமல்) செயற்பட வேண்டும்.

மனதை அவதானித்தல், ஆணவத்தின் குரலுக்கும் உண்மையான நிலைக்கும் இடையிலான வித்தியாசத்தை உணருதல், நிச்சயமற்ற தன்மையை உணர்ந்து சரியான முடிவுக்கு வர தியானித்தல் எனும் பயிற்சிகள் மன அலைகளை அடக்க உதவும். எனினும் மீண்டும் மீண்டும் பழைய ஆணவமல நிலைக்குத் திரும்பும் நிலை ஏற்படவே செய்யும். 'அடைய வேண்டிய இலட்சியத்தில் உறுதியுடன் நீண்டகாலமாக முயற்சி செய்தால் நிச்சயமாக தன்னுணர்வில் நிலைபெறலாம்' என்கிறார் இன்னொரு சூத்திரத்தில்.

எமது ஆசைகள், அதனால் எழும் பயம், வெறுப்பு, மனசஞ்சலம் காரணமாகப் போலித்தனமான ஒரு அடையாளத்துடன் சமூகத்தில் புறவயமாக நடமாடுகின்றோம். பதஞ்சலி முனிவர் கூறும் பயிற்சி மற்றும் பற்றின்மை காரணமாக மனதில் ஏற்படும் அமைதி, தெளிவு, தூய்மை நாம் சரியான பாதையில் பயணிக்கின்றோம் என்பதை உறுதிப்படுத்தும். இந்நிலையில் செய்யப்படும் தியானமானது நம்மை ஆழ்நிலைக்கு இட்டுச் சென்று நம் சுயத்தில் பிரகாசிக்க வழிசமைக்கிறது.

இயற்கையானது மூன்று குணங்களின் சேர்க்கையால் ஆனது. தன்னை உணரமுன் மனிதனும் இக்குணங்களின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருக்கிறான். அவையாவன வீரம், முயற்சி, புகழ் என பல்வேறு செயற்பாடுகளின் மூலம் அறியப்படும் இராஜச குணம், எதிர்மறை எண்ணங்களுடனும் செயல்களுடனும் கூடிய தாமச குணம், நல்ல செயல்களும் நேர்மறை எண்ணங்களுடனும் கூடிய சாத்வீக குணம். இந்த முக்குணப் பண்புகளிலும் கூட பற்றற்று இருக்கும் தீவிர நிலையானது, எமது ஆன்ம உணர்வில் நிலைத்திருக்கும் (Self-realization) போது ஏற்படுகிறது.

அடுத்த சூத்திரத்தில் சமாதி பற்றிய குறிப்புகள் தொடங்குகின்றன. ஒரு பொருளில் அல்லது மந்திரத்தில் மனதைக் குவிக்கும் பயிற்சி தாரணை எனப்படும். இந்நிலை தொடர்ந்து நம்மை ஆழ்நிலைக்கு இட்டுச் செல்லும் பொது தியானமாகிறது. தன்னுணர்வு நிலை, பிரபஞ்ச ஆற்றலுடன் சங்கமிக்கும் நிலையை சமாதி என்று அழைப்பார்கள் அல்லது ஜீவாத்மா, பரமாத்மாவுடன் இணைவது. சமாதி நிலை என்பதை சொற்களில் விபரிப்பது பலருக்கும் கடினமான காரியமாகவே இருந்திருக்கிறது.



ஒரு வகுப்பில் இருக்கும் மாணவர்களை பெறுபேறுகளின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கி தரம் பிரிப்பது போல, சமாதியிலும் பல வகைகளைக் கூறுகிறார் பதஞ்சலி முனிவர். உணர்வுடன் கூடிய சமாதி (சம்ப்ரஜ்ஞாத சமாதி), உணர்வுகளைக் கடந்தது (அசம்ப்ரஜ்ஞாத சமாதி) என இரு முக்கிய பிரிவுகள் உள்ளன.

ஆராய்ச்சி, விவேகம், ஆனந்தத்தைத் தொடர்ந்து தன்னுணர்வில் நிலைத்திருக்கும் பொது உணர்வுடன் கூடிய சமாதி கைகூடுகிறது. இதனை சவிகல்ப சமாதி என்று கூறுவர். இந்த சமாதி நிலையில் குறுகிய நேரத்துக்கு எமது மனித உணர்வுநிலையை இழந்து விடுகிறோம். காலம், இடம் பற்றிய கருத்து நிலையை இழந்து இன்னோர் உலகில் சஞ்சரிக்கிறோம். எமக்கு ஆயிரம் பிரச்சினைகள் இருந்தாலும், இந்த சமாதி நிலையில் இருக்கும் போது எல்லாமே முடிந்தது போன்ற உணர்வுநிலை இருக்கும். எனினும் சவிகல்ப சமாதி நிலையில் இருந்து சகலரும் சாதாரண உணர்வு நிலைக்குத் திரும்பியாக வேண்டும். இதுவொரு ஆரம்ப கட்ட சமாதி நிலையாகும். எண்ணங்களும் கருத்துக்களும் இச்சமாதி நிலையில் வந்தாலும் அவை எம்மைப் பாதிப்பதில்லை. எமது உள்ளுணர்வானது எந்த வகையிலும் கலங்காத உறுதியுடன் செயற்படும். இதனிலும் மேலான நிர்விகல்ப சமாதி நிலையிலேயே எண்ணங்கள் நீங்கி எம் சுய தன்னுணர்வில் பிரகாசிக்கிறோம்.

உயர் சமாதி நிலைகளை எய்திய யோகியரின் வல்லமையை சுவாமி விவேகானந்தரின் வரிகளில் பார்ப்போம். 'உணர்வுகளைக் கடந்த சமாதி நிலையை அடைந்த ஒரு ஆன்மா, நன்மை தீமைகளுக்குக் கட்டுப்படாததாக, எங்கும் நிறைந்ததாக, எல்லாம் வல்லதாக, எல்லாம் அறிந்ததாகிறது. அப்போது மனிதன் தனக்கு பிறப்பிறப்பு இல்லை, விண், மண்ணுலகு எதுவும் வேண்டியதில்லை, பிறந்ததும் இல்லை, இறப்பதும் இல்லை, எல்லாம் இயற்கையின் விளையாட்டு, அது ஆன்மாவில் பிரதிபலித்தது என்பதை அறிகிறான். அந்த சுதந்திர ஆன்மா கட்டளையிடும் போது, ஆம் அது பிரார்த்திக்க வேண்டியதில்லை, கெஞ்ச வேண்டியதில்லை, கட்டளையிடும் அடுத்த கணமே அதன் விருப்பங்கள் நிறைவேற்றப்படுகின்றன. நினைத்ததை எல்லாம் அதனால் செய்ய முடியும். ■

**முரளீதரன் நவரத்தினம்**
MSC in Yoga (அண்ணாமலைப் பல்கலைக்கழக கனடா வளாகம்)

## "ஆக்கஸ் பாதுகாப்பு ஒப்பந்தம்" ஐரோப்பிய - அமெரிக்க முரண்பாட்டை அதிகரித்துள்ளது?

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தக மற்றும் தொழில்நுட்பக் கவுன்சிலின் முதல் கூட்டம் பிட்ஸ்பர்க்கில் செப்ரெம்பர் 29 ஆம் திகதி திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் இராஜதந்திர நெருக்கடியால் ஐரோப்பிய ஒன்றியம் கூட்டத்தை முழுவதுமாக ரத்து செய்யலாம் என்று ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் பாலிடிகோ (Politico) செய்தித் தளத்திற்குத் தெரிவித்துள்ளனர்.

இரண்டு, உலக ஆதிக்கத்தில் நெருக்கமான நட்பு நாடுகளாய் காணப்பட்ட இரு நாடுகளின் அரசியல் உறவில் பெரும் விரிசல் நிலை ஏற்பட்டுள்ளது. பிரான்ஸ் அமெரிக்காவிற்கான தனது தூதுவரை மீள அழைத்தமை உச்சபட்ச அமெரிக்காவுடனான பகைமையை வெளிப்படுத்தும் செயலாகவே காணப்படுகிறது. இரண்டு நூற்றாண்டைக் கடந்த பிரான்ஸ்-அமெரிக்க உறவில் முதன்முறையாக பிரான்ஸ் தனது தூதரை மீளழைத்துள்ளது. மற்றும் 'முதுகில் குத்தியுள்ளது' 'துரோகம்' எனும் சொல்லாடல்கள் அரசியல் உரையாடலில் கணதியான பெறுமதிகளைக் கொண்டதாகும். இந்நிலையில் பிரான்சின் வெளிவிவகார அமைச்சர் அமெரிக்காவைச் சுட்டி, குறித்த சொல்லாடல்களைப் பிரயோகித்துள்ளமையானது அமெரிக்க-பிரான்சின் பிளவின் உறுதிப்பாட்டையே வெளிப்படுத்துகிறது.

மூன்று, ஐரோப்பிய ஒன்றியம் தனித்து பாதுகாப்புப் படை ஒன்றை உருவாக்கும் எண்ணங்களையும் அதிகரித்துள்ளது. இராணுவ நடவடிக்கைக்காக ஐரோப்பிய ஒன்றியம் வரலாற்று ரீதியாகவே அமெரிக்கா தலைமையிலான நேட்டோ கூட்டணியையே நம்பியுள்ளது. ஆப்கானிஸ்தான் அரசாங்கத்தின் விரைவான சரிவு ஐரோப்பிய ஒன்றியத்தின் சொந்த பாதுகாப்புக் கொள்கையை இயக்கும் திறன் பற்றிய கேள்விகளை எழுப்பியுள்ளது. இதன்விளைவாகக் கடந்த செப்ரெம்பர்-15 அன்று நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவரின் வருடாந்த உரையில் வான் டெர் லேயன், "பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் உலகளாவிய நெருக்கடிகளை எதிர்கொள்ள ஐரோப்பிய ஒன்றியம் தனது இராணுவத் திறன்களைப் பலப்படுத்த முயலவேண்டும். ஆப்கானிஸ்தான் வெளியேறிய பிறகு, ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அமெரிக்கத் தலைமையிலான நேட்டோ இல்லாமல் இராணுவ ரீதியாகத் தலையிட அரசியல் விருப்பம் தேவைப்பட்டது. பிரான்ஸ் அடுத்த ஆண்டு ஐரோப்பிய ஒன்றியப் பாதுகாப்பு உச்சிமாநாட்டை நடத்தும்" என்றும் தெரிவித்துள்ளார். இந்நிலையில் தற்போது அமெரிக்காவுடன் ஏற்பட்டுள்ள நெருக்கடி ஐரோப்பிய ஒன்றியத்துக்கான பாதுகாப்புப் படையை தீவிரப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, அமெரிக்கா - ஐரோப்பிய ஒன்றிய உறவில் பெரும் நெருக்கடியை ஆக்கஸ் பாதுகாப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளது என்பது தெளிவாகிறது. எனினும் இந்நெருக்கடியை அமெரிக்கா வரவேற்காத போதிலும் ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து விலகிச்செல்லும் வெளியுறவுக்கொள்கை அமெரிக்காவின் எதிர்பார்ப்பாகவே காணப்படுகிறது. பனிப்போரில் ரஷ்சியாவைக் கட்டுப்படுத்துவதற்கும், பனிப்போருக்குப் பின்னரான ஒற்றைமைய அரசியலில் அரபு வசந்தத்தைக் கட்டுப்படுத்தவும் அரவணைக்கப்பட்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் தேவைப்பாட்டை அமெரிக்கா சீனாவை எதிர்கொள்ள எதிர்பார்க்கவில்லை. சீனாவை கையாள இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் புதிய கூட்டுக்கான அடித்தளத்தை அமெரிக்கா திட்டமிடுகிறது. அதனோர் சான்றே ஆக்கஸ் பாதுகாப்பு ஒப்பந்தமும் ஐரோப்பிய ஒன்றிய நிராகரிப்புமாகும். அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை கோமாளியாக நளினம் செய்தாலும் அமெரிக்காவின் தற்போதைய இயலுமையையே ட்ரம்ப் வெளிப்படுத்தியிருந்தார் என்பது அமெரிக்க புதிய ஜனாதிபதி பைடனின் நிர்வாகச் செயற்பாடுகளின் விளைவுகளிலிருந்து விளங்கிக்கொள்ள முடிகிறது. ■



# அன்பு வழி

க.சட்டநாதன்

நல்லூர்க் கோவில் பக்கமாக அவன் மிதந்தான். அவன் பாடசாலைக்குப் போய்ப் பல நாட்களாகி விட்டது. தான் படிக்காவிட்டாலும், தளிரனைய தனது தங்கை இளவரசியாவது படிக்க வேணும் என்ற துடிப்பு அவனுக்கு இருந்தது.

அவனது உழைப்பில்தான் தமையனும் தங்கையும் வயிற்றைக் கழுவிக் கொள்கிறார்கள். நாள் முழுவதும் அவன் ஓடி ஓடி உழைத்தாலும் அரையும் குறையுமாகத் தான் அவர்கள் வாழ்க்கை நகர்கிறது. அவன் செய்யும் வேலை ஒன்றல்ல, பலதாகும், கல்வியன்காட்டு மரக்கறிச் சந்தையில் மரக்கறி விப்பான். சில சமயம் பழங்களும் விற்பதுண்டு. கிழமை நாட்களில், காலை நேரங்களில் கற்பூரம் விற்பான். சில வேளைகளில் அவன் பலூன் விற்பனை செய்வதுமுண்டு. பாடசாலை வரை தங்கையை அழைத்துப் போவதும் அழைத்து வருவதும் அவனது வேலைதான். அவன் கற்றல் வேலைகளில் ஈடுபடுவதைப் பெரிய அளவில் கவனித்துக் கொள்வது அவனது கருமம்தான்.

இளைய பொடியனாக இருந்தபோதும் அவனது ஆர்வங்கள் பலதரத்தன. பணம் பண்ணுவதற்கான அவனது அன்றாட வேலைகளைத் தவிர்த்துத் தனது புலன்களைக் கட்டில்லாமல் வழிய விட்டான். படிப்பில் விண்ணனான் தனது தங்கையின் அக்கறையால், படிப்பதை இடைநடுவில் விட்டு விட்டான். பல ஆர்வங்களை மனதளவில் பொதித்து வைத்திருந்த அவன் தனது ஓய்வு நேரங்களில் அவற்றை விருப்புடன் கற்பதிலும் கைக்கொள்வதிலும் நாட்டமுடையவனாக இருந்தான்.

அவனுக்குப் பாடுவதற்கு வரும் தேவார திருவாசகங்களைக் கற்கும் அவன், திருவாசகத்தின் பால் அளப்பரிய ஈர்ப்புக் கொண்டிருந்தான். அவனுக்கு மாணிக்கவாசகத்தில் “உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்” எனும் திருவாசகப்பாடலில் அளப்பரிய காதல் உண்டு. அதனை அவன் திரும்பத் திரும்ப குரல் உயர்த்திப் பாடுவான்.

திருவாசகத்தில் மட்டுமல்ல ஆண்டாளின் திருவெம்பாவையிலும் திருப்பாவையிலும் அவனுக்கு அதிகக் கவனம் உண்டு. திருவெம்பாவையில் “தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய தூபம் கமழச் துயிலணை மேல் வளரும் மாமன் மகளே!” என்ற பாசுரத்திலும் அவனுக்கு ஆர்வம் உண்டு. அதனை அவன் குரலினிமை பிளிற்ற அருமையாகப் பாடுவான்.

பாரதி பாடலிலும் அவனுக்குக் கவனம் உண்டு. “சுட்டும் விழிச் சுடர்தான், சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா! “அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே” எனும் பாடல்களைத் தாள லயத்துடன் லகரி குன்றாது பாடுவான்.

இவை தவிர சினிமாப் பாடல்களிலும் அவனுக்கு ஆர்வம் உண்டு. மென் பந்துக் கிரிக்கட், கால்ப்பந்து, கபடி என்று அவனது விளையாட்டுக்கள் பலதரத்தனவாகும்.

இவை தவிர அவன் இயற்கையையும் சூழலையும் ரசிப்பதிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் நடந்து கொண்டான். அவன் செம்மணி வெளியில் அலைவதை எப்பொழுதும் பார்க்கலாம். அவன் முயற்சி எல்லாம் காட்டுச் செவ்வந்திச் செடிகளின் கீழ் கூடு கட்டி வாழும் சப்பட்டைக் குருவிகளின் முட்டைகளையும் இறக்கை முளைக்காத குஞ்சுகளையும் பார்ப்பதில்தான் கழியும். வெளியில் உள்ள மரங்களில் மணிப் புறாக் கூடுகளையும்

“இளைய பொடியனாக இருந்தபோதும் அவனது ஆர்வங்கள் பலதரத்தன. பணம் பண்ணுவதற்கான அவனது அன்றாட வேலைகளைத் தவிர்த்துத் தனது புலன்களைக் கட்டில்லாமல் வழிய விட்டான். படிப்பில் விண்ணனான தனது தங்கையின் அக்கறைகயால், படிப்பதை இடைநடுவில் விட்டு விட்டான். பல ஆர்வங்களை மனதளவில் பொதித்து வைத்திருந்த அவன் தனது ஓய்வு நேரங்களில் அவற்றை விருப்புடன் கற்பதிலும் கைக்கொள் வதிலும் நாட்டமுடையவனாக இருந்தான்.”

அவன் தவற விடுவதில்லை. மரத்தில் தொத்திப் புறாக்களின் வெள்ளை வெளேரென்ற முட்டைகளைத் தொட்டணைத்து ரசிப்பான். சில கூடுகளில் தோழிகளாய்க் குஞ்சுகளையும் பார்ப்பான்.

இன்னும் அவன் ஆர்வத்துடன் பார்ப்பதெல்லாம் வாலாட்டிக் குருவியின் குஞ்சுகளைத்தான். சிறு வெட்டில் திரும்பியவனுக்கு ஆச்சரியம் தாளவில்லை. அவன் முன்பாக வாலாட்டிக் குருவி, அத்துடன் ஒரு சிறிய குஞ்சு. அது கோழிக் குஞ்சு போல - ஆளில் சற்றுச் சிறிய உருவ அமைப்புக் கொண்டிருந்தது. சாம்பலும் வெண்மையும் கலந்த நிறம், ஒரு வினாடி அக்குருவியையும் குஞ்சையும் வைத்தகண் அகற்றாமல் பார்த்தான். அடுத்த வினாடிகளில் அவற்றை நெருங்கினான். இதனைக் கண்டதும் அது பயத்துடன் விர்ரென்று பயந்து போய் அடுத்த வயல்வரம்பின் எல்லைக் கல்லின் மீது உட்கார்ந்து கொண்டது. அபாயக் குரலில் அரற்றியது. ஆனால், அந்தக் குஞ்சுகள் அதிர்ச்சிக்குள்ளாகிய நிலையில் ஒரு கணம் அசையாமல் நின்றது. பின்னர் அங்குமிங்கும் கலைந்து ஓடியது.

மின்னல் வெட்டும் நேரம்தான்! அதற்குள்ளாக அது எங்கோ மாயமாய் மறைந்து விட்டது. ஆச்சரியமுற்று நிமிர்ந்தவன் ஒரு சிறு புதரின் பக்கத்தில் அது விழுந்து கிடப்பதைக்கண்டு, அதை நெருங்கிச் சென்று கரங்களில் எடுத்துப் பார்த்தான். அசையவில்லை. அது ஜடப்பொருளாய்த் தவமியற்றியது.

‘உண்மையில் இது இறந்து விட்டதா?’ அவனது மனம் பரிதவித்தது. கண்களில் அதனை ஒற்றி, உடலைத் தழுவி ஆசுவாசப்படுத்தியவன் மீண்டும் அதை அந்தப் புதரின் அடியில் கிடத்தி விட்டு சற்றுத் தூரத்தே நின்று பார்த்தான்.

சில வினாடிகளில் அந்தக் குஞ்சு உடல் சிலிர்த்து எழுந்து பெரிசை நோக்கி ஓடியது. அந்த அற்புதத்தில் ஒரு கணம் லயித்தவன், மீண்டும் கைகளைக் கொட்டி ஆரவாரப் பெருங்குரலில் ‘சூய்... சூய்’ என்று கூச்சலிட்டு அதனைத் துரத்தினான். அது மீண்டும் ஒரு உழவு காரனின் மடிப்பில் மரணித்து வித்தை காட்டியது.

உயிர்ப்பும் இறப்பும் ஒரே சமயத்தில்! அவனுக்கு அது வேடிக்கையான அனுபவம். அந்த அனுபவத்தின் அடியாக இழையும் ஒரு வகையுணர்வு அவனை ஆட்கொண்டு விடுகிறது. ‘ஓ...’ இத்தினோண்டு குஞ்சு... அது... என்னமாதிரித் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுது...’

இந்த ரசனை உணர்வு அவனை எப்பொழுதும் ஆக்கிரமித்தபடியே இருந்தது.

இவை யாவற்றிலும் ஈடுபாடு அவனுக்கு இருந்த போதும், தங்கையின் பராமரிப்புக்கும், கவனிப்புக்கும் அடுத்ததுதான் இவையெல்லாம்.

இவற்றுடன் அவனுக்கு அப்பாவிலும் அம்மாவிலும் அளவுக்கு மீறிய மரியாதையும் அன்பும் உண்டு. அவர்கள் இருவரும் மரணித்து விட்டாலும் அவர்களது நினைவை மிகுந்த பரிவுடனும் மனக்கசிவுடனும் சுமந்து திரிந்தான்.

அவர்கள் உயிர் வாழ்ந்திருந்தால் அவன் கல்வி கற்றிருக்க முடியும். அவன் அவர்கள் இறந்த பின்னர் தனது படிப்பைத் தொடர முடியாமல் தவித்தான். அவன் படித்ததென்னவோ ஏழாம் வகுப்புத்தான். இருப்பினும், அவனது அறிவு, அனுபவத்தால் புடம் போடப்பட்டவொன்றாகும். மிகவும் சுதந்திரமாக வாழ்ந்த அவனுக்கு அவனது சுதந்திரம் தடைப்பட்டுப் போனதென்னவோ பெற்றவர்களின் மரணத்தின் பின்புதான்.

சுதந்திரம் பறிபோய் விட்டதே என்ற கவலை அவனைப் பெரிதும் பாதிக்கவில்லை. அவனது வாழ்க்கையை நிதானப்படுத்தியதென்னவோ அன்று மலர்ந்த மலரின் வாசம் சொரியும் அவனது சோதரிதான்.

அவனது தங்கை ஐந்தாம் வகுப்புத்தான் படித்தாள். அவள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைய வேணும் என்பதில் அவன் மிகுந்த கவனம் கொண்டான். அவள் அப்பரீட்சையில் சித்தியடைந்தால்தான் அவள் சிறப்பான பெண்கள் பாடசாலையில் சேர முடியும். அவள் அப்பரீட்சையில் சித்தியடைய வேண்டிய நூல்களையும் பயிற்சிப் புத்தகங்களையும் வாங்கிக் கொடுப்பதில் அவன் பின் நிற்கவில்லை. அவர்களது உறவினரும் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் கற்பிக்கும் பத்மாவதி ஆசிரியையிடம் அவள் கற்பதை உறுதி செய்தான். அவளது புத்திக் கூர்மையைக் கண்ட ஆசிரியையும் தன்னாலான உதவிகளைச் செய்தார். அவள் செங்குந்தா இந்துக் கல்லூரியில் கல்வி கற்று பரீட்சையில் அதிக புள்ளிகள் - தொண்ணீற்றி இரண்டு - எடுத்து சித்தியடைந்தாள்.

அவளுக்கு, அவள் விரும்பிய பெண்கள் பாடசாலையான வேம்படி மகளிர் கல்லூரியில் இடம் கிடைத்தது. அவளுக்கு வேண்டிய யூனிபோர்ம்களை பவளம் அன்ரியிடம் தந்து தைத்துத் தந்தான். பாடசாலை கழுத்துப்பட்டி, மஞ்சள் ரிப்பன் ஆகியனவும் அவளிடம் இருந்தன. ‘என்னை எவ்வளவு கஷ்டப்பட்டு இந்தப் புது ரெனிஸ் சப்பாத்துக்களை வாங்கித் தந்திருப்பான்.

நினைவுகள் தடுமாற, கண்களில் நீர் மல்க, அண்ணனை அணைத்தபடி ஒரு நிமிஷம் நின்றவள், அவன் உடன் வர பஸ் ஏறி பாடசாலை வரை சென்றாள்.

அந்த அன்பு நெஞ்சங்கள் பரிதவித்தன. ‘இவள் படித்துச் சிறப்பாக வருவாள்’ என அவன் நினைத்துக் கொண்டான். மனசு, லேசான உவகை உணர்வுடன் நிமிர்ந்தது.

■

# அறிந்தேன்... பகிர்ந்தேன்...

வியாக்ரன்




Swiss Smile என்ற நிறுவனம் தயாரிக்கின்ற பற்பசையில் தங்கம் உள்ளடங்கியுள்ளது. 75 ml பற்பசையில் 20 மில்லிக்கிராம் தங்கம் கலந்துள்ளது. இதன் பெறுமதி 145 டொலராகும். இயங்கலை (Online) வணிகம் பரவலாகி வரும் சூழலில் இலங்கை நாட்டவரும் இத்தகைய பற்பசையினைக் கொள்வனவு செய்து "தங்கப் புன்னகை" பெற விரும்புவது குறிப்பிடத்தக்கது.

ஈழத்தின் மிகச்சிறந்த மெல்லிசைப் பாடகிகளில் ஒருவராக ஜெயபாரதி கௌசிகன் அமைந்துள்ளார். 1993 இல் "கருணைக்கடலே கருணையுருவே" என்ற பக்திப் பாடலோடு தனது பயணத்தைத் தொடங்கி ஐந்நூறு பாடல்களுக்கு மேலே பாடியுள்ளார். "சலங்கை ஒலி எங்கும்" "அழகான முருகனிடம்" " நுரைப் பூக்கள் அலை சூடும்" போன்ற பல பாடல்களைத் தனது இனிய குரலால் அழகூட்டியுள்ளார். தென்னிந்தியப் பாடகர்களோடு இணைந்து உருவாக்கிய "கருணை அழகே கௌரியம்மா" இறுவெட்டில் ஜெயபாரதி கௌசிகன் பாடிய "வேப்பிலையின் பச்சையமே" என்ற பாடல் தனித்துத் தெரிவதிலிருந்து அவரது ஆளுமையினைப் புரிந்து கொள்ள முடியும்.



Attitude என்ற ஆங்கில வார்த்தையின் எழுத்தமைவினை ஆங்கில அகர வரிசைப்படி கணித்தால் A-1, T-20, T-20, I-9, T-20, U-21, D-4, E-5 என அமைந்து கூட்டுத்தொகை 100 ஆகிறது. ஒருவரின் நடத்தை நூறு வீதம் தூய்மையாக இருத்தல் வேண்டும் என்பதையே இக் கூட்டுத்தொகை உணர்த்துகின்றது.

சுந்தரக் கவிராஜர் வித்துவத் தன்மையோடு "மரம்" என்ற சொல் பன்முகப் பொருள் தரும் வகையிலே பின் வரும் பாடலை எழுதியுள்ளார்.

மரமது மரத்தில் ஏறி
மரமதைத் தோளில் வைத்து
மரமது மரத்தைக் கண்டு
மரத்தினால் மரத்தைக் குத்தி
மரமது வழியே சென்று
வளமனைக்கு ஏகும் போது
மரமது கண்ட மாதர்
மரமுடன் மரம் எடுத்தார்


அரசன் (அரசு) ஒருவன் குதிரையில் (மா) ஏறி வேலை (வேல்) தோளில் வைத்துச் சென்றான். அரசன் வேங்கையைக் கண்டு வேலால் வேங்கையைக் குத்திக் கொன்று காட்டின் வழியே சென்று வளம் மிகுந்த அரண்மனையைச் சென்றடைய அரசனைக் கண்ட பெண்கள் (ஆல் +அத்தி) ஆலத்தி எடுத்தனர் என்பதே அப்பாடலின் பொருளாகும்.

ஏதேனும் இரு இயல் எண்களுக்குள் உள்ள விகிதம் அவ்விரண்டு எண்களின் கூடுதலுக்கும் அவற்றுள் பெரிய எண்ணுக்கும் உள்ள விகிதத்துக்குச் சமமாக இருப்பது பொன் விகிதம் எனப்படுகிறது. Ø இன் மதிப்பு 1.6180339... என விகிதமுறா எண்ணாகவே அமைகிறது. ஃபிபோனாச்சி எண் தொடருடன் (Fibonacci Number Sequence) நெருங்கிய தொடர்பினை உடையது. 0, 1, 1, 2, 3, 5, 8, 13, 21 எனத் தொடரும் எண் வரிசையே ஃபிபோனாச்சி எண் தொடர் எனப்படும். இதில் தொடர்ச்சியாக அமையும் இரு எண்ணின் தொகையில் அடுத்த எண் அமையும் (0+1=1, 1+1=2, 1+2=3 …….) ஃபிபோனாச்சி எண் அளவீட்டினை செவ்வகம் ஒன்றில் வடிவமைத்தால் சுருள் வடிவொன்றினை அடைவோம். கணிதத்தில் மட்டுமல்ல இயற்கையில், ஓவியத்தில் கட்டடக்கலையில் கூட பொன்விகிதத்தைக் காண முடியும். சூரியகாந்திப்பூவின் விதைகளின் அமைப்பு, புயற்சுழற்சி, சங்கு, டாவின்சியின் ஓவியங்கள் எனப் பலவற்றிலே தரிசிக்கமுடியும். உலகப்புகழ் பெற்ற நடிகையான மர்லின் மன்றோவின் முகவடிவம் பொன் விகிதத்தில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



மக்கள் மனதைத் தொட்ட சில பாடல்கள் திரைப்படத்தில் இடம் பெறாமலும் போய் விடுவதுண்டு. "மௌனமே பார்வையாய் பேசி" என்ற பாடல் அன்பே சிவம் படத்திலும் "கருமாத்தூர் காட்டுக்குள்ளே" என்ற பாடல் விருமாண்டி படத்திலும் இடம்பெறவில்லை. "சொல்லிவிடு வெள்ளி நிலவே" பாடல் அமைதிப் படை திரைப்படத்திலும் ஸ்ரேயா கோஷல் பாடிய "நினைத்து நினைத்துப் பார்தேன்" பாடல் 7G ரெயின்போ காலணி திரைப்படத்திலும் காட்சிப்படுத்தப்படவில்லை. S.P.B - ஜானகி பாடிய "வானின் தேவி வருக" பாடல் ஒருவர் வாழும் ஆலயம் திரைப்படத்தில் இடம்பெறவில்லை. மணிப்பூர் மாமியார் திரைப்படம் வெளிவராததால் மலேசியா வாசுதேவன் - வாணி ஜெயராம் பாடிய "ஆனந்தப் பூங்காற்றுத் தாலாட்டுதே" பாடலும் படிமப்படுத்தப்படவில்லை. அதேபோல காவடிச் சிந்து திரைப்படம் வெளிவராததால் "யாரோ சொன்னாங்க", "என்ன குறை ராசாவே" ஆகிய பாடல்களின் காட்சியனுபவமும் கண்களுக்குக் கிட்டவில்லை. எனினும் அத்திரைப்படத்திற்குரிய "சாமக்கோழி கூவியாச்சு" என்ற பாடலானது பட்டணந்தான் போகலாமடி திரைப்படத்தில் இடம் பெற்றுள்ளது.

பன்முக ஆளுமையோடு சுவாரஸ்யமான கற்பித்தலை முன்னெடுக்கும் ஆசிரியர்கள் பலரைக் கடந்து வந்திருக்கின்றோம். சிலரிடம் படிக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லையே என்ற ஏக்கமும் தோன்றுவதுண்டு. அந்த வகையில் வடமராட்சியின் கணித மேதையான ஓய்வு பெற்ற ஆசிரியர் R. L.தேவராஜா அவர்கள் குறிப்பிடத்தக்கவர். கிட்கிந்தையில் கிடைத்த சீதையின் ஆபரணங்களை இராமன், இலக்குவனுக்கு காட்டுகின்ற காட்சியினை விளக்கியவாறு ஏற்றக் கோணம், இறக்கக் கோணம் என்பவற்றை இலக்குவன் சீதையை நோக்கிய விதத்தைக் கொண்டு அழகாகக் கற்பிப்பார். நிறுவலைக் கற்பிக்கும்போது கண்ணகி காற்சிலம்பினை இனங்காணும் விதத்தோடு ஒப்பிட்டு விளக்குவார். கணிதத்தை இலக்கியத்தேன் கலந்து வழங்கும் இத்தகைய ஆசிரியரிடம் கற்ற மாணவர்கள் பாக்கியசாலிகளே! ஈழத்தின் மிக முக்கியமான விமர்சகரும் கவிஞருமான சி.ரமேஷ் எழுதிய "கள்ளிச் செடிக்கருகில் கைவிடப்பட்ட ஒற்றைச் செருப்பு" என்ற கவிதையோடு இவ்வாரப்பதிவினை நிறைவு செய்கிறேன்.



ஊருணிக்குளத்தில்
மிதந்தலையும் நீர்க்குமிழிகளாய்
பொருள் பிரித்தறியா உன் மௌனம்
மழைக்குள் நனையும் காட்டுப்பூக்களாய்
நதிக்கரையோரம் நீண்டு செல்லும்

காரிருளில் கனத்து வெளியேறும்
நொண்டிக் குதிரைகளாய் வாழ்க்கை
பாம்பெனச் சுருங்கிக் கொள்ள
ஆதிச்சொற்களை ஏந்தி வரும்
மந்திரத் தாழிகள் உடைந்து சிதறுகின்றன.

இருள் பூத்தவானில் உதிரும்
பனித்துளிகளுக்குள் சிலிர்த்தெழும்
அடர் வானத்துப் பறவைகள்,
யாருமறியா ஒளியின் ரகசியங்களை
எழுதிச் செல்கிறது.

# நிலைக்கண்ணாடி

தரிசனன்




**"வாழ்வின் ஒளிமிகு பெரு வெளியை தரிசிக்க வேண்டுமெனில் தீய குண இயல்புகளைக் கண்டடைந்து அதனை அளிக்கும் வல்லமையினைப் பெறவேண்டும்."**

## தன்னிலிருந்து தான் விடுபடுதலும் தனது முழுமையைத் தானே தரிசித்தலும்

நம்மிற் பலர் எண்ணிப் பாராத அல்லது நினைவாற் கூடத் தீண்டாத அகத்தின் கூறுகள் அல்லது அகத்தின் சூட்சமான பாகங்கள் எம்மிடம் உண்டு. அவை பற்றி பலரும் யோசிப்பதில்லை. மனிதர்களாகிய நமக்கு நமது அகம் சார்ந்த அத்தகைய உணர்வுகள் குறித்த பிரக்ஞை ஆளுக்கு ஆள் வெவ்வேறு அளவுகளில் தலை தூக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு. இவற்றோடு பல தரப்பட்ட எதிர்மறையான உணர்வுகளும் நம் அகத்தில் உள்ளன.

பொறாமை, கோபம், வெறுப்பு, பகை உணர்வு, பழிவாங்கும் குணம், கபடம், போன்று எதிர்மறை உணர்வுகள் அவ்வப்போது எம் அகத்தில் தலையெடுத்து நமது தெளிவான அறிவையும் நிதானித்த சிந்தனைத் திறனையும் சிதறடித்துத் தவறான வழியில் நம்மைச் செயலாற்றத் தூண்டுவதுண்டு.

இத்தகைய சந்தர்ப்பங்களில்தான் பொதுப்புத்தி அல்லது பொதுப் பார்வை அடிப்படையில் தவறுகள் அல்லது பிழைகள் பெரும் பாவங்களைக் கூடச் செய்யுமாறு தூண்டி விடுகின்றன. இப்படியான சூழல்களில் நாம் சிக்கிக் கொள்ளும் போது நம் இயல்புகளுக்கு நாமே இரையாகி, பலியாகி நம்மை நாமே பாழ் செய்து கொள்ளவும் நேரிடுவதுண்டு. இப்படியான நிலைமைகளின் போது தான் நம்மை நாம் நம்மிடமிருந்தே காப்பாற்றிக் கொள்ள வேண்டியவர்களாகிறோம்.

அறியாமையின் விளைவுகளான எதிர்மறையுணர்வுகள் எம்மை ஆக்கிரமிக்காமல் இருப்பதற்கான தற்காப்புக் கவசங்கள் கூட நம்மிடம் தான் உள்ளன. தெளிந்த நல்லறிவு, விலங்குக் குணங்கள் நம்மிடம் தலை தூக்கும் போது அவற்றிலிருந்து நமது நல்லுணர்வுகளின் தூண்டுதலின் துணையோடு நாம் நம்மைக் கட்டுபடுத்த வேண்டும்.

அவ்வாறான எதிர்மறைக் குணங்களை நாமே கண்டு உணர்ந்து அவற்றிலிருந்து எச்சரிக்கை கொள்ளும் தன்மையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். இத்தகைய உணர்வுகளை அடையாளம் கண்டு நம்மை நாமே திருத்திக் கொள்வதற்குத்தான் நல்லறிஞர்களின் சிந்தனைகளும் நல்ல நூல்களும் நல்ல மனிதர்களுடனான உறவுகளும் எமக்கு உதவுகின்றன.

தீமையென்று தெரிந்திருந்தும் தீமை தரும் எண்ணங்களை, செயல்களை நமக்குள் வளர விடாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறான எதிர்மறையான தீய குணங்களை எம்முள் வளர விடுவோமெனில் நாம் அடுத்தவர்க்கும் ஒரு கட்டத்தில் நமக்கு நாமே பகையாகிப்போவோம். இத்தகைய நிலை போன்றவற்றையும் பாதுகாப்பான உள்ளங்களையும் உணர்வுகளையும் நல்ல நிலையில் வைத்துக் கொள்ளும் விழிப்புணர்வு என்றும் அவசியமாகிறது.

பாவங்கள் என ஒதுக்கப்பட்ட தீய செயல்களைக் கூசாமல் செய்பவர்கள் தமக்குத் தாமே பகையானவர்கள். இருண்ட தாக்குதலுக்கு ஆளாகிற சராசரி மனிதன் சட்டத்தின் முன்னாலும் தர்மத்தின் அடிப்படையிலும் அறம் என்னும் நேரிய பாதைக்கு மாறாகவும் நடந்து கொண்டு விடுகிறான். அது அவனை ஒரு பாவிகளாய் அநீதியின் வழியில் செல்பவனாய் ஆக்கிவிடுகிறது.

ஆகவே ஒருவன் கெடுதல் விளைவிக்கும் உணர்வொன்றுக்கும் பலியாகும் போது தன்னைத் தானே அழிப்பவனாகி விடுகிறான். இந்நிலையில் வாழ்வின் ஒளிமிகு பெருவெளியைத் தரிசிக்க வேண்டுமெனில் தீயகுண இயல்புகளைக் கண்டடைந்து அதனை அளிக்கும் வல்லமையினைப் பெறவேண்டும். இதுபோலவே நம்மில் தலையெடுக்கவல்ல நல்ல பேருணர்வுகளை இனம் கண்டு அவற்றின் வழியே செல்வோமெனில் நாமே அதி மானுடப் பண்புகள் கொண்ட மக்களாக மாறுகிறோம். அன்னை தெரேசா, மகாத்மா காந்தி போன்றவர்களும் இப்படித்தான் உருவானார்கள்.

# வாழ்வாங்கு வாழ்தல்

ந. குகபரன்



சிலரது வாழ்க்கை பல்பிணி நிரம்பிய வாழ்க்கை என வாழ்வை இடர் நிறைந்ததாகக் குறிப்பிடுவர். இந்த வாழ்க்கையைச் சிறப்பாக எதிர்கொள்வதற்குத் தெளிவான எண்ணமும் செயலும் அவசியம். தன்னையாளும் உரம் உடனிருக்கும்போது சவால்களை எதிர்கொண்டு முன்னோக்கிச் செல்லமுடியும். தன்னையும் பிறரையும் நேசிக்கும் பண்பு அன்பையும் அமைதியையும் தரும்.

பழந்தமிழ் இலக்கியங்கள் செம்மையான வாழ்க்கையை முன்னிறுத்துகின்றன. ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றன. அவற்றில் அரசியல் சார்ந்த விடயங்கள் முக்கியமானவையாகும். அரசியலானது வாழ்க்கைச் சமநிலையைத் தீர்மானிக்கிறது. முறையான ஆட்சி அமையும் போது மக்கள் வாழ்வு மகிழ்வுக்குரியதாகிறது.

அக்காலப் புலவர்கள் மன்னரை நோக்கி வெளிப்படுத்திய விடயங்களில் பல தனிமனிதர் ஒவ்வொருவரும் எக்காலத்திலும் கொள்ளத்தக்க பல்வேறு விடயங்களையும் உள்ளடக்கியதாகும். ஆளும்தன்மைக்குரிய அறத்தை ஒவ்வொருவரும் கடைப்பிடிக்கும்போது சமூக மேம்பாடு சாத்தியமாகும்.

சங்ககாலத்தில் வாழ்ந்த தந்துமாறன் என்ற வேந்தன், பாண்டிய வம்சத்தவன். அவனைக் கண்டு சங்குவரையர் என்னும் நாகரையர் முன்வைத்த கருத்துகள் மக்கள் மனம்மகிழும் வண்ணம் ஆட்சிசெய்த தலைவர்கள் பற்றியும் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கநெறி தொடர்பாகவும் விபரிக்கின்றன.
அந்தப் புறநா னூற்றுச் செய்யுள் இவ்வாறு அமைகிறது.

பெரிதாராச் சிறுசினத்தர்
சிலசொல்லாற் பலகேள்வியர்
நுண்ணுணர்வினாற் பெருங்கொடையர்
கலுழ்நனையாற் றண்டேறலர்
கனி குய்யாற் கொழுந்துவையர்
தாழுவந்து தழுஉமொழியர்
பயனுறுப்பப் பலர்க்காற்றி
ஏமமாக விந்நில மாண்டோர்
சிலரே பெரும கேளினி நாளும்
பலரே தெய்யவஃ தறியா தோரே
அன்னோர் செல்வமு மன்னி நில்லா
தின்னு மற்றதன் பண்பே யதனால்
நிச்சமு மொழுக்க முட்டிலை பரிசில்
நச்சுவர நிரப்ப லோம்புமதி யச்சுவரப்
பாறிறை கொண்ட பயந்தலை மாறுதகக்
கள்ளி போகிய களரி மருங்கின்
வெள்ளி னிறுத்த பின்றைக் கள்ளொடு
புல்லகத் திட்ட சில்லவிழ் வல்சி
புலைய னேவப் புனமே லமர்ந்துண்
டழல்வாய்ப் புக்க பின்னும்
பலர்வாய்த் திராஅர் பகுத்துண்டோரே

ஒருவர் உணவில் கட்டுப்பாடு உடையவராக இருக்க வேண்டும். ஆரோக்கியமாக வாழ்வதற்கு அளவான நிறையுணவு அவசியம். அதுபோல உள்ளத்தின் பக்குவமும் கவனத்திற்குரியது. சினத்தை ஆளுதல் அதில் ஒன்று. இதனையே "பெரிதாராச் சிறுசினத்தர்" என்கின்றார் புலவர்.

பொருத்தமான வேளையில் சரியான சொற்களைக் கையாளுதல் ஆளுமையின் மற்றொரு பண்பாகும். அளவாகவும் கனதியுறவும் பேசுவது ஒரு கலை. கூடவே சான்றோர் கூறும் பலபொருள்களையும் செவியேற்கும் பாங்குடையராக இருப்பதும் அவசியம். அத்தன்மையே தெளிவுக்கும் முன்னேற்றத்துக்கும் வழிசமைக்கும். இதனை "சிலசொல்லாற் பலகேள்வியர்" என்ற தொடர் மூலம் புலவர் சுட்டியுள்ளார்.

தன்னைநாடி வருவோரை ஆதரித்தல் தலைவருக்கு இருக்கவேண்டிய இயல்பாகக் கூறப்படுகிறது. எனினும் இது அனைவருக்கும் உரியது. முக்கியமாக மற்றவரின் நிலைமையினை தனது நுண்ணுணர்வால் உணர்ந்து செயலாற்றுவது பெருங்குணப்பண்பாகும். பிறருக்குப் பயன்தருவனவற்றைத் தேர்ந்து உதவும் பண்பாளரின் இருப்பானது உலகிற்கு அரணாகவும் இன்பத்துக்கு ஆதாரமாகவும் அமையும் தன்மையுடையதாகும். இத்தகு பண்பினர் உணவு வழங்கும்போதும் பிறர்விரும்பும் வண்ணம் கனிந்த தாளிதத்தோடு கூடிய கொழுவிய துவையலை பிறர்களிக்கும் இயல்புடையர் எனப் புலவர் குறிப்பிடுகிறார்.

பிறரோடு உரையாடும்போது பணிவுடையராய், பேசும் மொழியால் அனைவரையும் தழுவிக்கொள்ளும் தன்மையுடையராய் இன்சொற்களை பேசுவது பற்றி செய்யுள் விபரிக்கிறது. புரிகின்ற செயல்கள் நன்மை பயப்பனவாக அமைவதன் அவசியத்தையும் எடுத்துக் காட்டுகிறது.

உலகத்திலே பண்புடையராக வாழ்கின்ற தலைவர்கள் சிலரேயாவர் என்கிறார் புலவர். அதேவேளை இதற்குப் புறம்பாக வாழ்பவர்கள் பலர் உளர். எத்தகையவரானாலும் அனைவரது செல்வமும் நிலைத்து நிற்காது. செல்வம் அடிப்படையில் நிலையற்றது. ஆகவே எப்பொழுதும் ஒழுக்கத்தில் இருந்து விலகாது நடக்க வேண்டும் என்பதே புலவர் வலியுறுத்தும் விடயமாகும்.

நிலையாமையை உணர்தல் என்பது தன்னை அறிதலுக்கும் காலத்தின் பொருளறிந்து அன்போடு கூடி வாழ்வதற்கும் ஆதாரமாக அமையும். இதனாலேயே புலவர்கள் இளமை, செல்வம், யாக்கை நிலையாமையைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்துக்காட்டுகின்றனர். நிலையற்றதன்மையை விளக்க இங்கு சுடுகாட்டு நிகழ்வு முன்னிறுத்தப்படுகிறது.

கண்டார்க்கு அச்சமுண்டாக்கக்கூடியது சுடுகாடு. அங்கு பிணத்தைச் சுடுவதற்கான விறகுகள் நிறைந்துள்ளன. இறுதியில் பிணத்தைக் கொண்டு வந்த பாடையும் பிணத்திற்கு விடைகொடுத்துவிடுகிறது. அங்கே பரப்பப்பட்டிருக்கும் தருப்பைப் புல்லின் மேல் படையல் இடப்படுகிறது.

இறுதிக் கடமையை நிறைவேற்றுபவரின் பணிப்பின்படி கருமங்கள் யாவும் நிகழ்ந்தேற ஈற்றில் சுடலைவாய்த் தீயில் உடலம் வெந்து சாம்பலாகிறது. இதுவே வாழ்வின் முடிவு. இதனை யாவரும் அறிந்துள்ளபோதும் ஏன் புகழ் உறும் வண்ணம் பண்புடையராக வாழ்வோரைக் காண்பது அரிதாகிறது என்பதே புலவரின் ஆதங்கமாகும்.

நிலையற்ற வாழ்க்கையின் இயல்புணர்ந்து நிலையான மகிழ்ச்சியோடு வாழத்தூண்டுகின்றது இச் செய்யுள். இவ்வாறு வாழ்பவரே "வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என வள்ளுவரும் உரைக்கிறார். ■

# கொரோனாப் பெருந்தொற்றும் சித்த மருத்துவ மூலிகை சுக வாழ்வும்

**டாக்டர், வெற்றிவேல் சக்திவேல்**
B.S.M.S, P.G.Dip Pub Adm, M.Sc



நவீன விஞ்ஞான உலகில் அறிவியல் சமூகமானது (Scientific Community). மூலிகை மருத்துவ உணவுகளின் தொழிற்படுநிலை (functional Food) முளைக்கவிடும்போது ஊட்டச் சத்து மேம்பாடு அடைவதையும் (Bio – Availability) பற்றியும் மூலிகை ஊட்டச்சத்து (phyto – Nutrients) பற்றி ஆராய்வதுடன் ஊட்டச்சத்து மிகுந்த, நோய் எதிர்ப்புசக்தி மிகுந்த மூலிகை உணவுகளைப் பயன்படுத்தி தகரத்தில் அடைத்துப் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் மூலிகை உணவு சார்ந்த ஊட்டச்சத்து உற்பத்திகளைப் பற்றியும் (Nutraceuticals) ஆராய்ந்து வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

தமிழர்களின் மரபுவழிப் பாரம்பரியமாக அமைந்த சித்த மருத்துவம் (Siddha Medical Practice of Tamil Heritage) ஒரு புராதன மருத்துவ விஞ்ஞானமாக (Ancient Medical science) காணப்படுகிறது. புராதன சித்தர்களின் மனம் எனும் ஆய்வு கூடத்தால் (Mental labs of ancient sages or seers) அறியப்பட்டதும், புராதன சித்தர்களின் ஆத்மிக அறிவாலும் (Spiritual Knowledge of the ancient seers) குணப்படுத்த முடியாதவற்றை குணப்படுத்தும் (Curing incurable diseases) பாரம்பரிய மருத்துவத்தின் அதி அற்புத பெறுமதியும் (Miraculous value of Traditional Medicine), பல்வேறுபட்ட மூலிகைகளை (The Wide range of herbs), நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தும் பாரம்பரிய உணவுகளையும், பாரம்பரிய மூலிகைகளையும் (Basic Knowledge of immunity boosting through traditional food and herbs), மூலிகை மருந்துகளையும் பாரம்பரிய உணவுகளையும் (Herbal Medicine and traditional Food) மூலிகை வழி நோய்களை நீக்குதல் (Herbal path to heal the diseases or herbal curative options), தமிழர் தம் பண்பாட்டு பாரம்பரியங்களையும் (Cultural heritage of Tamils), புராதன மூலிகை மருத்துவ புலமையையும் (Ancient herbal Medical expertise), வர்ம சிகிச்சை முறைகளையும் பயன்படுத்தி கொரோனாவை எதிர் கொள்வதுடன், வருங்கால சந்ததியினருக்குப் பாரம்பரிய அறிவை பாதுகாப்பதுடன் (Conserve traditional Knowledge for future generation) உலக அரங்கிற்கு எமது பாரம்பரிய மூலிகை மருத்துவத்தை எடுத்துச் செல்வது (Take traditional Medicine to the world) அவசியமானதாகும்.



சேதனப் பசளையிட்டு வளர்க்கப்படும் பாரம்பரிய நெல்லினங்கள் நோய் எதிர்ப்பு சக்தி வலுவூட்டும் நெல்லினங்களாகும். கவுணி அரிசியானது கறுப்பு கவுணி, சிவப்பு கவுணி என இரு வகைப்படும். முன்பு இந்த அரிசியை அரசனும் மந்திரிகளும் மட்டும் சாப்பிட்டனர். இந்த அரிசியில் அந்திரோசயனின் (Anthro cyanin) என்ற மருத்துவப் பொருள் காணப்படுகின்றது. இது மன அழுத்தத்தையும் குறைக்கும். கவுணி அரிசி ஒரு குவளை, முளை கட்டிய கொள்ளு, முளை கட்டிய பயறு முறையே ½ குவளை, சீரகம் ½ தேக்கரண்டி, பெருங்காயம் ½ தேக்கரண்டி, 7 மிளகு இவற்றை சேர்த்து கஞ்சியாக குடிக்கும் போது ஊட்டச்சத்து மேம்பாடுடன் நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கும். சிறு தானியக் கஞ்சி, சிறு தானிய உணவுகளும் ஊட்டச்சத்து மேம்பாட்டுடன் நோய் எதிர்ப்புசக்தி மேம்பாடும் ஏற்படும்.



யூகி வைத்திய சிந்தாமணி எனும் நூலில் ஐயசுரம் பற்றியும், பரராச சேகரத்தில் சிலேற்பன சுரம் பற்றியும் சுரம் 64க்கும் குடிநீரும் குறிப்பிடப்பட்டுள்ளது. கபசுரக்குடிநீர், நிலவேம்புக் குடிநீர் நோய் எதிர்ப்பு சக்தி மேம்பாட்டிற்கு (Immunity Enhancement) உதவுகின்றன. விஷ சுரக்குடிநீர், அமுக்கரா சூரணம், நெல்லிக்காய் லேகியம், தூதுவளை நெய், தாளிசாதி வடகம், இம்பூரல் வடகம், தூதுவளை லேகியம், ஆடாதோடை மணப்பாகு, தாளிசாதி சூரணம், பைரவ மாத்திரை, பால சஞ்சிவி மாத்திரை, திப்பிலி இரசாயனம், வசந்த குசுமாகரம், லிங்க செந்தூரம், வெள்ளி பற்பம், நா பற்பம், தாளக பற்பம், பூரண சந்திரோதயம், பவழ பற்பம், கௌரி சிந்தாமணி, சிவனார் அமிர்தம், அதி மதுர சூரணம், சீந்தில் சூரணம், பிரமானந்த பைரவம் போன்ற பல்வேறு மருந்துகள் சித்த மருத்துவ செவ்வியல் நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவை சித்த மருத்துவ நிபுணர்களால் வழங்கப்பட வேண்டும். சுக்கு, மல்லி, ஏலம் போன்ற மூலிகைகள் சேர்த்து தயாரிக்கப்பட்ட மூலிகைத் தேநீர் (Herbal Tea) சீரகம், மிளகு, மஞ்சள், முருங்கை இவை சேர்ந்த முருங்கை இரசம், மிளகு ரசம், தூதுவளை ரசம், பழஞ்சோறு, கொள்ளு ரசம், மிளகு, மஞ்சள், கல்லாக் காரம் சேர்த்துக் காய்ச்சிய பால், மோர் போன்றவற்றை உட்கொள்ளுதலும் கல்லுப்பு மஞ்சள் சேர்த்து தொண்டையில் படுமாறு வாய் கொப்பளித்தல், தும்பைப் பூ, துளசி இலைச்சாறு நசியம், மஞ்சள் புகை, மிளகுப் புகை போன்றவற்றை மேற்கொள்வது நன்று.

படிகார நீர், மஞ்சள் நீரால் கைகளை கழுவுதல் (Personal Sanitation), குங்கிலிய சாம்பிராணி, மஞ்சள், வேம்பு சேர்ந்த புகை (Fumigation) மஞ்சள், வேப்பிலை அவித்த நீர் தெளித்தல் சூழல் சுக வாழ்விற்கும் (Environmental Sanitation) உதவும். மூலிகை முகக்கவசம், ஓமப் பொட்டலம் பயன்படுத்தலாம். நாடி சுத்தி பிரணாயாமம், பிரணாயாமம், சூரிய நமஸ்காரம், சவாசனம், மகராசனம் போன்றவற்றை நிலைமைக்கு ஏற்றவாறு யோக சிகிச்சை நிபுணர்களின் மேற்பார்வையில் செய்யப்படலாம். பிராணாயாமம் போன்றன ஆரம்ப நிலைகளில் செய்வதன் மூலம் தீவிர நிலையை அடையாமல் பாதுகாப்பதோடு, நுரையிரலுக்கான ஒட்சிசன் விநியோகத்தையும் சீர்ப்படுத்த உதவும். முடிச்சு வர்மம், சக்தி வர்மம், அடப்ப கலம், திவளை கலம், குவளி கலம் போன்ற வர்மப் புள்ளிகளை (Energizing Varma points) தூண்டுவதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தியை (For Immune Enhancement) மேம்படுத்தலாம்.

(வளரும்)

**மூலிகை சுக வாழ்வு நிறுவனம்**
**கிளவ் வீதி, தெல்லிப்பளை**

# தொடரும் அநீதி

# நீதி மறுப்பும் கோரலும்

கருணாகரன்

இனவன்முறையினால் வடக்கு நோக்கி வந்த மலையக மக்களுக்கான நீதி இன்னும் கிடைக்கவில்லை. அவர்கள் நம்பி வந்த தமிழ்ப் பிரதேசங்களிலேயே (வடக்கிலேயே) புறக்கணிக்கப்படுகிறார்கள். பல வழிகளிலும் ஒடுக்கப்படுகிறார்கள். அரச நிர்வாகம் தொடக்கம் வளப்பகிர்வு, சமூக நிலை எனப் பல வகையிலும் இந்த அநீதி தொடர்கிறது. இந்த மக்களுடைய பிரச்சினைகளைக் குறித்து இதுவரையிலும் கவனத்திற்குரிய மைய உரையாடல்களோ ஆய்வுகளோ நடக்கவில்லை. இந்தக் கட்டுரைத் தொடர் அதனைப் பொதுவெளியில் திறக்க முற்படுகிறது.

\- ஆசிரியர்

ஒரு மெல்லிய வெளிச்சம். ஆனால் அதுவொரு பெரிய ஊட்டம். ஒரு விதைதான். அதுவே பெரு விருட்சம். ஒரு சிறிய வெளியே. அதுதான் பெரிய வாசலுக்கான திறப்பு.

12

விடுதலை இயக்கங்களுடைய செயற்பாடுகளைப் பற்றி இன்று பலவிதமான விமர்சனங்கள் உண்டு. அனைத்து இயக்கங்களும் இந்த விமர்சனத்திற்குள் அடங்கும். ஆனால் அவற்றினால் பல நல்ல விசயங்கள் தமிழ்ப்பரப்பில் நடந்திருக்கின்றன. அவற்றில் ஒன்று வடக்கு நோக்கி வந்த மலையக மக்களுக்கு ஆதரவாக இந்த இயக்கங்கள் இருந்தவையாகும். முக்கியமாக இந்த மக்களில் காணியற்றிருந்த குடும்பங்களுக்குக் காணிகள் கிடைக்கும் நிலையை ஏற்படுத்தியமை. அதாவது நிலம் வழங்கியமையாகும். இது ஒரு பெரிய மாற்றத்தை உண்டாக்கியது. பொருளாதார நிலையிலும் கல்வியிலும் இவர்கள் முன்னகரக் கூடியதாக இருந்தது. இது சமூகப் பண்பாட்டு நிலையில் ஏற்பட்ட ஒரு பெரிய மாற்றம் எனலாம். அதாவது இந்த நிலத்தில், இந்தப் பிரதேசத்தில் நாம் வாழமுடியும். எமக்கொரு வாழ்க்கையை இங்கே உருவாக்க முடியும். அது இங்கே உண்டென்ற தன்னம்பிக்கையையும் உறுதிப்பாட்டையும் உருவாக்கியது. இது ஆயிரம் மடங்கு பலத்துக்குச் சமம்.

நிலமில்லை என்றால் எந்த மனிதராலும் எங்குமே வேர் விட முடியாது. தாமரை இலைத்தண்ணீரைப் போல எதிலும் நிலைகொள்ள முடியாமல் அல்லாடிக் கொண்டிருக்க வேண்டியிருக்கும். எனவேதான் நிலம் முக்கியமான - அடிப்படையான ஒன்றாக இருக்கிறது.

வடக்கில் நிலமற்ற மக்களாக ஒரு காலம் பெருவாரியான ஒடுக்கப்பட்ட மக்கள் - தாழ்த்தப்பட்ட சாதியினர் இருந்தனர். நிலம் இல்லாத காரணத்தினால் இந்த மக்கள் நிலமுள்ளோரிடம் கூலிக்கு வேலை செய்ய வேண்டியிருந்தது. அல்லது அவர்களுடைய நிலத்தில் குத்தகைக்கோ வரிக்கோ தொழில் செய்யும் நிலை இருந்தது. அதாவது அவர்களுடைய நிலத்தில் வேலை செய்யும் ஆட்களாக இருக்க நேர்ந்தது.

ஏறக்குறைய இதே நிலைதான் மலையக மக்களுக்கும் வன்னியில் நேர்ந்தது. ஒரு சாரார் அத்துமீறி அக்கம் பக்கத்திலிருந்த அரச நிலத்தில் காடுகளை வெட்டி நிலத்தை எடுத்துக் கொண்டனர். இன்னொரு சாராருக்கு குறைந்தளவு நிலம் குடியிருப்புக்கென அரச நிர்வாகத்தினால் வழங்கப்பட்டது. இது பயிர்ச்செய்கைக்குரியதல்ல.

> **“மலையகத்தில் தோட்டங்களில், லயங்களில் இருந்ததைப்போல. இங்கே லயத்துக்குப் பதிலாகக் குடிசை. இதில் வேலைக்காகக் குடியிருக்கலாமே தவிர அந்தக் குடியிருப்பை உரிமை கோர முடியாது. இதற்கு உதாரணமாக கிளிநொச்சியில் இராமநாதன் கமம் என்ற ஆயிரம் ஏக்கர் காணியில் அங்கங்கே குடியமர்த்தப்பட்ட மக்கள். இதைப்போல பசுபதி கமம் என்ற காணியிலும். இதை விடச் சிறிய பெரிய கமங்களில் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன.”**



குடியிருப்புக்கு மட்டுமானது. இதில் தண்ணீரைப் பெறுவது மிகக் கடினம். தண்ணியில்லாக்காட்டைக் காட்டினால் எப்படி அங்கே தண்ணீரைப் பெற முடியும்? உதாரணம் ஜெயபுரம், செல்வாநகர், மலையாளபுரம், பொன்னகர், முறிகண்டி செல்வபுரம் போன்ற குடியேற்றங்கள். மற்றொரு பிரிவினர் பெரிய அளவில் செய்கை பண்ணப்படும் வயல்களில் வேலைக்கும் வயற் காவலுக்குமாகக் குடியமர்த்தப்பட்டனர். ஆனால் இவர்களுக்குக் காணியில் உரித்துக் கிடையாது. அங்கே குடியிருக்கலாம். நிரந்தர வீட்டை அமைக்க முடியாது. மலையகத்தில் தோட்டங்களில் லயங்களில் இருந்ததைப் போல. இங்கே லயத்துக்குப் பதிலாகக் குடிசை. இதில் வேலைக்காகக் குடியிருக்கலாமே தவிர அந்தக் குடியிருப்பை உரிமை கோர முடியாது. இதற்கு உதாரணமாக, கிளிநொச்சியில் இராமநாதன் கமம் என்ற ஆயிரம் ஏக்கர் காணியில் அங்கங்கே குடியமர்த்தப்பட்ட மக்கள். இதைப்போல பசுபதி கமம் என்ற காணியிலும். இதை விடச் சிறிய பெரிய கமங்களில் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன.

இப்படியாக இருந்த நிலையில்தான் நிலமற்றிருந்த குடும்பங்களுக்கு நிலம் வழங்கும் நடவடிக்கையை தாம் எடுத்துக் கொண்ட அரசியல் அதிகாரத்தின் மூலமாக இயக்கங்கள் செயற்படுத்தின. ஆனால் இதை அவை சட்டபூர்வமாகச் செயற்படுத்த முடியாதல்லவா. அதாவது இப்படி நிலம் கிடைத்தாலும் அதற்குரிய ஆவணங்கள் - உரிமப்பத்திரங்கள் கிடைக்கவில்லை. இருந்தாலும் அது வரையிலும் எதுவுமே இல்லை என்றிருந்த இந்த மக்களுக்கு இது பெரிய ஆறுதலாக இருந்தது.

இதை இயக்கங்கள் இரண்டு மூன்று வகையாகச் செயற்படுத்தின. ஒன்று, மத்திய வகுப்புத்திட்டத்தின் கீழ் பெருமளவு நிலத்தை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொண்டு அதை அபிவிருத்தி செய்யாமல் வைத்திருந்தோரின் காணிகளை அல்லது அந்தக் காணிகளை விட்டு விட்டு வெளிநாடுகளுக்குச் சென்றோரின் காணிகளை எடுத்து அவற்றில் இந்த மக்களைக் குடியேற்றியமை.

இப்படியான நிலங்களில் கிளிநொச்சி, முல்லைத்தீவு அடங்கலாக 2500 குடும்பங்களுக்கு மேலானோர் குடியேற்றப்பட்டனர். உழவனூர், புன்னை நீராவி, பரந்தன் சிவபுரம் போன்றவை இதற்கு உதாரணம். அடுத்தது அரச காணிகளில் குடியிருப்புகளை உருவாக்கியமை. குறிப்பாகத் தங்களுடைய இயக்கங்களில் சாவடைந்த போராளிகளின் நினைவின் பேரால் இந்தக் குடியிருப்புகள் உருவாக்கப்பட்டன. முன்னரே குறிப்பிட்டதைப்போல வவுனியாவில் புளொட்டும் ரெலோவும் இதைச் செய்தன. கிளிநொச்சியிலும் முல்லைத்தீவிலும் மன்னாரிலும் புலிகள், ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்றன இதைச் செய்தன. பின்னாளில் இந்த வகையான குடியிருப்புகள் பலவற்றைப் புலிகள் உருவாக்கினார்கள். அதிலொன்றே கேப்பாப்பிலவாகும்.

இன்னொரு வகையான குடியேற்றம், தனியாரின் உறுதிக் காணிகளில் மேற்கொள்ளப்பட்டதாகும். இந்தக் காணிகள் நீண்ட காலமாகவே பராமரிப்பின்றி இருந்தால், அவற்றின் உரிமையாளர்கள் இங்கே நாட்டில் இல்லை என்றால் அந்தக் காணிகளில் இந்த மக்களைக் கொண்டு போய் குடியேற்றினார்கள். காணி உரித்தாளர்கள் வரும்பொழுது அவர்களைத் தாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்ற துணிவின் அடிப்படையில் இது நடந்தது. இதற்கு உதாரணமாக இயக்கச்சியில் பனிக்கையடி, முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் எனப் பலவுண்டு.

இயக்கங்கள் இப்படிச் செய்வதற்கு வாய்த்தது, வடக்கிலே அரச நிர்வாகம் ஸ்தம்பித்திருந்தமையாகும். இதனால் இதைச் செய்யக் கூடியதாக இருந்தாலும் இதில் ஒரு பிரச்சினை இருந்தது. இந்த மக்களுக்குக் காணி கிடைத்தாலும் பலருக்கும் அதற் கான ஆவணங்களை - பத்திரங்களை - உடனடியாகப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. இப்போது கூட இவர்களில் ஒரு தொகுதியினர் உரிய ஆவணமில்லாமல் சிரமப்படுகின்றனர். ஆனால் தொண்ணூறு விழுக்காட்டினருக்கு சிரமங்கள், காலதாமதங்கள்,



இழுத்தடிப்புகளின் மத்தியில் ஒருவாறு இப்பொழுது ஆவணங்கள் - பத்திரங்கள் கிடைத்து விட்டன. இதற்கான போராட்டம் கொஞ்சமல்ல. இருந்தும் இன்று இவர்கள் வெற்றியடைந்து விட்டனர் என்றே சொல்ல வேண்டும்.

தனியார் காணிகளில் இருந்தோருக்கு ஆவணங்கள் இல்லவே இல்லை. அவை உறுதிக் காணிகள் என்பதால் அவற்றை எவராலும் வழங்க முடியாது. வேண்டுமானால் காணிக்குச் சொந்தக்காரர்கள் மட்டுமே வழங்க முடியும். அதற்கு எத்தனைபேர் தயார்?

ஆனாலும் அப்படியான அதிசயங்கள் நடந்துமிருக்கிறது.

சில இடங்களில் மத்திய வகுப்புத் திட்டத்தில் தமக்குக் கிடைத்த காணிகளை இந்த மக்களுக்கு ஒரு சிலர் வழங்கியிருக்கிறார்கள். அதைப்போல தமது சொந்தக் காணிகளில் குடியிருந்தோருக்கான காணிகளைத் தனியாரிற் சிலர் வழங்கியுள்ளனர். அதில் ஒரு குடும்பத்தினர் மானிப்பாயைச் சேர்ந்த மேதர் குடும்பத்தினர். இவர்கள் இயக்கச்சியில் 15 ஏக்கர் நிலத்தை சுமார் 50 குடும்பங்களுக்கு நன்கொடையாக வழங்கினர். இதற்கான ஏற்பாட்டை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் செய்திருந்தார். இன்று இந்தக் குடியிருப்பில் சுமார் 70 குடும்பங்கள் வரையில் வாழ்கின்றனர். கல்வி, பொருளாதாரம், வீடு எனப் பல வகையிலும் மிக முன்னேறிய குடியிருப்புகளில் ஒன்றாகப் பனிக்கையடி இன்றுள்ளது. இதைப்போல கிளிநொச்சியில் பசுபதி கமத்தைச் சொல்ல வேண்டும். முன்னாள் சட்டமா அதிபரான சிவா பசுபதி குடும்பத்தினர் இங்கிருந்த 50 க்கு மேற்பட்ட குடும்பங்களுக்குத் தங்கள் காணியில் ஒரு பகுதியை இனாமாக வழங்கியுள்ளனர். இங்கே இந்த மக்கள் ஒரு போராட்டத்தை நடத்தியிருந்தனர். நீண்டகாலமாக இந்தக் காணியில் தாங்கள் குடியிருந்து வருவதால் தமக்கு குடியிருப்பதற்கான நிலத்தைத் தர வேண்டும் என. இதைப் புரிந்துணர்ந்து கொண்ட சிவா பசுபதி குடும்பத்தினர் இவர்களுக்கான காணிகளை வழங்கினர். இதற்கு இணைந்து வேலை செய்தவர் காவேரிக் கலாமன்றத்தின் இயக்குநரான வண.பிதா யோசுவா.

ஆனால் இவை அரிதான நடைமுறைகள்.

எப்படியோ நிலமொன்று கிடைத்து விட்டால் அங்கே ஒரு நிரந்தரத் தன்மை குடியேறிவிடும். ஊரோடித் தன்மை இல்லாமற் போய் விடும். இந்த நிரந்தரத் தன்மையே எதையும் செய்யவும் திட்டமிடவும் கூடியதாக இருக்கும். மனதிலும் தாம் இங்கே தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்பதால் மிகப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தும். இதெல்லாம் ஒரு சமூக வாழ்க்கையை உருவாக்கிக்கொள்வதற்கான அடித்தளங்களாகும்.

(தொடரும்)

# அவமானப்படுத்தப்பட்டது தமிழ் அரசியல் கைதிகள் அல்ல தமிழ்த்தேசமே!

சி.அ.யோதிலிங்கம்



சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைச்சாலைகள் புனர்வாழ்வு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த கடந்த 12 ஆம் திகதி தனது பெண் நண்பியுடனும் வேறு நண்பர்களுடனும் மதுபோதையில் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு மாலை 6.00 மணியளவில் சென்று தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளில் நிற்க வைத்துத் தலையில் துப்பாக்கியை வைத்து அச்சுறுத்தி இருக்கிறார். தனது பாதணிகளை அரசியல் கைதிகளின் வாயினால் சுத்தப்படுத்துமாறும் வலியுறுத்தியிருக்கிறார். இந்த விவகாரம் இன்று இலங்கையில் மட்டுமல்ல உலகம் முழுவதும் பேசு பொருளாக மாறியிருக்கிறது. லொஹான் ரத்வத்தை அரசியலில் ஒரு தாதா போல் தொழிற்படுபவர். 2001 ஆம் ஆண்டு கண்டியில் முஸ்லீம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் 10 பேர் கொலை செய்யப்பட்டமைக்கும் காரணமாக இருந்தவர் எனக் கூறப்படுகிறது.

வழக்கமாக தமிழ் அரசியல் கைதிகள் பாதிக்கப்படும் பொழுது தமிழ் மக்களிடமிருந்து மட்டும் தான் எதிர்ப்புக் குரல்கள் வருவதுண்டு. ஆனால் இந்தத் தடவை சிங்கள அமைப்புக்கள் கட்சிகள் உட்பட சிங்கள அரசியல் தலைவர்களும் சமூக முக்கியஸ்தர்களும் காரசாரமாக இவ்விவகாரத்தைக் கண்டித்துள்ளனர். அவரை அனைத்துப் பதவிகளிலிருந்தும் நீக்கி உடனடியாக அவரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்துமாறும் கோரியுள்ளனர்.

அரசாங்கம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறுகின்ற காலமாக இருப்பதனாலும், ஐ.நா. பொதுச்சபையில் ஜனாதிபதி முதன் முதலாகப் பேசுகின்ற காலமாக இருப்பதனாலும் இந்த விவகாரம் தொடர்பாக நன்றாகவே ஆடிப்போயுள்ளது. இத்தாலிக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்ட பிரதமர் மகிந்த ராஜபக்ஷ லொஹான் ரத்வத்தவை உடனடியாகவே சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து இராஜினாமா செய்யுமாறு கோரியுள்ளார். ஜனாதிபதி கோத்தபாயவிற்கும் பதவியிலிருந்து நீக்குமாறு வலியுறுத்தியுள்ளார். லொஹான் ரத்வத்த சிறைச்சாலைகள் அமைச்சர் பதவியிலிருந்து மட்டும் இராஜினாமா செய்துள்ளார். ஆனால் இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து இராஜினாமா செய்யவில்லை. அரசாங்கத்தைச் சங்கடப்படுத்த விரும்பாததால் சிறைச்சாலைகள் அமைச்சர் பதவியிலிருந்து தான் விலகியுள்ளேன் என்றும் மற்றைய அமைச்சுப் பதவியில் தான் தொடர்ந்தும் நீடிப்பேன் என்றும் லொஹான் ரத்வத்த கூறியுள்ளார்.

லொஹான் ரத்வத்தவை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் எனப் பல பக்கங்களிலுமிருந்தும் கோரிக்கைகள் வந்த போதும் விசாரணைகள் எதுவும் பெரிதாக நடந்ததாகத் தெரியவில்லை. பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர யாராவது முறைப்பாடுகளை முன்வைத்தால் விசாரணைகளை மேற்கொள்வோம் எனக் கூறியிருக்கிறார். சிறைக் கைதிகளைப் பாதுகாக்கும் அமைப்பு இது தொடர்பாக சி.ஐ.டி இடம் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளது. இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவும் அனுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாண ஊடக மையத்தில் கடந்த 15 ஆம் திகதி ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடாத்திய தமிழ் அரசியல் கைதிகளது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இது தொடர்பாக சுயாதீனமாக விசாரணை ஒன்று நடைபெற வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். இதற்கான விசாரணைக்குழுவை ஜனாதிபதி அமைக்கும் வரை பாராளுமன்ற அமர்வுகளை தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர். அதேவேளை தமிழ் அரசியல் கைதிகள் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட வேண்டும் எனவும் அதற்கு முன்னதாக அவர்கள் தொடர்பாக வழக்குகள் உள்ள நீதிமன்றங்களிலேயே அவர்களை முற்படுத்திச் சிறைச்சாலையில் நடந்தவற்றை வெளிப்படுத்த வேண்டும் என்றும் கூறியிருக்கின்றனர். தமிழ் அரசியல் கட்சிகளது பிரதிநிதிகள் குழு ஒன்று உடனடியாக அனுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று தமிழ் அரசியல் கைதிகளது நடவடிக்கைகளை கண்காணிக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

> **தமிழ் அரசியல் கைதிகள் அவமானப்படுத்தப்பட்ட இந்த விவகாரம் வெறுமனே அவர்களுடைய விவகாரம் அல்ல. இது தமிழ்த்தேசத்தின் சுயமரியாதை சம்பந்தமான விவகாரம். லொஹான் ரத்வத்த, தலையில் துப்பாக்கியை வைத்ததும் பாதணிகளை நாவினால் சுத்தப் படுத்தச் செய்ததும் தமிழ்த்தேசத்தை அவமரியாதைக்கு உட்படுத்துவதற்காகத் தான். அரசியல் கைதிகளை தண்டிப்பதன் மூலம் தமிழ்த்தேசத்தையே தண்டிக்க அவர் முற்பட்டிருக்கின்றார்.**

தமிழ் அரசியல் தலைவர்கள் பருவகால பயிர்ச்செய்கைக்காலத்தில் மட்டும் உற்சாகம் காட்டுவது போல கடுமையான கண்டன அறிக்கையை மட்டும் வெளியிட்டிருந்தனர். தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்கள் அனுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளைச் சந்தித்து உரையாடியுள்ளனர். தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவர் மனோகணேசன் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலருடன் அனுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று உரையாடியுள்ளார். துப்பாக்கி வெடித்திருந்தால் புலிக்கதை ஒன்றையும் வெளியிட்டிருப்பார்கள் என்றும் அவர் கூறியிருக்கிறார். கஜேந்திரகுமார் இவ்விவகாரம் தொடர்பாக விசேட பிரேரணை ஒன்றைச் சபாநாயகரிடம் சமர்ப்பித்துள்ளார்.



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் எவரும் கைதிகளைச் சந்திக்கவில்லை. ஒரு சிலர் மட்டும் அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர். சுயாதீன விசாரணைகள் வேண்டும். அதற்கான விசாரணைக்குழுவை ஜனாதிபதி அமைக்கும் வரை பாராளுமன்ற அமர்வுகளைப் பகிஸ்கரிக்க வேண்டும் என்ற தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பத்தவர்களது கோரிக்கைகள் தொடர்பாக எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. அவர்களது ஒருங்கிணைந்த செயற்பாட்டை இவ்விவகாரத்தில் முன்னெடுங்கள் என்ற கோரிக்கையும் தமிழ் அரசியல் கட்சிகளினால் உதாசீனம் செய்யப்பட்டுள்ளது.

சந்திரிகா காலத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்து போரை முன்னின்று நடத்திய அனுரத்த ரத்வத்தவின் மகன் என்பதால் அரசாங்கமும் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தயக்கம் காட்டுவது போலவே தெரிகின்றது. பண்டாரநாயக்க குடும்பத்தைச் சேர்ந்த சந்திரிகா தங்களுடன் முரண்பட்டு நிற்கும் போது அக்குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை ஒதுக்குவதற்கு ராஜபக்ஷ சகோதரர்கள் விரும்பாதிருக்கலாம்.

தன்னுடைய மைத்துனரின் இவ் மோசமான செயல் பற்றி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் இதுவரை கருத்துக்கள் எவற்றையும் முன்வைக்கவில்லை. யாழ்ப்பாண மக்களை 1995 ஆம் ஆண்டு அவர்களது மண்ணிலிருந்து துரத்தியமைக்காக தனது தாய்மாமன் அனுரத்த ரத்வத்தவிடமிருந்து ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் அமைக்கப்பட்ட மேடையில் வெற்றிச்சான்றுப் பத்திரத்தைப் பெற்றவர் அவர். இரத்த உறவு என்பதால் மனித உரிமை மீறல்களை அவர் கண்டும் காணாமலும் இருந்திருக்கலாம்.


இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கமும் இவ்விவகாரம் தொடர்பாகக் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார். “சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மண்டேலா விதிகளின் பிரகாரம் சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கின்றது” எனக் கூறியுள்ளார்.

சர்வதேச மன்னிப்புச்சபையும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது அமைச்சரை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் எனக் கேட்டுள்ளது. சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய - பசுபிக்கிற்கான இயக்குனர் யாமினி மிஸ்ரா இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். இலங்கையில், கைதிகள் நடாத்தப்படும் விதம் குறித்த எங்களது கரிசனைகள் குறிப்பாக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை அதிகாரிகள் சித்திரவதை செய்வது மனிதாபிமானமற்ற விதத்தில் நடாத்துவது குறித்த கரிசனைகள் உண்மையானவை என்பதை இந்தச் சம்பவம் புலப்படுத்தியுள்ளது எனவும் கூறியுள்ளார், அரசாங்கத்தின் உயர் மட்டத்தில் உள்ளவர்கள் குற்றவியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுவதனை இது வெளிப்படுத்தியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் அவமானப்படுத்தப்பட்ட இந்த விவகாரம் வெறுமனே அவர்களுடைய விவகாரம் அல்ல. இது தமிழ்த் தேசத்தின் சுயமரியாதை சம்பந்தமான விவகாரம். லொஹான் ரத்வத்த, தலையில் துப்பாக்கியை வைத்ததும் பாதணிகளை நாவினால் சுத்தப்படுத்தச் செய்ததும் தமிழ்த்தேசத்தை அவமரியாதைக்கு உட்படுத்துவதற்காகத்தான். அரசியல் கைதிகளைத் தண்டிப்பதன் மூலம் தமிழ்த்தேசத்தையே தண்டிக்க அவர் முற்பட்டிருக்கின்றார்.

தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஏற்பட்ட இந்த நிலைமை இது தான் முதல் தடவை அல்ல.

(14 ஆம் பக்கம் பார்க்க...)



# ஜப்பானிய ஐந்து S முறையும் அம்மம்மாவின் அடுக்களையும்:

"அம்மம்மா காலத்திற்கு முன் பிருந்தே பரம்பரையாக நடை முறைப்படுத்தப்பட்டு வருகிற விடயம் என்பதை நம்மவர்கள் அறிந்திருக்கவில்லை என்பது தான் மிகவும் கவலையான விடயமாகும். அதாவது அடுக் களையில் உப்பு, தூள், சீனி, வெங்காயம், மிளகாய், மஞ்சள், மிளகு, மல்லி, உள்ளி, அரிசி, மா எல்லாமே அந்தந்த இடத்தில் சரியாக வைக்கப் பட்டிருக்கும். இதை நாமுமத் பார்த்திருக்கிறோம்."

சி.உதயகுமார்

இப்பவெல்லாம் அலுவலகங்கள், பாடசாலைகள் எதிலும் ஐந்து S என்ற விடயம் முக்கிய இடம் பிடித்திருப்பதை யாரும் அவதானிக்கலாம்.

அலுவலகங்களில் அலுவலக உத்தியோகத்தர்களின் வேலை வலு (work power) எந்தளவுக்கு உள்ளது என்பதைத் தெரிந்துகொள்ளவும், ஒவ்வொரு உத்தியோகத்தரும் எப்படியான தேர்ச்சி பெற்றுள்ளனர் என்பதை அறிவதற்காகவும் மற்றும் ஊழல், உதாசீனம் என்பவற்றைக் கண்டுபிடிப்பதற்காகவும் துறைசார் நிபுணர்கள் அலுவலகத்திற்கு வருகை தருவார்கள்.

குறித்த பரிசோதகர்கள் இக்காலப் பகுதியில்தான் வருவர் என்ற செய்தி அறிந்தால் போதும். அலுவலக அதிகாரி உட்பட யாவருமே உற்சாகம் பெற்றுவிடுவர். அலுவலகத்தையும், தாங்கள் செய்து முடித்த வேலைகளின் பதிவுகளையும் ஒழுங்கமைப்பு செய்து, கோவைகளையும் ஒழுங்குபடுத்தி வைத்துவிடுவர்.

இவையெல்லாம் அலுவலகத்தின் புள்ளிகளுக்காகவே அன்றி, மக்களின் பணிகள், சேவைகளுக்காக அல்லனவாகும்.

இவ்வாறான காலப்பகுதியில் மக்கள் பெரும்பாலும் அலுவலகர்களால் கவனிக்கப்படுவதில்லை என்பதும் கண்கண்ட காட்சிகளாகும்.

சரி, இனி பாடசாலை விடயத்திற்கு வருவோம். பாடசாலைகளிலும் அலுவலகங்கள் போன்று நடைமுறைகள் பலவுள்ளன. ஆனால், அலுவலகங்கள் போன்று பிரத்தியேகமான உத்தியோகத்தர்கள் இங்கு நியமிக்கப்படுவதில்லை. மாறாக ஆசிரியர்களே அங்குள்ள கடமைகளை ஒவ்வொரு பகுதியாகப் பிரித்து அந்தந்தக் கடமைகளைச் செய்து வருகின்றனர்.


கற்பித்தல் தொழிலோடு முகாமைத்துவப் பணியாளர் சேவையையும் செய்ய வேண்டும் என்பது எழுதாத ஒரு சட்டமாக இது இருந்து வருகிறது.

இவை பெரும்பாலான நேரங்களில் நிர்ப்பந்தமாகவே ஆசிரியர்களுக்கு கொடுக்கப்படுகின்றன என்பது விமர்சன உண்மையாகும்.

குறித்த திகதியில் கல்வி வலயக்குழு குறித்த பாடசாலைக்கு வருகிறது என்ற செய்தி அறிந்தது முதல் பாடசாலையின் அனைத்துச் செயற்பாடுகளும் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கிவிடுகின்றன.

கற்பித்தல் செயற்பாட்டினைக் காட்டிலும் படிவங்களிலும், பாடப்பதிவுப் புத்தகங்களிலும் இடைவெளி நிரப்புகின்ற செய்பாடுகள்தான் முக்கியமாக துருத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பாடசாலையில் கற்பித்தல் நடைபெற்றதோ



இல்லையோ பதிவுகளும் அறிக்கைகளும் சரியாக இருந்தால், சரி. இதையே வருகை தருகின்ற அதிகாரிகளும் எதிர்பார்க்கிறார்கள்.

பாடம் தொடர்பான எந்தவொரு வினாக்களையும் மாணவர்களிடம் கேட்கும் போதுதான் மாணவர்கள் எவ்வாறான பதில்களைச் சொல்கிறார்கள் என்பதை அவதானித்து அதற்கேற்ற ஆலோசனைகளை அதிகாரிகளால் முன் வைக்க முடியும். ஆனால், அதிகாரிகள் அப்படிச் செய்வது குறைவு.

பதிவுகளிலும், அறிக்கைகளிலும் எங்கே தவறுகள் உள்ளன என்பதைச் சுட்டிக்காட்டி அது தொடர்பாக நாள் கணக்கில் விவாதம் செய்து பொழுது கழிப்பதே அவர்களின் முக்கிய கடமையாக இருக்கும்.

குறைகளைக் கண்டு பிடித்து அதுபற்றிய தங்கள் சீர்திருத்தக் கதைகளை அதிபரிடமோ, குறித்த ஆசிரியரிடமோ கூறிவிடுதலே வந்தவர்களின் சாதனையாக நோக்கபடுகிறது.

இவ்வாறாக குழுமேற்பார்வையில் அங்கம் வகிக்கப்பவர்கள் தங்களைக் கடவுளரின் பிள்ளைகளாகப் பார்க்கின்ற சந்தரப்பங்களும் நிறையவே உண்டு. அதாவது, தங்களுக்குத்தான் எல்லாம் தெரியும், அதிபர், ஆசிரியர்கள் எவருக்கும் எதவும் தெரியாது என்ற எண்ணப்பாங்கு உடையவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர்.



இவ்வாறான துன்ப துயரங்களில் இருந்து தப்புவதற்காக அதிபர் முன்கூட்டியே யாவற்றையும் கவனிக்கத் தொடங்கிவிடுவார். ஆசிரியர்களைச் சுறுசுறுப்பாக்கிக் கொண்டிருப்பார்.

இதன் முதற் கட்டமாக ஒவ்வொரு வகுப்பறைச் சுவரிலும் காட்சிப்படுத்தல் நிகழும்.

அதிபர் இருக்கின்ற அறையின் சுவர்கள், அலுமாரியிலுள்ள கோவைகள் சீர்செய்யப்படும். அறையின் நிலம் வண்ணப்படங்கினால் அழகுபடுத்தப்படும்.

இக்காலப்பகுதியில் வகுப்புகளில் பாடவிதானச் செயற்பாடுகள் பெரும்பாலும் நடைபெறுவதில்லை என்பதும் கண்கூடான உண்மையாகும்.

ஆக, கல்வி வலயக்குழுவின் வருகையால் பாடசாலையின் புள்ளி அதிகரிப்பை காட்டுமே தவிர, மாணவர்களின் அடைவுமட்டத்தை உயர்த்தப் பயன்படும் என்று சொல்ல முடியாது.

இனி ஐந்து S விடயத்திற்கு வரவோம்.

இலங்கை அலுவலகம் மற்றும் பாடசாலையில் பின்பற்றப்படும் ஐந்து S என்ற விடயம் ஜப்பானிய அலுவலகங்கள், பாடசாலைகள் போன்றவற்றில் பின்பற்றப்படுகின்றன.

S என்ற எழுத்துக்கூட ஜப்பானிய மொழியில் உச்சரிப்பில் இருந்து திருடப்பட்டவை ஆகும்.

அதாவது,

seiri : தேவையற்றதை அப்புறப்படுத்துதல்.
seiton : ஒழுங்காக வைத்தல்.
seiso : சுத்தமாக வைத்திணுருத்தல்
seiketsu : நடைணமுறைப்படுத்தல்:
shitsuke : ஒழுக்கம்.

இவற்றினைக் கடைப்பிடிப்பதால் தாமும் உயர்ந்தவர் என மற்றவர் கருதக்கூடும் என்று எண்ணுவது எம்மவர்களின் மூடநம்பிக்கை ஆகும்.

ஆனால், இவை போன்ற செயற்பாடுகள் எல்லாம் அம்மம்மா காலத்திற்கு முன்பிருந்தே பரம்பரையாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிற விடயம் என்பதை நம்மவர்கள் அறிந்திருக்கவில்லை என்பதுதான் மிகவும் கவலையான விடயமாகும்.

அதாவது அடுக்களையில் உப்பு, தூள், சீனி, வெங்காயம், மிளகாய், மஞ்சள், மிளகு, மல்லி, உள்ளி, அரிசி, மா எல்லாமே அந்தந்த இடத்தில் சரியாக வைக்கப்பட்டிருக்கும். இதை நாமும் பார்த்திருக்கிறோம்.

இப்படிச் சுத்தமாகவும், அழகாகவும், இலகுவாகவும், நேர்த்தியாகவும், பாதுகாப்பாகவும் பொருள்கள் அடுக்கி வைக்கப்பட்டிருப்பதால் தேவையான போது அவற்றினை எடுத்து உபயோகித்துக் கொள்வர்.

இங்கெல்லாம், தேவையில்லாத பொருட்கள் அகற்றப்பட்டுவிடும். பொருள்கள் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.

பொருள்களை இலகுவாக எடுத்துப் பயன்படுத்துவர்.

பொருள்கள் சுத்தமாக வைத்துப் பேணப்பட்டிருக்கும்.

கடமைகள் ஒழுங்குமுறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

இப்படியான ஒழுங்கு முறைமைகள் நம்மவர்களிடத்தில் இயல்பாகவும், பரம்பரையாகவும் பேணப்பட்டு வந்து எனலாம். ஆனால், அதை ஜப்பான், அமெரிக்கா என்று சொல்லிப் பறந்து திரிவதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

இலக்கியத்தில் ஆளுமையுள்ளவரை இலக்கியம் பற்றிப் பேச அனுமதிக்க வேண்டும்.

ஆங்கிலப்புலமை உள்ளவரிடம் ஆங்கிலம் பற்றிக் கேட்டிய வேண்டும்.

கணினி, கணிதம், விஞ்ஞானம் தொடர்பான விடயதானங்களை அந்தந்த நிபுணர்களிடம் கேட்டறிய வேண்டும்.

உந்துருளி, மகிழுந்து, பேருந்து திருத்துநர்களிடம் சென்று அதற்கான திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

இவை போலவே அவரவருக்கான பழக்க வழக்கங்களை அவரவரே மேற்கொள்ள வேண்டும். எங்களுக்கான கலாசாரங்களையும், பண்பாடுகளையும் பின்பற்றி நாம் செய்வதே எங்களுக்கு எங்கள் தேசத்திற்கும் மேலானது ஆகும்.

மாற்றான் நாட்டு நடைமுறைகளைக் கொண்டு வந்து எங்களுடைய பண்பாடுகளுக்குள் சொருகுதல் என்பது, ஆடுகள் கட்டியிருக்கிற இடத்தில் ஓநாய்களைக் கொண்டு வந்து கட்டியதிற்கு ஒப்பாகிவிடும். நல்லன என்று கருதுபவற்றை அள்ளி எடுப்பதும், நல்ல அல்லன என்பவற்றை தூக்கி வீசுவதும் ஒரு சமூக மேம்பாட்டின் அடித்தளம் என்று சொல்ல முடியும்.

இருக்கிறதுக்கு ஆசைப்படுவோம். பறக்கிறதை விட்டுவிடுவோம். ■

# எழுத்தின் இயங்கியல்

## விமர்சனம் என்பது

ந.மயூரரூபன்



சமகாலத்தில் அனைத்து விடயங்களிலும் ஒருங்கிணைந்த அறிவின் செயற்பாட்டினை நாம் கண்டு கொள்கிறோம். அதன் அவசியத்தையும் பார்த்திருக்கிறோம். எனினும் நாம் மரபார்ந்த எமது ஒவ்வொரு அறிதல் முறைகளிலும் பொதுவான அளவீட்டுத் தன்மைகளைக் கையாண்டு பழக்கப்பட்டிருக்கிறோம். இலக்கியம், அரசியல், சமூகம் போன்றவற்றில் ஆன்மீகமும் இந்துத்துவ சாயலும் மதிப்பிடுவதில் வெளிப்பட்டு நிற்பதை ஒரு பகுதி எடுத்துக்காட்டாக நாம் விளங்கிக் கொள்ளலாம். எமது இலக்கிய விமர்சனத்தில் ஒரு காலகட்டத்தில் மார்க்சிய சித்தாந்தத்தின் ஆதிக்கம் அதிகம் இருந்ததையும் நாம் கவனித்துப் பார்க்க முடியும். ஆனால் ஒவ்வொரு துறைகயும் தமக்கான அறிதல் முறைகளையும் நுட்பங்களையும் கொண்டுள்ளன. ஒன்றின் வழிமுறை இன்னொன்றுக்கு அப்படியே பொருந்திப் போகாது. தட்டி நிமிர்த்தி பொருத்த வைக்க வேண்டிய அவசியம் என்ன? நாம் ஒரு காலத்தில் சமயத்தையும் சட்டத்தையும் ஒழுக்கத்தையும் ஒரே றாக்கைக்குள் அடுக்கி வைத்து, எடுத்துப் பார்த்தவர்கள் தற்போது ஒவ்வொன்றும் அவர்களுக்கான தனி இயல்புகளையும் இயக்கத்தையும் கொண்டிருப்பதை அறிகிறோம், கற்கிறோம், வெளிப்படுத்துகிறோம்.

இவ்வாறான ஒரு பின்னணியிலிருந்தே இலக்கிய விமர்சனம் தொடர்பான பார்வைகளை நாம் அறிந்து கொள்ளலாம். இலக்கியம் குறித்த கருத்துகள் தொடர்ந்து வெளிப்பட்டவண்ணமே உள்ளன. ஒரு பிரதி தொடர்பாக முறைசார்ந்த அடிப்படையில் முன்வைக்கப்படும். கருத்துகளும் கண்டடைதலும் விமர்சனத்திற்கு மிக முக்கியமானது. எழுத்திலிருந்து விமர்சனம் மிகத் தொலைவில் நிற்பது. எழுத்தும் விமர்சனமும் எப்போதும் வேறுவேறானவையே. எழுத்தாளன் - எழுத்து - எழுத்தின் இயக்கம் மாறாத படிமமாக ஒரு விமர்சகனுக்கு காட்சி தர முடியாது. விமர்சகன் தனது நுட்பங்களால் பிரதி இயங்கும் வெளிநோக்கி நகர்ந்து அது பற்றிய அனுபவத்தையும் ஆய்வையும் பகிரமுடியும். இங்கு இருக்கின்ற மட்டுப்பாடு பிரதியின் உருவம் ஒரு போதும் விமர்சகனின் கைக்குள் உருளும் பந்து போல அமையாததே.

இங்கு விமர்சனம் தொடர்பாகக் கூறப்படுகின்ற போது, ஒருவகை அறிவியல்சார் தன்மையின் சாயம் வெளிப்படலாம். எழுத்தை / பிரதியை விமர்சித்தல் என்பது அறிவியல் நிலையில் நின்று ஒரு விடயத்தை அறிந்து கொள்ளுகின்றதோ அல்லது கற்றுக்கொள்ளுகின்றதோ அல்ல. ஆயினும் அதன் கூறுகளும் அங்கு உண்டு. அதே போல் எழுத்தின் விமர்சனத்தை அதன் அழகியல் தளத்தில் நின்று இரசனைக் கண்ணோட்டத்தில் பார்க்கின்ற தன்மையும் உண்டு. இங்கு விமர்சனம் என்பது அனைத்துப் பார்வைத் தளங்களையும் தன்னோடு இணைத்த ஒரு செயற்பாட்டு வடிவமாகவே அறியப்பட வேண்டும் என்பது கவனத்திற்குரியது.

இங்கு விமர்சனம் என்பது,

1. உண்மையைக் கண்டறிதல்
2. முடிவுகளுக்கு வருதல்
3. யார் எழுதியது? எதை எழுதியது?
4. பட்டியல்படுத்தல்
5. கண்டித்தல்
6. எழுதாத விடயத்தை எழுத வேண்டும் எனல்
7. மீண்டும் அதை தன்மொழியால் மொழி பெயர்த்தல்

என்பது மாதிரி வகைகளில் அறியப்பட்டும் செய்யப்பட்டும் வருகின்றன. புலனாய்வு செய்து இதுதான் உண்மை எனக் கண்டறிந்து சொல்வதா விமர்சனம் என்கிற கேள்வியை நாம் கேட்கவேண்டும். நடந்து முடிந்த போரைப்பற்றி, போராடியவர்களைப் பற்றி, காட்டிக்கொடுத்தவர்களைப் பற்றி ஒரு புனைவில் பல்வேறு பாத்திரங்கள் வரமுடியும்.

குறித்த புனைவில் குறித்த பாத்திரத்தில் மறைந்திருப்பது இந்த எழுத்தாளர்தான் என புலனாய்வு வழி திறனாய்வு செய்து மலினப்படுத்துகின்ற விமர்சனங்கள் நிறைய உண்டு.

அதே போல் சில முடிவுகளுக்கு வருகிறோம், இந்தப் பிரதி அரசியலைப் பேசுவதால் அது இந்த வகை எழுத்து எனவும் அந்த எழுத்தாளர் "இந்த விடுதலை இயக்கத்தின் மேல் அனுதாபம் கொண்டு இயங்குபவன்" என்பது மாதிரியான "கிசு கிசு"த் தன்மையான முடிவுகளை அடைகின்ற விமர்சனங்களும் எம்மத்தியில் உண்டு.

எழுத்தாளர்களைப் பட்டியல்படுத்துகின்ற, இவர் ஏன் இதை எழுதினால் இதை எழுதியிருக்ககூடாது என்று சர்வாதிகாரத் தொனியில் கண்டனங்களைத் திணித்தல். அவர் இதை இப்படித்தான் எழுதியிருக்க வேண்டும். அதுதான் சரியானது என்கிற, தான் விரும்பும் அரசியலை முன்னிறுத்துகின்ற விமர்சன இயக்கத்தையும் பார்க்கிறோம்.

பொதுவாக விமர்சகர்கள், மேற்கூறிய இந்த விடயங்களைக் கடந்ததாக எந்தவித அரசியல் உள்நோக்கமற்று எந்தவித எழுத்தின் பக்கமும் சாயாததாகவும் அறிவியல் தன்மை பொருந்தியதாகவும் தேவையை (விமர்சனத்தின்) நியாயப்படுத்துவதாகவும் அமைய வேண்டும்.

"சித்தர் பாடல்களின் நம்பகத்தன்மையைப் பற்றிய அறிஞர்களின் ஐயத்தையோ, அல்லது இந்த "உலகாயதச் சித்தர்" என்பவர் ச.து.சு யோதியாரால் சேர்க்கப்பட்ட ஒரு பொய் என்ற தகவலையோ அறியாத ஒரு வாசகர் கூட ஓரளவு தமிழிலக்கிய வாசிப்பு உடையவராய் இருந்தால் மேற்கூறிய நாலே நாலு வரிகளை வைத்து இது மிகப் பிற்காலத்தில் செய்யுள் என்று ஊகித்துக் கொண்டிருப்பார். அந்த ஐயத்துடன் வேறு சித்தர் பாடல் தொகைகளை எடுத்துப் பார்த்தால் பிரபலமான பல பிரசுரங்களில் இந்தச் சித்தரின் பெயர் இல்லை என்பதையும் கவனித்திருப்பான்.

துரதிஸ்ரவசமாக சிவத்தம்பி தன் தேடலை தமிழிலக்கியத்தில் ஒலித்த "மானுடம்" என்ற கருப்பொருளின் உச்சத்தை நோக்கிய பயணமாக அமைத்துக் கொண்டு மேலே கூறிய வரிகளில் கொண்டு வந்து நிறுத்துகிறார். மானுடம், மெய்மை போன்ற சொற்கள் இவ்வரிகள் உள்ள பொருளில் இருபதாம் நூற்றாண்டு மார்க்சிய விவாதங்களில் மட்டுமே உருவாக்கப்பட்டுக் கையாளப்பட்டன என்பதும் சரி, அவரது உற்சாகத்தை அதிகரிக்கவே உதவுகின்றன.

(ஜெயமோகன், ஈழ இலக்கியம் - ஒரு விமர்சனப் பார்வை / 56)

இங்கு ஜெயமோகனால் எழுதப்பட்டுள்ள இவ்வகையான விமர்சனப் பந்தி முழுமையாக வாசிக்கப்படும் போதே ஜெயமோகனின் கருத்தியல் தளமும் நோக்கமும் விளக்கப்படும். ஒரு வகை முன்முடிவுகளால் உந்தப்பட்டும் தனது காழ்ப்புணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வகையிலும் உருவாக்கப்பட்ட ஜெயமோகனின் ஈழ இலக்கியம் நான் குறிப்பிட்ட, மேற்குறிப்பிட்ட வகை விமர்சனப் பாணிக்கு ஒரு எடுத்துக்காட்டு.

ஒரு விமர்சனத்திற்கு நிறைந்த உழைப்புத் தேவைப் படுகிறது. தான் ஏற்கனவே போர்த்திக் கொண்ட போர்வையை / போர்வைகளை உதறித்தள்ள வேண்டிய கடமையும் விமர்சகனுக்கு அவசியம். சாதாரணமாக ஒரு விமர்சகன்,

எழுத்தின் உருவாக்கம் இயக்கம் தொடர்பான புரிதல்

சமூகத்தை - சமூக இயக்கத்தை - மாற்றத்தை - முரணைப் புரிதல்.

வரலாற்றை - அரசியலை - மறைப்பை - மறைப்பின்மையை அறிதல்

மொழியை - தனிமொழியை - கூட்டு மொழியை உணர்தல்.

மௌனத்தை - மறைகுறிகளை நின்று நிதானித்தல்

கோட்பாடுகளை - அவற்றின் இயக்கத்தை பயிலுதல்.

மாயைகளை - போலிகளை அடையாளங்காணுதல்.

போன்ற வெவ்வேறுபட்ட தளங்களிலாலான அறிவும் பயிற்சியும் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகிறது.

இந்த அடிப்படைகளில் "எழுத்து" என்பது தொடர்பாகவும் "விமர்சனம்" என்பது தொடர்பாகவும் தற்புரிதல் அவசியம்.

"எழுத்து" ஒரு உற்பத்திச் சரக்கல்ல. பண்டத்தை - அதன் விற்பனையை முன்னிலைப்படுத்தும் விளம்பர உத்திகள் கொண்ட விமர்சனப் பாணிகள் துறக்கப்பட வேண்டும். "எழுத்து" தனக்கென வைத்திருக்கின்ற அறம் சார் இயக்கத்தை விமர்சனமும் தனக்குள்ளே கொண்டிருக்க வேண்டும். இத்தகைய விமர்சனங்களின் தீர்ப்புக்கூறல் நல்லதா? கெட்டதா? என்கிற முடிவைத் தந்து அந்த எழுத்தின் இயங்கியலைத் தடம் மாற்றுவதாக அமைந்துவிடும். ஒரு சவர்காரம், ஒரு ரூத் பேஸ்ற் விளம்பரங்கள் சொல்லுகின்ற - அறை கூவுகின்ற வார்த்தைகளை விமர்சனம் கொண்டிருக்க தேவையில்லை. இங்கு விமர்சனம் என்பது எழுத்தை - அதன் தொடர்ச்சியை உருவாக்கும் அல்லது வளர்க்கும் பணியை நோக்கியதாகவே அமைந்திருத்தல் என்பதே அதன் சிறப்பு. அதுவே தேவையும் கூட. ■

**இந்தப் பிரதி அரசியலைப் பேசுவதால் அது இந்த வகை எழுத்து எனவும் அந்த எழுத்தாளர் "இந்த விடுதலை இயக்கத்தின் மேல் அனுதாபம் கொண்டு இயங்குபவன்" என்பது மாதிரியான "கிசு கிசு"த் தன்மையான முடிவுகளை அடைகின்ற விமர்சனங்களும் எம்மத்தியில் உண்டு.**

*(11 ஆம் பக்கத்தொடர்ச்சி)*

# அவமானப்படுத்தப்பட்டது தமிழ் அரசியல் கைதிகள் அல்ல தமிழ்த்தேசமே!

*1983 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆம், 27 ஆம் திகதிகளில் 53 தமிழ் அரசியல் கைதிகள் குத்தியும் வெட்டியும் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மயில்வாகனம் என்ற 15 வயதுச் சிறுவன் சிறைக்காவலரினாலே தலைமுடியில் இழுத்துவரப்பட்டு, வெட்டப்பட்டு கொல்லப்பட்டான். 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி பதுளை பிந்தனுவ புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 27 தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர். இப்படுகொலையை மேற்கொள்வதற்காக அன்றைய தினம் இராணுவத்தினரும், பொலீசாரும் முகாம் காவலிலிருந்து அகற்றப்பட்டனர். இது தொடர்பாக மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் கூட நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர். 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆம் திகதி வவுனியா சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகளான நிமலரூபனும் டில்ருக்ஷனும் படுகொலை செய்யப்பட்டனர். இதே போன்று 1997 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் கொல்லப்பட்டனர். 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 65 தமிழ் அரசியல் கைதிகள் சிறைக்காவலர்களினால் கொடுமையாகத் தாக்கப்பட்டிருந்தனர்.*

*லொஹான் ரத்வத்தவால் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் இதன் தொடர்ச்சிதான். இது ஒரு குற்றவியல் பிரச்சினையோ சட்டப்பிரச்சினையோ என்பதற்கு அப்பால் இது ஒரு அரசியல் பிரச்சினை என்பதனை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். எனவே தமிழ்த்தரப்பின் அணுகுமுறை அதிக பட்சம் அரசியல் அணுகுமுறைகளாகவே இருக்க வேண்டும்.*

*தமிழ்த்தரப்பு உடனடியாகப் பல நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமானதாகும் அதில் முதலாவது, நடந்த விவகாரத்தை முதன்மைச்சான்றுகளுடன் ஆவணப்படுத்தித் தாயக மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் பேசு பொருளாக்க வேண்டும். தற்போது ஜெனிவா கூட்டத்தொடர் நடைபெறுகின்ற ஒரு காலம். அதுவும் அரசாங்கத்தின் மீது மென்மையான அணுகுமுறைகளை ஐ.நா மனித உரிமைகள் பேரவை பின்பற்றத் தொடங்கியிருக்கின்ற காலம். இக்காலத்தைச் சரியாகப் பயன்படுத்த தமிழ்த்தரப்பு தயங்கக் கூடாது. உடனடியாக லொஹான் ரத்வத்தை கைது செய்யப்படல் வேண்டும். அமைச்சர் பதவியிலிருந்தும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்கப்படல் வேண்டும் என்பதை கோரிக்கையாக சர்வதேச மட்டத்தில் முன்வைக்க வேண்டும்.*

*இரண்டாவது, இந்த விவகாரத்தைத் தமிழ் அரசியல் கட்சிகள் தனித்தனியாக அணுகக் கூடாது. தேர்தல் நலன்களையோ கட்சி நலன்களையோ இங்கு முக்கியத்துவப்படுத்தக் கூடாது. ஒருங்கிணைந்த அணுகுமுறையையே பின்பற்றுதல் வேண்டும். அரசியல் கைதிகளது குடும்பத்தவர்கள் கேட்டுக்கொண்டது போல முதலில் சகல கட்சிகளையும் உள்ளடக்கிய ஒரு பிரதிநிதிகள் குழுவை உருவாக்க வேண்டும். இக்குழுவில் பொது அமைப்புக்களினது பிரதிநிதிகளையும் இணைத்துக் கொள்ளலாம். குறிப்பாக அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான தேசிய அமைப்பின் வேட்பாளர் அருட்தந்தை சக்திவேலை இதில் இணைப்பது அவசியமானது.*

*மூன்றாவது, இந்தப்பிரதிநிதிகள் குழு முதலில் அனுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று தமிழ் அரசியல் கைதிகளுடன் உரையாடி நடந்தவற்றை விபரமாகத் தொகுப்பதோடு அவர்களது நலன்கள் தொடர்பாக தொடர் கண்காணிப்பினை மேற்கொள்ளுதல் வேண்டும்.*

*நான்காவதாக உலகு தழுவிய வகையில் ஒரு வலுவான அரசியல் போராட்டத்திற்கு தமிழ்த் தரப்பு தயாராக வேண்டும். ஜனாதிபதி கோத்தபாய தடுத்து வைக்கப்பட்ட அரசியல்கைதிகளின்விடுதலையை துரிதப்படுத்துவதாகவும் அதன் முடிவில் அவர்களுக்குப் பொது மன்னிப்பை வழங்கப் போவதாவும் கூறியிருக்கின்றார். இது காலத்தை நீடிக்கச் செய்யும் ஒரு செயற்பாடாகும் . இதனை முழுமையாக நிராகரித்து எந்தவித நிபந்தனையும் இல்லாமல் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதை வற்புறுத்த வேண்டும்.*

*பொதுவாக யுத்தம் முடிந்து சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றபோது முதற் கட்டமாக அரசியல் கைதிகளை விடுதலை செய்வதே வழக்கமானதாகும். இலங்கையைப் பொறுத்தவரை இந்த சர்வதேச மரபு பின்பற்றப்படவில்லை. அரசியல் கைதிகள் என்று கூறுவதற்கே அரசாங்கம் தயக்கம் காட்டி வருகின்றது. இங்கு சிறையில் இருப்பவர்கள் தமது சொந்தப் பிரச்சினைக்காகவே சிறை சென்றுள்ளனர். இந்த உண்மையை சர்வதேச ரீதியாக வெளிப்படுத்த தமிழ்த் தரப்பு தயாராக வேண்டும்.*

*தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினை என்பது முன்னரே கூறியது போல தமிழ்த் தேசத்தின் அரசியல் பிரச்சினைகளில் ஒன்றாகும். இதனை முழுச் சமூகமும் பொறுப்பெடுக்க வேண்டும். இவ்வாறு பொறுப்பெடுக்காவிட்டால் ஒரு நன்றியுள்ள சமூகமாக தமிழ்ச் சமூகம் ஒரு போதும் இருக்கமாட்டாது.*

*தமிழ் அரசியல் கைதிகள் ஒரே நேரத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். அவற்றைத் தனித்தனியாக அணுகாது ஒன்று சேர்ந்து அணுகுதல் வேண்டும். அவர்களுக்குச் சட்டப்பிரச்சினைகள் உள்ளன. குடும்பப்பிரச்சினைகள் உள்ளன. இவற்றையெல்லாம் கவனத்தில் எடுத்துப் பொருத்தமான மூலோபாயங்களையும் தந்திரோபாயங்களையும் வகுத்துச் செயற்பட வேண்டியது மிகவும் அவசியமானது. இதனூடாகத் தமிழ் அரசியல் கைதிகள் தனித்தவர்கள் அல்ல என்ற நிலையையும் உருவாக்கத் தமிழ் மக்கள் முன்வர வேண்டும்.* ■

---

# பிறமொழிக் கதைகள் தமிழாக்கம்: மணி வேலுப்பிள்ளை

## புதுப்புனல் 10

**புலோலியூர் வேல்நந்தன்**

*தீம்புனலின் இவ்வார புதுப்புனல் பகுதியில் அறிமுகம் காண்பது மணி வேலுப்பிள்ளையின் பெயர்ப்பில் காலம் வெளியீடாக வந்துள்ள பிறமொழிக் கதைகள் ஆகும்.*

*“பிறநாட்டுக் நல்லறிஞர் சாத்திரங்கள்*
*தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்.”*

*என்ற பாரதியின் கனவை நனவாக்குகின்ற வகையில் மணி வேலுப்பிள்ளை அவர்களால் இம் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது கனடாவில் வசித்து வரும் மணி வேலுப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். கொழும்புப் பல்கலைக்கழக ஆங்கிலப் பட்டதாரியான இவர் இலங்கையிலும் கனடாவிலும் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். யாழ் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புத் துறையின் இடைவரவு விரிவுரையாளராகவும் விளங்குகிறார். இவரது எழுத்துகள் கனடாவில் இருந்து வெளிவரும் காலம் இதழில் தொடர்ந்து வெளிவந்துள்ளன.*

*இவர் எழுதிய நூல்களாக “மொழியினால் அமைந்த வீடு”, “நாங்கள் அவர்கள்” ஆகியவற்றைக் குறிப்பிடலாம் இவரது மொழி பெயர்ப்பு நூல்களாக மாயாமீட்சி (2019 காலம் வெளியீடு) வெட்டுக்கிளிகளை ஒற்றுக் கேட்டல் (2013 காலச்சுவடு) காஷ்மீர் (2013 காலச்சுவடு) ஆகியற்றைக் குறிப்பிடலாம். இவரது வலைப் பூக்களான தமிழோடைக் கலைசொற்கோவை ஆகியவற்றிலும் அவரது மொழிபெயர்ப்புகள் உட்பட பல ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.*

*இந்நூலுக்கான முன்னுரைக் குறிப்பைக் காலம் ஆசிரியர் செல்வம் அருளானந்தம் அவர்கள் வழங்கியுள்ளார். அவர் தனது உரையில் மொழி பெயர்ப்புக் குறித்து ‘மணி வேலுப்பிள்ளைக்கு மிகவும் பிடித்த மேற்கோள் “மொழிபெயர்ப்பு என்பது ஒரே சமயத்தில் இரண்டு எசமானர்களுக்குப் பணிவிடை புரிவது” என்று புகழ்பூத்த இந்திய மொழி பெயர்ப்பாளர் சந்திராராஜன் தெரிவித்த கூற்றுத்தான்’ எனக் கூறியுள்ளதுடன் என்ன வாசிக்கிறீர்கள் என்று அவரைக் கேட்டால் மொழியைப் படிக்கிறேன் என்று சொல்வார் எனக் கூறியிருப்பதோடு பிற மொழிக் கதைகள் என்ற இத் தொகுப்பு உருவான வரலாற்றையும் எடுத்துக் கூறியுள்ளார்.*


*‘லண்டனில் உள்ள இலக்கியத் தொண்டர் பத்மநாப ஐயர் அவர்கள்* “A World of Great stories (Edited by Hiram haydan and John cournos Gramercy Books new York 2003)” *என்னும் திரட்டை மணி வேலுப்பிள்ளை அவர்களிடம் கொடுக்கும்படி தன்னிடம் ஒப்படைத்ததாகவும் அந்நூலில் 950 பக்கங்களில் இருந்த 113 கதைகளில் இருந்து 12 கதைகளைத் தேர்வு செய்தே இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார். இத்தொகுப்பில் இடம் பெறும் “வறட்சி” மாத்திரம் நேரே ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. ஏனையவை ஆங்கில மொழியெர்ப்பின் தமிழாக்கங்கள் ஆகும்’ என்றும் கூறகிறார் காலம் செல்வம் அவர்கள்.*

*இவ்வாறு பிறநாட்டுக் கதைகளைத் தமிழில் மொழிபெயர்க்கும் முயற்சிகள் முன்னரும் நிகழ்ந்துள்ளன. ஆயினும் புலம்பெயர் இலக்கியச் சூழலில் நிகழும் ஒரு மொழியாக்கப் படைப்பு என்ற வகையில் இத் தொகுப்பு முயற்சி முக்கியத்துவம் பெறுகின்றது. இத்தகைய படைப்பு அனுபவங்களை தமிழாக்கித் தர புலம்பெயர் இலக்கியப் படைப்பாளிகளால்தான் முடியும் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். தமிழில் இருந்து பிற மொழிகளுக்கும் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதும் அவசியமாகும். இத் தொகுதியிலுள்ளே பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அல்பேர்ட் காம்யு என்பவரின் ஈமச்சடங்கு என்ற கதை, கியூபா நாட்டைச் சேர்ந்த அல்பொன்சோ கட்டாவின் பணிப்பெண் என்ற கதை, அனத் தோல் பிரான்ஸ் என்பவரின் போலின் என்ற கதை,*

*இவற்றை விட அப்படி எல்லாம் நடந்தும் கூட, மதங்கொண்ட பள்ளத்தாக்கு தாய்மை என பன்னிரண்டு கதைகள் இங்கு மொழியாக்கம் செய்யப்பட்டு வெவ்வேறுபட்ட நாடுகளின் புனைவு அனுபவத்தை தமிழிற்குத் தருகின்றன. 186 பக்கங்களில் இந்நூல் அமைந்துள்ள வகையில் ஒவ்வொரு கதைகளின் நீட்சியையும் நாம் புரிந்து கொள்ள முடியும். அழகிய அட்டைப்பட வடிவமைப்புடன் காலம் வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது.*

*முதலாவது சிறுகதையாக அமையும் ஈமச்சடங்கு என்ற சிறுகதை பராமரிப்பகத்தில் விடப்பட்ட ஒரு தாயின் மரணம் பற்றிய கதையாக அமைகிறது. அந்த ஈமச்சடங்கின் கொண்டாட்ட முறையின் விபரிப்புக்கள் புதுமையான அனுபவமாக அமைந்தது. புலம்பெயர் சூழலில் வாழும் (தாயைப் பிரிந்து) ஈழத் தமிழருக்கும் இத்தகைய அனுபவங்கள் உண்டு. என்பதையும் மறுக்க முடியாது. தற்கால மரணச் சூழலில் வைத்து இக்கதையை படிக்கும் போது கொரோனா மரணச் சடங்குகள் பற்றிய நினைவுகள் ஏற்படுவதும் தவிர்க்க முடியாததாகிறது.*

*இரண்டாவது மொழியாக்கக் கதையாக பணிப்பெண் என்ற கதை அமைந்துள்ளது. இந்த தலைப்புக்கள் கூட ஒரு வகை மொழியாக்கமாகவே அமைகின்றன. ஸ்பெயின் தேசத்தில் இருந்து கியூபாவிற்குப் பணிப் பெண்ணாகச் சென்ற ஒரு பெண்ணின் கதையாக இது அமைந்துள்ளது. பணிப்பெண்ணாக அந்தத் தேசத்தில் அவள் பணி புரிந்த வீட்டில் அவளுக்குக் கிடைத்த அனுபவங்கள் அவனது காதல், மகனின் இழப்புப் போன்ற விடயங்கள் இக் கதையில் பேசப்படுகின்றன. பொதுவாக இக் கதைகள் அனைத்திலும் மணி வேலுப்பிள்ளையின் மொழியாக்கச் சிறப்புக்களையும் எம்மால் இனங்காண முடிகிறது. இக் கதையில் அவர் கையாளும் விறல் படைத்த இளம்பெண் பதை பதைக்கும் அவள் விழிகளில் இரு துளிகள் அரும்பின போன்ற வரிகளைக் குறிப்பிடலாம். இக்கதையின் மூலக் கதையை எழுதிய அல்பொன்சோ ஹொனான்டஸ் கட்டா என்பவர் கியூபாவில் பிறந்தவர். கியூப படைப்புக்களுள் முதன் முதல் வேற்று மொழிகளில் பெயர்க்கப்பட்டவை இவரது படைப்புக்களே. போலின் என்ற கதை போலின் பெண் பாத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு நினைவுகள் மூலமும், சில சம்பவங்கள் வழியாகவும், அரசியல் பின்புலத்திலும் பின்னப்பட்ட ஒரு கதையாக அமைந்துள்ளது.*




*மனிதரின் தலைவிதி என்ற கதை இந்தோசீன மக்கள் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக மேற்கொண்ட போராட்டத்தில் அதில் நடந்த படுகொலைகள், யுத்தக்கொடுமைகள் என்பவற்றை வெளிப்படுத்தும் கதையாக அமைகிறது. உருவனின் குதிரை உலுசரோ என்ற கதை உருவன், அவனது குதிரை என்ற பாத்திரங்கள் வழி அவர்கள் பயணித்த பயணங்கள் வழி நகர்த்தப்படும் ஒரு கதையாக அமைந்து புதிய அனுபவங்களைத் தருகிறது.*

*வறட்சி என்ற கதை நேரடியாக ஆங்கிலத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்ட கதையாக அமைகிறது. இதனை எழுதியவர் சிங்கப்பூரைச் சேர்ந்த சி.இராசரத்தினம் ஆவார். “இடைவிடாது வேகிய வெயிலில் துஞ்சிய நிலம் நடுங்கி முணங்கியது. உருகிய எரிமலைக் குழம்பிலிருந்து எழுவதுபோல் நிலத்திலிருந்து வெப்பம் சுழன்று கிளம்பியது என்ற மொழியாக்க வர்ணனைகளுடன் இக்கதை தொடங்குகின்றது. இவ்வாறு இதிலுள்ள அத்தனை கதைகளும் மொழியாக்கம் வழி வேறுபட்ட கதைகள். உலக அனுபவங்களுக்குள் எம்மை சஞ்சரிக்க வைக்கின்றன. இத்தகைய மொழியாக்கத்தைத் தந்த மணி வேலுப்பிள்ளை அவர்களையும் இதைப் பதிப்பித்த காலம் வெளியீட்டகத்திற்கும் இதனை கொடுத்துதவிய பத்மநாப ஐயருக்கும் தீம்புனல் புதுப்புனலின் வாழ்த்துக்கள்.* ■

# என்ன உலகமடா பரமானந்தா? 22

தமிழ்க்கவி

**கவிச்சியில்லாம எண்டைக்கடா சாப்பிட்டிருக்கிறன் போனாப்போகுதெண்டு ஒரு கருவாட்டுத்துண்டெண்டாலும் சுட்டு வச்சாத்தான்ரா சாப்பாடு இறங்கும் அப்பேர்க் கொத்த என்னை இந்தக் கொரோனா... கத்தரிக்காய்ப்பட்டினியில காயவிடவோ. இஞ்ச விடெண்டு என்ர புஸ்பக விமானத்தை உதைச்செழுப்பி கூட்டிக்கொண்டு வெளிக்கிட்டன்ரா... என்ன உலகமடா பரமானந்தா? ஏ நைன் வீதியால சயிற்று ரோட்டுக்க இறங்கினனண்டா...சொர்க்கம் அங்க தான்ரா இருக்கு**

'அடியே எண்டு கூப்பிட அவளைக் காணேல்லயாம். பிள்ளைக்கு என்ன பேர் வைக்கிறதெண்டு கேட்டானாம்.'

ஊர்முழுக்க லொக்டவுணுக்க கிடந்து அந்தரப்படுகிதுகள். அவா கலியாணம் பண்ண தரகரக் கண்டு பேசப் போறாவாம். தரகனும் என்ன விதம் விதமா சாதகம் பிறிம்பா, சகுனஞ்சரியில்லாட்டி பரிகாரம் பிறிம்பா, தோச நிவர்த்திக்குப் பூசையள் பிறிம்பா எண்டு வித விதமா குறிச்சுக் குடுக்கிறாராம். உந்த கிறகங்களையே தடுத்தாட்கொள்ளிற செகசாலக் கிறுக்கனுகளுக்கு உந்தக் கொரோனாவைக் கலைக்கிற பரிகாரப்பூசை எதெண்டு தெரியாமப்போச்சே.

ஒரு கிழமையா நானும் பேப்பர் இல்லாட்டியும் என்ன போச்செண்டிட்டு, கைபேசியளுக்கால வாற செய்தியள எல்லாம் ஒண்டும் விடாமத்தான் பாக்கிறன். என்ன ஒருத்தன் சொல்லுற செய்திய மற்றவன் வெட்டியோடுறான். ஆர் முதல் சொல்லுறதெண்ட போட்டியில சில அலைவரிசையில ஆடறுக்க முதல் ...குக்கு விலை சொல்லிப் போடுவாங்கள். பின்ன நாலா பக்கத்தால வாற செய்தியளையும் பாத்திட்டு மண்டையக் குழப்பிப் போட்டு 'ஆத்தாதவன் அப்பீல் கேட்டமாதிரி' சில பல வல்லவர்களைப் போனில கூப்பிட்டு அவையட்டயும் ஒரு வார்த்தை கேக்கிறதுதான். பின்ன எல்லாத்தையும் பாத்தென்ன செய்யிற, கேட்டென்ன செய்யிற. சுகாதாரத் துறை சொல்லுதாம் உப்பிடீயே நாட்டை முடக்கி வை எண்டு. ராணுவத்தளபதி சொல்லிறார் இந்தா இன்னும் ஒரு கிழமைக்கு அங்கால எல்லாம் சுபீச்சம்தான் எண்டு. எது? சுகம் வரும் ஆள் தப்பாது. எட கோதாரி முக நூலெண்டா என்ன? 'வாட்ஸ்அப்' பெண்டா என்ன?. எல்லாம் 'காண்ட்ஸ்அப்'தான். எது அஞ்சலி.

ஆனா என்ன சனம் முழுக்க ரோட்டிலதான். கொஞ்ச வாகனமோ பறியிது. தப்பித்தவறி கவனப் பிசகாப் போனியோ அள்ளி தகரத்திலதான் அடைக்க வேணும். அந்தமாதிரி வாகன ஓட்டமெடா. அதிலயும் எண்ணிக் கணக்கெடுத்தா தம்பீ நான் சொன்னதெண்டு பறைஞ்சு போடாதை. மணல் ஏத்தவும் மண் ஏத்தவுமா ஓடித்திரியிற டிப்பருகள் தான்ரா அதிகம்.

உங்கயொரு றிப்போட்டர் மணல் கொள்ளைக் கெதிரா எழுதிப் போட்டு கொஞ்சம் படம் போடுவமெண்டு கமராவோட போனவராம். ஆள் உயிரக் கையில பிடிச்சுக் கொண்டு திரும்பி வந்திருகிறார். எட எல்லாம் சினிமாவடா இனிச் சினிமாப்படத்துக்கு மதிப்பெங்க இஞ்சதான் சினிமா ஊருக்கயே ஓடுதே.

கனநாளா வீட்டுக்கயே அடைஞ்சு கிடக்கிறது ஆமான சாப்பாடில்லயடா தம்பி ஊருக்குப் பக்கமா பெருங் கோயிலுகள்ள திருவிழா எண்டா முழுச்சனமும் போயிரும். ஊருக்க வீட்டுக்கு வீடு ஒவ்வொருத்தர் நிப்பமெல்லோ அந்த மாதிரி கிடக்கு. வெறிச்சோண்டு. பின்ன மெள்ளமா காதக் குடுத்து கேட்டுப்பாத்தன் வாகனமோடி சத்தம் கேக்கிது. பின்ன நானும் கடை தெருவுக்க போய் சாமானச்சக்கட்டுகளை வாங்குவம் எண்டு வெளிக்கிட்டன்.

சொல்லக் கேள், புடவைக்கடை நகைக்கடை ரெண்டுந்தான் இல்லை. மற்ற எல்லாக் கடையும் திறந்து கிடக்கு. எப்பிடியெண்டா கொரோனா ஓடிவந்து பூராத படிக்கு பாதிக்கதவுமட்டும் திறந்து வச்சிருக்கினம். சொன்னனேயடா ஆமான கறிபுளிகண்டு கன நாளடா. வாய்க்கு ஒரு இதம்பதமில்லாத சாப்பாடு. பின்ன அவனாரோ சொன்னானெண்டு வீட்டுத் தோட்டம் போட்டனா...சிரிக்காதை எனக்குப் பத்திக் கொண்டு வருது. கத்தரிக்காய் குழம்பு திங்கக்கிழமை. கத்தரிக்காய் பால் கறி செவ்வாக்கிழமை கத்தரிக்காய் பொரியல் புதன் கிழமை. கத்தரிக்காய் எண்ணைப்பிரட்டல் வியாழக் கிழமை. கத்தரிக்காய் பொரிச்ச சம்பல் வெள்ளிக் கிழமை. கத்தரிக்காய் வேட்டைக்கறி சனிக்கிழமை. கத்தரிக்காய் கருவாடு போட்டு சுண்டல் ஞாயித்துக் கிழமை. அதோட அப்பப்ப வல்லாரை, புதினா சம்பல் நீத்துப்பூசணிகறி, கீரை, முருங்கைக்காய், முருங்கையிலை பின்ன இதைவிடுறதே. வாழைப்பூ வறை, நல்ல காலம் பாகலும் தக்காளியும் காச்சு ஒய்ஞ்சு போச்சு. எடேய் தெருவால ஒரு மீன்காரன் காங்க்காங்க்கெண்டு கோணடிச்சுக் கொண்டு வாறாண்டா எப்பபார் துள்ளுமண்டைதான். வலையால பொறுக்கிப் போடுற கழிவுகள நேரா அடுக்கி கொண்டாறான். துள்ளுமண்டைக்கு விலை கேட்டா அவன்ர மண்டைக்கு விலை சொல்லுவான்.

உப்பிடி மரக்கறியில வளந்த உடம்போடா இது. இண்டைக்கும் பார் அலவாங்க விழுங்கின மாதிரி திரியிறனென்டா என்ர சாப்பாடு அப்பிடியடா...ஹஹ

கவிச்சியில்லாம எண்டைக்கடா சாப்பிட்டிருக்கிறன் போனாப்போகுதெண்டு ஒரு கருவாட்டுத்துண்டெண்டாலும் சுட்டு வச்சாத்தான்ரா சாப்பாடு இறங்கும் அப்பேர்க் கொத்த என்னை இந்தக் கொரோனா... கத்தரிக்காய்ப்பட்டினியில காயவிடவோ. இஞ்ச விடெண்டு என்ர புஸ்பக விமானத்தை உதைச்செழுப்பி கூட்டிக் கொண்டு வெளிக்கிட்டன்ரா... என்ன உலகமடா பரமானந்தா? ஏ நைன் வீதியால சயிற்று ரோட்டுக்க இறங்கினனண்டா...சொர்க்கம் அங்கதான்ரா இருக்கு. கோழி இறைச்சிக்கடையா மாட்டிறைச்சிக்கடையா மீன் கடையா மரக்கறிக்கடையா...பொறு இந்த இடத்தில நான் ஒண்டை சொல்லியே ஆகவேணும். முந்தநாள் வெள்ளிக்கிழமை ஒரு மரக்கறி வாகனம் பெரியளவில் ஒலிபெருக்கி வச்சு 'உங்கள் படலைக்குள்ள விடலைப் பெடியள் கடலை போடவாறம்' எண்டமாதிரி கலாதியான அறிவித்தலோட கேக்க, நானும் போய் கடை வைக்க நிண்டன். சும்மா சொல்லக்கூடாது. சூப்பர் மரக்கறியள். பளபளண்டு வாகனத்துக்கு பின்னால தராசோட ஒருத்தர். முன்னால ரெண்டு பேர். ஒருத்தர் சாரதி மற்றவர் சிண். பின்னால போய் நான் 'தேசிக்காய் என்ன விலை' எண்டன். 'காக்கிலோ நூறு ரூவா' எண்டான். அடுத்த பொருள நான் கேக்க முதல் சிண் ஓடிவந்தான். 'அம்மா கெதியா எடுங்கோ நாங்கள் வட்டக்கச்சிக்குப் போகோணும்' எண்டான். எனக்கு அண்...சொரி... கண்ட இடமெல்லாம் பத்திட்டு கண்டியோ.. "டேய் எர்றா வாகனத்தை வட்டக்கச்சிக்கு போற நீ எதுக்கு இந்த ரோட்டுக்க வந்தநீ" எண்டு பிடிச்சு கலைச்சு விட்டிட்டன். இண்டைக்கு இந்தத் தெருவில நல்ல மலிஞ்ச விலையில தேவையானதை வாங்கினன். இறைச்சியும்.. வாங்கினன். அப்பிடியே ஒரு மாயத்துக்கு தேவையானதெல்லாம் வாங்கிக் கொணந்து போட்டிட்டு பஞ்சியில சமைக்காம படுத்திட்டன். மெய்தான்ரா வீட்டில காசு பணம் பொருள் இருந்தா பசிக்காதுடா.



ஒன் லைனில சாப்பாடு ஓடர்பண்ணலாம் பின்ன கிளிநொச்சியில இப்ப அதாவது இந்த லொக்டவுணுக்க அந்த வசதியும் இருக்கு. பின்ன யோயிச்சுப்பார்...என்ர அப்பர் சொல்லுவார் "ஆனையிட மயிர ஆரால புடுங்கேலும்" எண்டு. கோவிட் நைன்ரீன். வந்த நேரம் அவர் இல்லை. இருந்தாலும் அந்தாள் கிறுங்காதுடா. வேலியடைக்க வந்த மூர்த்தி சொன்னான். தன்ர மோனுக்கு ஒன்லைன் சாப்பாடுதான் பிரியமாம். என்னதான் நடக்குதிங்க? அரசாங்கம் சொல்லுற ஊரடங்கு ஆருக்கு. " எருமை மாட்டில மழைபெஞ்ச மாதிரித்தான்" கிடக்கு.

சனமும் பழகிட்டுதடா. வெளிநாடுகளில வாழுற சனத்தைவிடவே எங்களுக்கு வந்திட்டுது. என்ன முன்ன மாதிரி சினிமா தியேட்டருகள் இல்லை. அதான் வீட்டுக்குள்ளயே வந்திட்டுதே. விளையாட்டு மைதானங்களும் பின்னேரத்தில பொடியளின்ர பிழக்கம் அதிகமாயிட்டுது. பொடியள் போலடிக்க மாகாணங் கடந்தும் போற மாதிரித் தெரியுது. வேலைதேடி செய்யிறவன் செய்யிறான், சாப்பிடுறான். லொக்டவுணப் பாத்துக் கொண்டு வீட்டுக்க கிடக்கிறவன் பட்டினி கிடக்கிறான். அவனவன் பாஸெடுத்துக் கொண்டு போற இடமெல்லாம் போறான். பிறகு ஆருக்கு லொக்டவுண். ஆண்டவனுக்குத்தான் தெரியும். ■

## ஒரு சீவனின் ஏக்கம்

எங்கும் நிசப்தம்
ஏதிலி மாந்தரின்
முகத்தில் பீதி ரேகைகள்
பிரபஞ்ச பூமியில்
ஒருயிர்தானே நாமும்
உதிர்ந்து விழும் பூவின்
இதழ்போல ஆகிவிடுவோமா
பட்சிகளோ மவுனம்
வெறுமையுடன்
தொங்கும் கூடுகள்

நகரும் கரு முகில்களோ
வேலை நிறுத்தத்தில்
ஆர்ப்பரிக்கும் சமுத்திரமோ
ஆழ்ந்த ஓய்வில்
ஆதவனின் தூக்கம்
பாரெங்கும் கும்மிருட்டாய்
வசந்த கால காற்று
எங்கோ தொலைந்து போனது
வெற்றுவெளியோ
சூனியப்பிரதேசமாய்

யாரோ ஒருவனின்
காலடித்தடம்
அம்மண்ணில்-எப்படி?
மனச்சாட்சியற்ற உலகால்
உலக பாறாங்கல்லில்
நசிங்கிப்போகிறோம்-நாம்
கால நகர்வு சுதந்திரமாய்
கற்பை சூறையாடுகிறது
மனதில் இனம்புரியா
ஏக்கவெண்ணங்கள்
விரிந்தன பல திசைநோக்கி
இதயமோ நிரப்ப முடியா
வெற்றிடமாய்



சுவிஸிலிருந்து பொலிகை ஜெயா

## அவற்றோரன்ன... இவற்றோரன்ன...

# உலகத் தமிழிலக்கிய வரைபடம் என்னும் கருத்துரு



பேராசிரியர் அ.ராமசாமி



இலங்கைத்தீவிலும் இந்தியத்துணைக் கண்டத்திலும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே தமிழர்கள் வாழ்கிறார்கள். கலை, இலக்கியப் பனுவல்களை உருவாக்கியிருக்கிறார்கள். தமிழ் மொழியின் ஆரம்பகால நிலப்பகுதி இன்று இரண்டு நாடுகளுக்குள் இருக்கும் பகுதிகளாக இருக்கின்றன. தமிழ்நாடு இந்தியாவின் பகுதியாக - ஒரு மாநிலமாக அறியப்படுகிறது. இலங்கையில் ஈழமாக அறியப்படுகிறது. இவ்விரு பகுதியும் இணைந்த நிலப்பரப்பே தமிழின் தொன்மை இலக்கியங்களான சங்கச் செவ்வியல் இலக்கியத்தின் பரப்பு. செவ்வியல் இலக்கியங்களில் தொடங்கிப் பின்னிடைக்காலமான சிற்றிலக்கியங்களின் காலம் வரை தமிழ் இலக்கியப்பரப்பு என்பது ஈழத்தமிழ்ப் பகுதிகளையும் உள்ளடக்கியதாகவே இருந்துள்ளது. 'ஈழத்து..' என்னும் முன்னொட்டோடு கூடிய கவிகளின் பெயர்களையும் கவிதைகளையும் தமிழ்க் கவிதைத்தொகுதிகளுக்குள் வாசிக்க முடியும்.

இடவேறுபாடுகளற்று, மொழியால் பிணைக்கப்பட்ட இந்தத் தொடர்பை அறுத்ததில் காலனி ஆதிக்க நாடுகளின் பங்குண்டு. 16 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு ஐரோப்பியர்கள் வருகையைச் சந்தித்தன தூர கிழக்கு நாடுகளும் ஆப்பிரிக்க நாடுகளும். வணிகம், சமயப்பரப்பல் ஆகியவற்றின் தொடர்ச்சியில் ஆட்சி அதிகாரத்திற்குள் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கினார்கள் அவர்கள். ஐரோப்பா தவிர்த்துத் தங்களின் ஆளுகைக்குட்பட்ட காலனித்துவ நாடுகளின் மனிதர்களை அவர்களின் உற்பத்தி மற்றும் வணிகப்பிரிவுப் பணிகளில் கூலிகளாக மாற்றினார்கள். மாற்றப்பட்ட கூலிகள் புலம்பெயர்க்கப் பட்டார்கள். தமிழ்நாட்டுத் தமிழர்கள் மலேசியா, சிங்கப்பூர், பர்மா, இலங்கையின் மலையகம், மொரீசியஸ் போன்ற நாடுகளுக்குப் பெயர்ந்து அந்நாட்டின் குடிகளாகவே மாறியது முதல் புலப்பெயர்வு காலகட்டம். அக்காலகட்டத்தில் புலம் பெயர்ந்தவர்கள் தங்களுக்குள் பேச்சு மொழியாகத் தமிழைத் தொடர்ந்து கொண்டே, எழுத்து மொழியாகவும் கற்றல் மொழியாகவும் அந்தந்த நாட்டு மொழிகளுக்குள் இயங்கியிருக்கிறார்கள் தமிழர்கள். தாய்லாந்து, மொரீசியஸ் நாட்டுத்தமிழர்களிடம் தமிழ் இப்படித்தான் இருக்கிறது.

தமிழ்மொழி பேசும் மனிதர்களின் வாழ்க்கையில் காலனியம் ஏற்படுத்திய பெருந்தாக்கத்தைப் போலவே இலங்கையின் தனி ஈழப்போராட்டமும் பெருந்தாக்கத்தை உண்டாக்கியிருக்கிறது. போராட்ட காலமும் போருக்குப்பிந்திய காலகட்டமும் அகதிகளாகப் பல நாடுகளுக்குப் பெயர்ந்து வாழச்செய்திருக்கின்றன. தனி ஈழப்போராட்ட கால கட்டத்தில் உலகப் பொருளாதார உறவிலும் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. முதலாளித்துவம் புதுவகைக் காலனிய நடைமுறையொன்று உருவாக்கியது. தாராளமயம், தனியார் மயம், உலகமயம் என்னும் நடைமுறைகளுக்குள் உலக மனிதர் களைக் கொண்டுபோய்ச் சேர்த்தது. அதன் விளைவாக மொழி, இனம், சமயம் போன்ற அடையாளங்களை மறந்ததோடு நாட்டெல்லைகளையும் கடந்து பயணிக்கத் தயாரானார்கள்.

ஈழப்போர் காரணமான புலப்பெயர்வுக்கு முன்பே தொழில் வாய்ப்புக் காரணமாகவும் புலப்பெயர்வுகள் நிகழ்ந்தன. இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் கல்வி கற்று, அதன் வழியாகக்கிடைத்த வேலை வாய்ப்பினால் இங்கிலாந்திற்கும், ஆங்கிலேயர்களின் குடியேற்ற நாடான ஆஸ்திரேலியாவிற்கும் ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்ததைப் போலவே இந்தியத் தமிழர்களும் பெயர்ந்தார்கள். அவர்களின் புலப்பெயர்வு ஆஸ்திரேலியாவில் அதிகம் இல்லை. அதற்கு மாறாகச் சிங்கப்பூர், வளைகுடா நாடுகள் போன்றவற்றிற்கு அதிகம் இருந்தன. அப்புலப்பெயர்வுகளைத் தாண்டி 1990 களுக்குப் பிறகு உருவான தகவல் தொழில்நுட்பப்பெருக்கம் இன்னும் கூடுதலான புலப்பெயர்வுகளைச் சாத்தியமாக்கியிருக்கின்றன. இப்புலப்பெயர்வுகள் எல்லாம் தமிழை, தமிழ்ப்பண்பாட்டை, தமிழ் இலக்கியத்தைப் பன்னாட்டு அடையாளத்திற்குரியதாக ஆக்கியிருக்கின்றன என்பதை நேர்மறைப் பார்வையோடு அணுகவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

குறிப்பிட்ட ஒருமொழியைப் பேச்சு மொழியாகக் கொண்ட மனிதர்கள் வெவ்வேறு நிலவியல் பின்னணியில் வாழ நேர்வதில் மகிழ்ச்சிகளும் உண்டு துயரங்களும் உண்டு. 'இது என்நாடு' என்ற எண்ணம் உண்டாக்கும் மகிழ்ச்சிக்குள்ளேயேகூட, எனது ஊரில் சுற்றமும் பந்துக்களும் சூழ வாழமுடியவில்லையே என்ற எண்ணங்களும் உருவாவதைத் தவிர்க்கமுடியாது. புலப்பெயர்வுகள் மட்டுமல்லாமல் ஒரே நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்து வாழ்பவர்களுக்கும் இவ்வகையான இழந்ததின் நினைவுகள் இலக்கிய உரிப்பொருள்களே.

இடப்பெயர்வுகள் உருவாக்கும் துயரங்களுக்கு முதன்மையாக இருப்பன பொருளாதாரக் காரணங்களே. வேலை தேடியும் தொழில் செய்வதற்காகவும் அலையும் அல்லது இடம்பெயரும் மனிதர்களின் துயரங்களை உணர்வுகளைத் தமிழ் உள்ளிட்ட இந்திய மொழிகள் பலவற்றின் இலக்கியங்களும் பதிவுசெய்துள்ளன. இந்திய மொழிகளில் இங்கிலாந்திற்கும் ஐரோப்பாவிற்கும் அமெரிக்காவிற்கும் தனியார் நிறுவனக் கூலிகளாகவும் சிறுகுறு வியாபாரிகளாகவும், தொழில் ஆர்வலர்களாகவும் புலம்பெயர்ந்தவர்களின் இலக்கியங்கள் அதிகம் கிடைக்கின்றன. குறிப்பாகக் குஜராத்திகளும் ராஜஸ்தானிகளும் அதிகமாக மேற்கு நாடுகளில் சிறுவியாபாரிகளாக இடம் பெயர்ந்திருக்கிறார்கள். இடம்பெயர்ந்த நிலையில் குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் பண்பாட்டு நெருக்கடிகளைப் புனைவுகளாக்கியுள்ளனர்.

தமிழ்நாட்டுத் தமிழர்களில் உயர் மத்தியதர வர்க்கம் இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் உயர் சம்பளக்காரர்களாகப் பெயர்ந்து அங்கேயே நிலைபெற்றுவிட்ட வாழ்க்கையில் சந்தித்த பண்பாட்டுச் சிக்கல்கள் அதிகம் பேசப்பட்டுள்ளன. அதன் மறுதலையாக வளைகுடா நாடுகளுக்குக் கூலிகளாகச் சென்றவர்களின் பாடுகளைத் தமிழின் புனைவுகளும் மலையாளப் புனைவுகளும் எழுதிக்காட்டுகின்றன.

இந்திய மொழிகளில் இடம்பெற்றுள்ள புலம்பெயர் எழுத்துகளுக்கு மாறாகத் தமிழின் -குறிப்பாக ஈழத்தமிழின் புலப்பெயர்வு அமைந்துள்ளது. உற்றாரையும் ஊரையும் நாட்டையும் இழந்து ஏதுமில்லாத - ஏதிலிகளாகப் பல நாடுகளுக்கும் செல்ல நேர்ந்தது பெரும் துயரமென்றாலும், இந்த அனுபவம் இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும் பிற தேசிய இனங்களுக்குக் கிடைக்காத அனுபவம். தமிழ்மொழி பேசும் ஒரு தேசிய இனம் அவற்றைத் தனது மொழியின் வளமான இலக்கியமாக மாற்றிக்கொண்டதின் மூலம் செல்வமாக மாற்றியிருக்கிறது. இதனைத் துயரத்தின் பகுதியாகப் பார்க்காமல், நேர்மறைப் பலனாகப் பார்க்கவும் முடியும்.

ஈழநாட்டுக்கோரிக்கையின் விளைவாக நடந்த போர்கள் தமிழ்பேசும் மனிதர்களை உலகின் பலநாடுகளுக்கும் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கிறது. அகதிகளாகப் போனவர்கள், அந்தந்த நாட்டுக் குடியேற்றச் சட்டங்களுக்கேற்ப இரண்டாம் நிலை, மூன்றாம் நிலைக் குடிமக்களாக ஆகியிருக்கின்றனர். அங்கு வாழநேர்ந்தபோது குடியேற்றப் பிரச்சினைகளோடு தனிமனித, குடும்பச் சிக்கல்களும் பண்பாட்டு நெருக்கடிகளும் ஏற்படுவது தவிர்க்கமுடியாதவை. அவற்றைப் பதிவுசெய்து எழுதப் பெற்ற தமிழ் இலக்கியம் உலகத்தமிழ் இலக்கிய வரைபடத்தை உருவாக்கும் எண்ணத்தைக் கல்வியுலகத்திற்கு உருவாக்கியிருக்கிறது.

காலனிய அதிகாரத்தை உருவாக்கித் தந்த ஐரோப்பிய நாடுகள், தங்கள் நாட்டு மனிதர்களை அதிகாரிகளாகவும் அலுவலர்களாகவும் அனுப்பிவைத்ததையே கதைகளாகவும் கவிதைகளாகவும் எழுதிவைத்த இலக்கியங்களைக் கொண்டு உலக இலக்கிய வரைபடங்களை உருவாக்கியிருக்கிறார்கள். உலகின் பல நாடுகளில் பேசப்படும் மொழியாகவும் அதிகாரத்துவ மொழியாகவும் இருக்கும் ஆங்கிலத்தின் உலக இலக்கிய வரைபடத்திற்குள் அமெரிக்க ஆங்கில இலக்கியம் தனித்துவத்தோடு இருக்கிறது. அதற்கிணையாக ஆபிரிக்க ஆங்கில இலக்கியம், ஆஸ்திரேலிய ஆங்கில இலக்கியம் போன்றனவும் இருக்கின்றன. இந்தியப் பல்கலைக்கழகங்களில் கூட இந்திய ஆங்கில இலக்கியம் தனித்ததொரு துறையாக வளர்ச்சி பெற்றுள்ளது. இதற்கிணையாக உலக வரைபடத்தைக்கொண்ட இன்னொரு மொழியாக பிரெஞ்சு மொழி இருக்கிறது. லத்தீன் அமெரிக்காவிலும் கனடாவிலும் ஆபிரிக்காவிலும் பிரெஞ்சு இலக்கியம் தனி அடையாளத்தைக் கொண்டு வளர்ந்துள்ளன. அவ்விரண்டிற்கும் அடுத்ததாக ஸ்பானிய மொழியின் இலக்கியங்கள் தென்னமெரிக்கப் பரப்பிலிருந்தும் ஆபிரிக்க நாடுகளிலிருந்தும் கிடைக்கின்றன. உடைபடாத சோவியத் யூனியன் இருந்த காலத்து ருஷ்ய இலக்கியம் அதன் நட்பு நாடுகளான போலந்து, செக், ஹங்கேரி போன்ற நாட்டுப்பரப்பிலிருந்தும் கிடைத்தன.

19 ஆம் நூற்றாண்டு வரை தமிழ் இலக்கியப்பனுவல்கள் இந்தியா, இலங்கை என இருநிலப்பரப்பிலிருந்து மட்டுமே கிடைத்து வந்தன. ஆனால் இன்று தமிழ் இலக்கியப்பனுவல்கள் அனைத்துக் கண்டங்களிலிருந்தும் கிடைக்கின்றன. பூர்வீகத் தமிழ் நிலங்களைத் தாண்டி 20 ஆம் நூற்றாண்டில் தொடக்கத்தில் மலேசியத் தமிழர்களும் அவர்களைத் தொடர்ந்து சிங்கப்பூர்த் தமிழர்களும் தங்களின் இருப்பை இலக்கியப் பனுவல்களில் பதிவு செய்யத் தொடங்கினர். இவ்விரு நிலைப்பரப்பிலிருந்து கிடைக்கும் தமிழ்ப்பனுவல்களில் தமிழ் நாட்டிலிருந்து புலப்பெயர்ந்த மன அலைவுகளும், புலம் பெயர்ந்த இடங்களில் இருப்புக்கொள்ள முடியாமல் தவித்த தவிப்புகளும் பதிவாகிக் கொண்டிருக்கின்றன. இரண்டாம் தலைமுறை மூன்றாம் தலைமுறைத் தமிழர்களின் இலக்கியப்பனுவல்களில் அந்த மனம் காணாமல் போக, இப்போதுள்ள நாட்டின் பண்பாட்டு நடவடிக்கைகளில் தங்களின் இடத்தை உறுதிசெய்யும் நோக்கங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அந்த முனைப்பை மலேசிய, சிங்கப்பூர் தமிழர்களின் புதிய தலைமுறை எழுத்துகளில் அதிகம் காணமுடிகிறது.

2000 -க்குப் பின்னான ஈழத்தமிழர்களின் புலம்பெயர் தமிழ் இலக்கியம். இலக்கிய உருவாக்கத்திற்குத் தூண்டுகோலாக இருக்கும் பாதிக்கப்பட்ட -விளிம்புநிலை மக்களின் தொகுதியின் குரலாக வெளிப்படுகின்றது. அவர்களின் வெளிப்பாடுகள் பெரும் தொகுப்புகளாகக் கிடைக்கின்றன. லண்டன், பாரிஸ், கனடாவின் டொரண்டோ, ஆஸ்திரேலியா, நோர்வே போன்ற இடங்களிலிருந்து இயங்கும் ஈழத்தமிழ் குழுக்களின் தொகுப்புகள் பற்றிய அறிமுகங்களும் விவாதங்களும் முன்னெடுக்கப்பட வேண்டும். அ.முத்துலிங்கம், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், சேரன், ஷோபா சக்தி, குணா கவியழகன், நோயல் நடேசன் போன்ற தனித்த ஆளுமைகளின் எழுத்துகள் தொடர்ந்து வாசிக்கக் கிடைக்கின்றன. புதிதாகத் தொடங்கப் பட்டுள்ள இணைய இதழ்களின் தொகுப்புகளும் தொடர்ந்து இணையத்தில் கிடைக்கின்றன.

மலேசியாவிற்கும் சிங்கப்பூருக்கும் இடம்பெயர்ந்த சூழல்களும் பாடுகளும் எழுதப்பட்டுள்ளன. மொரீசீயஸ், அரபு நாடுகள், ஆபிரிக்க நாடுகள் போன்றவற்றிற்குப் போய் அடையாளமிழக்கும் மனிதர்களாகவும் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். அவையெல்லாமும் தொகுக்கப்படவேண்டும். அவற்றிலிருந்து உலகத் தமிழ் இலக்கிய வரைபடத்தை உருவாக்க முடியும். இந்த வரைபடத்தில் தமிழ் நாட்டுத் தமிழ் இலக்கியத்தின் இடத்தையும் மதிப்பிட வேண்டும்.

இப்படியான பெருந்திட்டத்தைத் தனிநபர்களால் நிறைவேற்றிட இயலாது. பல்கலைக்கழக ஆய்வுகளின் வழியாகவே இந்த இலக்கை அடையமுடியும். அதுவும் கூட ஒரேயொரு பல்கலைக்கழகத்தின் ஒரு துறை வழியாக நிறைவேற்றுதல் சாத்தியமில்லை. தமிழ்நாடு, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் பல்கலைக்கழகங்களின் ஒருங்கிணைப்போடு ஐரோப்பியாவிலும் கனடாவிலும் இயங்கும் தமிழ் இருக்கைகளும் இணைந்தால் இந்தத்திட்டம் முழுமையாக நிறைவேறும். அதன் முடிவில் உலகத்தமிழ் இலக்கிய வரைபடமும் அதன் பெருந்தொகைகளும் தமிழ்மொழியின் வளமாக எதிர்காலத்திற்குக் கைளிக்கப்படும். ■

# நலமும் நாமும் .....?



வேதநாயகம் தபேந்திரன்

“இரவு சாப்பிட்டவுடன் கையைக் கழுவிக் கொண்டு நித்திரைக்குப் போவதை வாடிக்கையாகக் கொண்டோருக்கு ஆயுள் குறைவு. கெதியா மேலே போய்ச் சேர்ந்து விடுவார்கள். சாப்பிட்டு இரண்டு மணித்தியாலத்துக்குப் பின்னர் நித்திரைக்குப் போவதை நாளாந்தப் பழக்கமாக வைத்திருப்போர் சுகதேகியாக இருப்பதற்கு வாய்ப்பு அதிகம்”

மூத்தவர் ஒருவர் அண்மையில் பேச்சுவாக்கில் உரைத்த வாசகமே அது.

உணவும், உணவுப் பழக்க வழக்கங்களும் மருந்தான ஒரு வாழ்க்கை முறை முன்பு எம்மிடம் இருந்தது. கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறையில் மூத்தோர்களின் சொல்கேட்டு நடந்து திடகாத்திரமாக நீண்ட ஆயுளுடன் வாழ்ந்தார்கள். உடற்பயிற்சி தந்த பழக்க வழக்கங்கள் இருந்தன.

அந்த வாழ்க்கை முறையைப் பெருமளவுக்குத் தொலைத்து விட்டோம்.

இன்று ஊருக்கு ஊர் நடைப்பயிற்சிக் கழகம் உருவாக்குமளவுக்கு நடைப்பயிற்சி செய்வோர் தொகை அதிகம். கோவிட் 19 தந்த நாடளாவிய பொதுமுடக்கம் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

உடல் ஆரோக்கியத்துக்கு ஏற்ற நடைப்பயிற்சி செய்வோர் தொகை குறைவாகவும், பைம்பலுக்கு நடைப்பயிற்சி செய்வோர் அதிகமாகவும் உள்ளதனைப் பார்க்கிறோம்.

சுகதேகியாக வாழ ஆசைப்படும் பலர் நாளாந்த உணவுப் பழக்கத்தின் மூலமாக ஆரோக்கியமாக வாழ்வது எப்படி என்பதைத் தெரியாமல் உள்ளனர்.

இரவு உணவுப் பழக்கத்தை முதற் பந்தியில் குறிப்பிட்டேன். எனது அனுபவத்தில் இது உண்மை. எனது தந்தையாரின் வழி நடத்தலில் கற்ற உண்மை.

உண்ட பின் நூறடி உலாவுதல் என்பது உடல் ஆரோக்கியத்திற்கு உகந்தது. அப்படிச் செய்தால்தான் உணவு சமிபாடு அடையும். உணவு உண்ட பின் அதே இடத்தில் அசையாமல் கொள்ளாமல் இருந்து அளவளாவுவோர் தான் அதிகம். இதனால் தமது ஆரோக்கியத்தைத் தொலைத்து விடுகின்றனர்.

நித்திரை மனிதர்களின் ஆரோக்கியத்துக்கு முக்கியமானது. இணையப் பாவனையில் இரவிரவாக மூழ்கி விட்டு இரவு பதினொரு மணி தாண்டி நித்திரை கொள்வோர் தொகை அதிகரித்து வருகிறது. இதனால் அதிகாலை துயில் எழும் பழக்கம் பெருமளவில் குறைந்து வருகிறது. வயதுப் பருவத்திற்கேற்ப நித்திரை கொண்டு அதிகாலை நாலரை மணி அல்லது ஐந்து மணிக்கு துயில் எழுவோர் ஆரோக்கியமாக நீண்ட காலம் வாழ்வதனை அவதானிக்கலாம்.

அதிகாலையில் நித்திரை விட்டு எழுவோர் வாரத்தில் ஒரு நாளை மேலதிகமாகப் பெறும் சுறுசுறுப்பை அடைவார்கள். இவர்களது வாழ்க்கையில் வெற்றிகள், சாதனைகள் நிறைந்திருப்பதனைக் காணலாம்.



கலைஞர் கருணாநிதி இதற்கு மிகச் சிறந்த உதாரணம்.

அதிகாலை நித்திரை விட்டு எழுந்த உடன் வாயைக் கொப்பளித்து விட்டு தூயநீர் ஒரு ரம்ளர் அருந்துதல் உடல் ஆரோக்கியத்துக்குச் சிறந்தது. ஒருவர் நித்திரை கொள்ளும் போது அவரது சிறுநீரகம் இரவிரவாகத் தொழிற்பட்டு கழிவாக உப்பை வெளியேற்றி இருக்கும். அந்த உப்பைக் கழுவிச் சிறுநீராக வெளியேற்றுவதற்கு தூயநீர் அவசியமாகும். ஆகவே நீரை அருந்துவதன் மூலமாக சிறுநீரகத் தொகுதி சிறப்பாகத் தொழிற்பட்டு சிறந்த ஆரோக்கியம் பேணப்படும்.

இதை விடுத்துக் காலையில் தேநீர் அருந்துவதை முதல் பழக்கமாகக் கொண்டால் உடல் ஆரோக்கியம் கெட்டு விடும்.

நாளாந்த உணவில் ஏதாவது ஒரு பழத்தைச் சேர்ப்பவர்கள், கீரை வகை ஒன்றைச் சேர்ப்பவர்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் வாழ வாய்ப்பு உள்ளது. கீரை வகையைச் சமைத்தால் அதனை ஒரு மணித்தியாலத்தினுள் உண்ண வேண்டும். அப்போது தான் அதன் போசணைப் பெறுமானங்கள் உடலினுள் சேரும். இது பலருக்குத் தெரிவதில்லை.

காலைக் குளிப்பே சாலச் சிறப்பு. நித்தம் குளித்தால் மெத்தச் சிறப்பு. மெத்தக் குளித்தால் இரத்தம் சாகும். இது எமது முன்னோரது அனுபவமொழி. ஒரு நாளைக்கு இரண்டு, மூன்று முறைகள் குளிப்பதையும் அதிக நீர் பாவித்துக் குளிப்பதையும் தவிர்க்க வேண்டும் என்பதே இதன் பொருள்.

காலையிலும் இரவிலும் சாப்பிட்டவுடன் தேயிலை மூலமாகத் தயாரிக்கப்படும் பிளேன் ரீ அல்லது பால் தேநீர் அருந்துவதைப் பலர் வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். தேயிலையில் உள்ள நிக்கொட்டீன் எனும் இரசாயனம் உணவிலுள்ள இரும்புச் சத்தை அழித்து விடுகின்றது. அதனால் தேநீர் அருந்துவதைத் தவிர்த்து விடல் வேண்டும்.

கொழுப்பு அதிகம் உள்ள உணவுகளை உண்ட பின்பாக வெந்நீர் அருந்தும் பழக்கம் பலரிடம் உள்ளது. அவ்வாறு செய்தால் சாப்பிட்ட உணவிலுள்ள கொலஸ்ட்ரோல் அழிந்து விடும் என்கின்றனர். இதில் எந்தவிதமான மருத்துவ உண்மைகளும் இல்லை. இது மிகவும் தவறான ஒரு பழக்கம்.

இப்படியான மூடநம்பிக்கைகள் பல களையப்பட்டு ஆரோக்கியமாக வாழ்தல் தொடர்பான சரியான பழக்க வழக்கங்கள் பொதுச் சமூகத்திற்கு வழங்கப்படுதல் வேண்டும்.

இயற்கையுடன் இணைந்து வாழ்வது என்பது எமக்கு மிகவும் இன்றியமையாதது. இயற்கையில் கிடைக்கும் இரசாயனம் எதுவும் கலக்காத வாழைப் பொத்தி, தூதுவளை, முசுட்டை, முடக்கொத்தான், பசளி, கறி முருங்கை இலை,முருங்கைக்காய், வாதனாராணி இலை, சண்டி, தவசி முருங்கை, மொசுமொசுக்கை என ஏராளம் செடிகொடிகள் உள்ளன. இவற்றை உணவில் சேர்த்து வந்தால் எமது உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பல நோய்களையும் நீக்க முடியும்.

மரபணு மாற்றப்பட்ட உணவுகளை அதிகம் உண்போரது உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியும் குறைவாக இருக்கும். அதற்கு நிறைய உதாரணங்களைச் சமீப காலத்தில் கண்டு விட்டோம்.

இயற்கையாக விளையும் மரக்கறிகள், மூலிகைகள், கால்நடைகள், மீன் வகைகள் மூலமாக எமது உடல் நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெறும். ஆரோக்கியமாக வாழ முடியும்.

எல்லைப் பிரச்சினை, வேலியடைக்க ஆள்களைப் பிடிக்க முடியாமை, மரங்களது சருகுகளைக் கூட்டித் துப்பரவாக்க ஆள் இன்மை போன்ற காரணங்களால் உயிர்வேலிகளை அறுத்தெறிந்து மதில்களாக மாற்றுகின்றோம்.

வேலி நிழலில் இருந்து வாசித்தல், ஓய்வைக் கழிப்பதில் கிடைக்கும் ஆனந்தத்தைப் பற்றிய அக்கறை குறைந்து விட்டது. உயிர் வேலிகளை, பயனுள்ள மரங்களை அழித்து பூமித் தாயின் சமநிலையைக் குறைக்கின்றோம்.

> **“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்றார்கள். அது வெறும் ஏட்டுக் கல்விச் சொல்லாக மட்டுமே உள்ளது. இதனால் தான் தனியார் வைத்தியசாலைகள் ஒரு பெரும் வணிகக் கட்டமைப்பாக வந்து விட்டன. பணக்காரக் குடும்பங்களுக்கு அது பிரச்சினையில்லை. ஆனால் பெரும் வீதத்தில் உள்ள நடுத்தரக் குடும்பங்கள் இந்த வணிகக் கட்டமைப்பிடம் சிக்கிக் கடன்கார வாழ்க்கை வாழ்கின்றனர்.”**

பருவகால மழை வீழ்ச்சியின் ஒழுங்கற்ற தன்மையால் பாதிப்பை எதிர்கொள்கின்றோம்.

மதில்கள் கட்டுவோர் வருடாவருடம் அரசாங்கத்திற்குக் குறித்ததொகை வரியைத் தர வேண்டுமென சட்டம் இயற்றினால்தான் சுற்றுச் சூழல் சமநிலையைக் காக்க முடியும் போல உள்ளது.

முன்பொரு காலம் இரத்த அழுத்தம், நீரிழிவு, மாரடைப்பு போன்ற நோய்களைப் பணக்கார வருத்தங்கள் என்றார்கள். தற்போதைய காலத்திலோ வயது வருமான வேறுபாடு இன்றி யாவருக்கும் பொதுவான நோய்களாகி விட்டன.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்றார்கள். அது வெறும் ஏட்டுக் கல்விச் சொல்லாக மட்டுமே உள்ளது. இதனால் தான் தனியார் வைத்தியசாலைகள் ஒரு பெரும் வணிகக் கட்டமைப்பாக வந்து விட்டன. பணக்காரக் குடும்பங்களுக்கு அது பிரச்சினையில்லை. ஆனால் பெரும் வீதத்தில் உள்ள நடுத்தரக் குடும்பங்கள் இந்த வணிகக் கட்டமைப்பிடம் சிக்கிக் கடன்கார வாழ்க்கை வாழ்கின்றனர்.

ஆகவே ஆரோக்கிய வாழ்வு தொடர்பான விழிப்புணர்வும் நடைமுறைகளும் காலத்தின் தேவை எனலாம்.




■

# காலம் பதித்துச் சென்ற காலடி – நந்தினி சேவியர் குறித்த மனப்பதிவு

**“இத்தொகுப்பில் இடம் பெறும் முதற் சிறுகதையான வேட்டை தம்பர் என்பவர் தன் நாயுடன் இணைந்து ஈடுபடும் முயல், உடும்பு வேட்டைகள் குறித்த சித்திரிப்பாக அமைந்துள்ளது. மனிதனும் மிருகமும் முதுமைத் தளர்ச்சியால் ஒருவரோடு ஒருவர் தங்கி வாழும் இயல்பினை சித்திரிக்கும் இச்சிறுகதை தம்பருக்கும் அவரது நாய்க்கும் இடையிலான அன்பையும் ஆழமான பிணைப்பையும் நுட்பமாகக் காட்டப்படுகிறது.”**

சி.ரமேஷ்




தே. சேவியர் என்ற இயற்பெயரைக் கொண்ட நந்தினி சேவியர் 25.05.1949 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் தென்மராட்சியிலுள்ள மட்டுவிலில் தேவசகாயம், றோசம்மா தம்பதியினருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தவர். ஆரம்பக்கல்வியை மட்டுவில் கல்வயல் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கற்ற இவர் இடைநிலைக்கல்வியை மட்டுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியிலும் வதிரி திரு இருதயக் கல்லூரியிலும் கற்ற நந்தினி சேவியர் தன் தொழில்நிலைக்கல்வியை யாழ் தொழில்நுட்பக் கல்லூரியிலும் பயின்றார். 1967 ஆம் ஆண்டு சுதந்திரன் பத்திரிகையில் ‘பாரம்’ என்ற முதற்சிறுகதையை நந்தினி சேவியர் என்ற புனைபெயரில் எழுதிய நந்தினி சேவியர் பின் அப்பெயரின் ஊடாகவே இலக்கிய உலகுக்கு பரிட்சியமானார். சமூகசேவையாளனாகவும் பண்பாட்டுப் போராளியாகவும் அறியப்பட்ட நந்தினி சேவியர் நாவல், கவிதை, கட்டுரை, ஆய்வு எனப் பன்முகத்தளங்களில் இயங்கியவர்.

ஈழநாடு, ஈழமுரசு, வீரகேசரி, தொழிலாளி, சிந்தாமணி முதலான பத்திரிகைகளில் பல்வேறு புனைபெயர்களில் எழுதிய நந்தினி சேவியர் மல்லிகை, தாயகம், வாகை, அலை, புதுசு, இதயம், ஒளி, வழித்தடம், பெயர், வாகை முதலான சஞ்சிகைகளிலும்



தொடர்ந்து எழுதினார். இவருடைய பத்தி எழுத்துக்கள் மற்றும் கட்டுரைகள் சில வ.தேவசகாயம், சகாய புத்திரன், தாவீது கிறிஸ்ரோ ஆகிய பெயர்களிலும் வெளிவந்துள்ளன. சாகும் வரை எழுத்தை நேசித்து அதற்கெனவே தம் வாழ்நாளை அர்ப்பணித்த நந்தினி சேவியர் சமூக சீர்திருத்த விடுதலை இயக்கங்களிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர். தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தில் இணைந்து இவர் ஆற்றிய சமூகப்பணிகள் அளப்பெரியன. யாழ்ப்பாணத்தில் நிலவிய சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான வெகுசன இயக்கப் போராட்டத்தில் பங்கு பற்றிய பலர் மார்க்சியப் பாதையில் பயணித்துக் கொண்டிருந்தவர்கள். அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற சாதிய எதிர்ப்பு போராட்டத்தில் சீன அணியினரே முக்கிய பங்களிப்பினை வழங்கினர் என்பது யதார்த்த உண்மையாகும். அவ்வகையில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வாலிப இயக்கத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட நந்தினி சேவியர் 1966 ஆம் ஆண்டு அக்டோபர் 21இன் எழுச்சியின் விளைவாக உணர்வுரீதியாக ஆட்கொள்ளப்பட்டு மாவிட்டபுரம், பன்றித் தலைச்சி அம்மன் ஆலயப் பிரவேசப் போராட்டத்திலும் நேடியாகப் பங்கெடுத்தவர். எங்கெல்லாம் ஈழத்தில் ஒடுக்கு முறைகளும் அடக்கு முறைகளும் தலைதூக்கியதோ அங்கெல்லாம் சேவியரின் குரல் ஆழ ஒலித்தது. நிச்சாமம், அச்சுவேலி, மட்டுவில், கன்பொல்லைப் போராட்டங்களும் அவை சம்மந்தமான நேரடி அனுபவங்களும் நந்தினி சேவியரின் ஆத்மாவைச் சுத்திகரித்துப் புடம் போட்டு பண்படுத்தி சமூக இலக்கியப் போராளியாக மாற்றியது.

க.கைலாசபதி, சிவத்தம்பி போன்ற மார்க்சிய விமர்சகர்களின் தொடர்போ, முற்போக்கு அணியினரின் தொடர்போவின்றிச் சுயமான தேடலின் ஊடாக இலக்கியப் பயணத்தை தொடர்ந்த நந்தினி சேவியர் “படைப்பு முதலில் படைப்பாக இருக்க வேண்டும்” என்பதில் தீவிரமான பிடிப்புக் கொண்டவர். நிலப் பிரப்புத்துவக்காரர்களின் வரலாறே சமூக வரலாறாகச் சித்திரிக்கப்பட்ட சூழலில் சமகாலச் சிறுகதைகளின் வாயிலாக ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைப் புலத்தை தம் சிறுகதைகளில் உணர்வுபூர்வமாகவும் கலாரசனையோடும் வெளிப்படுத்தியவர். உறவுகளின் உணர்வுக் கோலத்தையும் அதிருப்திகளால் உருவாகும் வெறுப்பு, விரக்திகளையும் இவரின் சிறுகதைகள் நுண்மையாகச் சித்திரித்தன. சமூக ஏற்றத்தாழ்வுகளையும் பொருளாதாரச் சிக்கல்களையும் வெளிப்படுத்தி நின்ற இவரின் சிறுகதைகள் வாழ்க்கையை நம்பிக்கையோடு எதிர்கொள்வதைப் பேசிநின்றன. பணிதல், பணிய மறுத்தல், விழிப்போடு இயங்குதல், ஒன்று சேர்ந்து போராடல் என விரியும் இவரது சிறுகதைகள் மக்களின் வாழ்க்கைப் புலத்தை அப்பட்டமாகக் காட்சிப்படுத்தின. ஒரு புகைப்படக் கலைஞனைப் போல் மக்கள் வாழும் சுற்றுச் சூழலைக் காட்சிப்படுத்தும் வல்லமை கொண்டவர் நந்தினி சேவியர். ஆழமான வாசிப்பும் நிறைந்த தேடலும் கொண்ட இவரின் சிறுகதைகள் மூன்று தொகுதிகளாக வெளிவந்துள்ளன. தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடாக இவரின் அயற்கிராமத்தைச் சேர்ந்தவர்கள் தொகுப்பு ஆகஸ்ட் 1993 இல் வெளிவந்தது. முருகையன் முகவுரையைத் தாங்கி வெளிவந்த இத்தொகுதியில் ‘வேட்டை’, ‘அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்’, ‘ஒரு பகற்பொழுது’, ‘நீண்ட இரவுக்குப்பின்’, ‘பயணத்தின் முடிவில்’, ‘மத்தியானத்துக்குச் சற்று முன்பாக’, ‘ஆண்டவருடைய சித்தம்’, தொலைந்து போனவர்கள்’ என எட்டுக் கதைகள் இடம் பெற்றன. இத்தொகுப்பு அவ்வாண்டின் சிறந்த சிறுகதைத் தொகுப்புக்கான விபவி பரிசினைத் தட்டிச் சென்றது.

இத்தொகுப்பில் இடம் பெறும் முதற் சிறுகதையான வேட்டை தம்பர் என்பவர் தன் நாயுடன் இணைந்து ஈடுபடும் முயல், உடும்பு வேட்டைகள் குறித்த சித்திரிப்பாக அமைந்துள்ளது. மனிதனும் மிருகமும் முதுமைத் தளர்ச்சியால் ஒருவரோடு ஒருவர் தங்கி வாழும் இயல்பினை சித்திரிக்கும் இச்சிறுகதை தம்பருக்கும் அவரது நாய்க்கும் இடையிலான அன்பையும் ஆழமான பிணைப்பையும் நுட்பமாகக் காட்டப்படுகிறது.

யாழ்ப்பாணச் சமூகத்தின் ஒடுக்குமுறைக்கு எதிரான போர்க்குரலே “அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்” என்கின்ற கதை. மாயக்கை என்கிற கிராமத்தில் பனையால் விழுந்த கிட்டிணனின் இறப்பைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட இச்சிறுகதை ஆதிக்க சமூகத்தின் அடக்குமுறைக்கெதிராகப் போராடி விடுதலைப் பெற்ற பிறிதொரு சமூகத்தின் கதையாகவும் விளங்குகிறது. ஆதிக்க சாதிக்காரர்களுடன் பிணக்குண்ட கிட்டிணன் இறந்துவிட அப்பிணத்தைச் சுமந்து செல்ல அவனது கிராமத்தவர்கள் அஞ்சிய வேளையில் அவர்களுக்கு துணையாகநின்று அப்பிணத்தை எடுத்துச் செல்ல அயல்கிராமத்தவர்கள் உதவியதை வரலாற்றுப் பதிவாக இச்சிறுகதை விட்டுச் செல்கிறது.ஷ

ரேஷன் முறை அறிமுகப்படுத்தப்பட்டிருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் குடும்பமொன்றின் வறுமையைச் சுட்டி நிற்கும் கதையே ‘ஒரு பகற் பொழுது’. இக்காலப் பகுதியில் அடித்தட்டு மக்கள் அனுபவித்த இன்னல்களையும் வறுமையால் அவர்கள் எதிர்கொண்ட தார்மீக நெருக்கடிகளையும் இச்சிறுகதை துல்லியமாக விளக்கி நிற்கிறது.

“நீண்ட இரவுக்குப் பின்” என்கிற கதை கொழும்புக்கு வேலை தேடி கிராமங்களில் இருந்து சென்றவர்களின் எதிர்பார்ப்புகள் பொய்யாய்ப் பழங்கனவாய் பொய்துப் போகின்றமையை எடுத்துரைக்கிறது. தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் மட்டுமின்றி சிங்கள மக்களின் எதிர்பார்ப்புக்களும் பொய்த்துப் போவதை அரசு, ரத்ன பாலா என்ற இரு இளைஞர்களுக்கூடாக நந்தினி சேவியர் வெளிப்படுத்துகிறார்.

“ஆண்டவருடைய சித்தம்” என்கிற கதை விடுப்பு நாளிலும் வேலைத்தளம் பற்றிய சிந்தனையுடனேயே இருக்கின்ற ஒருவனுடைய மனோநிலையை எடுத்துரைப்பதைப் போல தொலைந்து போனவர்கள் சிறுகதை யுத்தத்தால் அழிவுண்ட நகரத்தின் கதையாகவும் விரிகிறது. நந்தினி சேவியரின் கதைகள் இனம், மதம், மொழி கடந்து சமூக விடுதலைக்கான குரலாக அமைகிறது. அடிமட்ட மக்களின் பண்பாட்டு அம்சங்களையும் வாழ்வியற் புலத்தை விளக்கும் இச்சிறுகதைகள் வரலாற்று ஆவணமாகவும் திகழ்கின்றன.

எஸ்.கொடகே சகோதரர்கள் வெளியிட்ட ‘நெல்லிமரப் பள்ளிக்கூடம்’ தொகுப்பு ‘மேய்ப்பன்’, ‘ஒற்றைத் தென்னை’, ‘கடலோரக்குடிசைகள்’, ‘மனிதம்’, ‘நெல்லிமரப் பள்ளிக்கூடம்’, ‘தவனம்’, ‘எதிர்வு’, ‘விருட்சம்’ என எட்டுச் சிறுகதைகளை உள்ளடக்கி வெளிவந்தது. ‘அயற்கிராமத்தைச் சேர்ந்தவர்கள்’, நெல்லிமரப் பள்ளிக் கூடம்’ என்ற இவ்விருதொகுதிக் கதைகளையும் மற்றும் கட்டுரைகள், பத்திகளையும் இணைத்து விடியற் பதிப்பகம் 2014 ஆம் ஆண்டு ‘நந்தினி சேவியர் படைப்புகள்’ என்ற மூன்றாவது தொகுதியை வெளிக்கொண்டு வந்தது. இவர் எழுதிய 30 சிறுகதைகளில் 16 மட்டுமே இந்நூலில் தொகுக்கப்பட்டிருக்கின்றன.




1987 இல் யாழ்ப்பாணத்தை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஒப்பிரேஸன் லிபரேஸன் நடவடிக்கையின் போது இவர் எழுதிய ‘சுடலை ஞானம்’, ‘பாரம்’, ‘சூழ் லாம்பு’, ‘பெரியமனிதன்’, ‘பனை’, ‘புரியாத புத்தகம்’, ‘திருவிழா’, ‘அவர்களிடம் இருந்து அவர்களுக்கு’, ‘முதலும் கடைசியும்’, ‘பிச்சை புகினும்’, ‘ஓ... அது...,’ ‘வியாகுலம்’, ‘அவர்களுக்கும் பிள்ளைகள் இருக்கிறார்கள்’, ‘இரண்டு பகல்கள் கழிந்து விட்டன’ ஆகிய 14சிறுகதைகள் பிரதிகளாக வெளிவந்த நிலையில் இன்று அழிந்து விட்டன.

புனிததோமையர் ஆலயத்துக்கு கூட்டுச் சீலை வாங்குவதற்காக கடலுக்குச் சென்று இறந்து போன சங்கிலித்தாம் கிறகோரியின் கதையே ‘மேய்ப்பன்’ சிறுகதை. படகுவிபத்தில் குடும்பத்தை பறிகொடுத்து ஒற்றையாளாக வாழும் சந்தியாக்கிழவனின் வாழ்வை பின்னணியாகக் கொண்டு புனையப்பட்ட சிறுகதையே ‘ஒற்றைத் தென்னை.’ நந்தினி சேவியர் சமவுடமை சித்தாந்தத்தின்பாற் நம்பிக்கைக் கொண்டவர். அதனையே தன் ஆதார சுருதியாகக் கொண்டவர். அதன் விளைவே ‘கடலோரத்துக் குடிசைகள்’. ஏழைத் தொழிலாளரைச் சுரண்டி வாழும் சம்மட்டியாரின் கொடுமைக்கு எதிராகப் போராடும் மரியசேவியர் சுவாமிகளின் தம்பி எட்வேட்டை பிரதானப் பாத்திரமாகக் கொண்டு எழுதப்பட்ட சிறுகதை ஆகும். சிறுகதையின் இறுதியில் சுவாமிக்கும் எட்வேட்டுக்கும் நடக்கும் உரையாடல் அடித்தட்டு மக்களின் பொருளாதாரமின்மைகள் சீர் செய்யப்பட வேண்டிய அவசியத்தை விளக்கி நிற்கிறது. போர் பலி கொண்ட மக்களின் வாழ்வே ‘மனிதம்’ சிறுகதை. இரண்டு பக்கங்களுக்குள் முடிவுறும் இச்சிறுகதையில் எடுத்து வளர்க்கும் ஏழைச்சிறுவனின் வாழ்வியலுக்கூடாக ஈரம் கசியும் மனிதாபிமானம் வெளிப்படுத்தப்படுகிறது. 1983 ஆம் ஆண்டு யூலைக் கலவரத்தை மையப்புலமாகக் கொண்டு இயங்கும் நந்தினி சேவியரின் ‘தவனம்’ சிறுகதை 79 ஆம் இலக்க சோனகர் தெருவுக்குள் அமைந்திருக்கும் கட்டட இருப்புக்குள் அடைக்களமான மனிதர்களின் உள்ளத்துணர்வுகள், பயத்தால் அலக்கழியப்பட்ட வாழ்வு முதலானவற்றை உயிரும் உணர்வுமாக வெளிப்படுத்துகிறது. சேவியரின் ‘எதிர்வு’ சிறுகதை ஒடுக்கப்பட்ட சமூகத்தினரின் வாழ்வில் சம்பவிக்கும் மரணங்கள் ஏற்படுத்தும் வலியையும் அதேசமயம் யுத்தகாலத்திலேயும் அதற்கு முற்பட்ட காலத்திலேயும் பிரேதத்தை எடுத்துச் செல்லும் போது சமூகம் எதிர்நோக்கிய அன்றாட வாழ்வியல் சிக்கல்களையும் பேசுகிறது. நந்தினி சேவியர் வாழ்ந்த சூழல் அச்சூழலைச் சுற்றியிருந்த மரம் செடி, கொடிகள் குறித்த அனுபவப் பகிர்வே ‘விருட்சம்’ சிறுகதை. மரங்களை மனிதன் எவ்வாறு எதிர்கொள்கிறான் என்பதை வாழ்வியல் அனுபவப்புலத்தின் ஊடாக இச்சிறுகதை கூறிநிற்கிறது.

நந்தினிசேவியரின் ‘நெல்லிமரப் பள்ளிக்கூடம்’ அவரின் பெயர் சொல்லும் வித்தியாசமான சிறுகதைகளில் ஒன்று. எழில் கொஞ்சும் இயற்கை வனப்புடன் இரு தலைமுறைகளுக்கு மேலாக இயங்கி வந்த ‘நெல்லிமரப் பள்ளிக்கூடம்’ சாதிப் பிளவுகளால் அழிவுண்ட கதையை எமக்கு கூறி நிற்கிறது. நந்தினி சேவியரின் இத்தொகுப்பில் இடம்பெறும் சிறுகதைகள் அனுபவ வெம்சூட்டில் உருப்பெற்றவை. அன்றாட மனிதவாழ்வில் நிகழ்ந்த சம்பவங்களைநந்தினி சேவியர் கலாபூர்வமான இயற்கை ரசனையோடு உணர்வும் உயிர்ப்பும் மிக்க கதைகளாக உருவாக்கியுள்ளார். நந்தினி சேவியரின் உலகம் நெருக்கடிகள் நிறைந்தது. சிக்கலும் சிடுக்குகளும் நிறைந்த பொருளாதார வசதி குறைந்தவர்களே அவருடைய கதாமாந்தர்கள். பெரும்பாலான மனிதர்கள் வாழ்க்கையில் தோற்றுப்போனவர்கள். பாத்திரங்களுடன் சம்பவங்களை இணைத்து பிசிறின்றி கதையை நகர்த்தி செல்வதில் நந்தினி சேவியர் கைதேர்ந்தவர். ■

# நாடு திறந்த பின் நடக்கப் போவதென்ன?

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

இவற்றைப் பார்த்துக் கொண்டு நின்ற மற்றும் சென்ற பொலிசார், இராணுவத்தினர், சுகாதா ரத் தரப்பினர் எதுவுமே செய்யவில்லை. குறைந்த பட்சம் குடிமக்களை சமூக இடைவெளியைப் பேணக் கூட அறிவுறுத்தவில்லை.

மறுபுறம் கோட்டையில் சிலர் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டம் நடத்திய காட்சிகளைக் காண முடிந்தது. சமூக இடைவெளியைப் பேணியவாறு, சுகாதாரப் பாதுகாப்பு அங்கிகளை அணிந்தவாறு அவர்கள் கோசமிட்டனர். அவ்வாறு கோசமிட்டவர்கள் சுய கைத்தொழில் முயற்சியாளர்கள் மற்றும் சிறு தொழில் முயற்சியாளர்களின் பிரதிநிதிகள். சுமார் 25 பேரளவில் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் தமது வயிற்றுப் பசிக்குத் தீர்வு கேட்டு அவர்கள் கோசமிட்டனர். ஆனால் பொலிசாரால் அவர்கள் பலவந்தமாக இழுத்துச் செல்லப்பட்டனர். ஆர்ப்பாட்டம் தடுத்து நிறுத்தப்பட்டது.

இந்த நேரத்தில் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஐ.நா. பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்ரெஸைச் சந்தித்த நாட்டின் முதற் குடிமகன் கோட்டாபய ராஜபக்ஷ இலங்கைக்குள் மிகவும் பலமான முறையில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதே தன்னுடைய இலக்கு என்று தெரிவித்தார். இதன்படி ஆர்ப்பாட்டங்களின் போது தடியடி, நீர்த்தாரைப் பிரயோகம் முதலான பலத்தைப் பிரயோகிக்கப் போவதில்லை என்றும் தெரிவித்தார். இதற்காகவே தனது மாளிகை முன்பாக ஆர்ப்பாட்டம் செய்வதற்கென்று ஒரு இடத்தை அமைத்து வைத்திருப்பதாகவும் ஐ.நா.செயலாளரிடம் அவர் தெரிவித்திருந்தார்.

கோட்டையில் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் “பார வண்டி இழுப்போர், சிறுவியாபாரிகள், லொட்டரி சீட்டு விற்பனையாளர்கள், பெட்டிக் கடைகளை நடத்துவோர், நடைபாதை வியாபாரிகள் எனப் பல அன்றாடங் காய்ச்சிகள் தொழிலின்றி, வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்றனர். அவர்களுக்கு எந்த வருமானமும் இல்லை. நாட்டை மூடி வைத்து விட்டு மதுபான நிலையங்களைத் திறக்கும் அரசாங்கம் ஏன் எங்களைப் பட்டினியில் வாடச் செய்கிறது?” என்று கேள்வி எழுப்பியது குற்றமாகி விட்டது.

இன்றுள்ள நிலையில் நாடு ஒக்ரோபர் முதலாந் திகதி திறக்கப்படவிருக்கிறது. தனிமைப் படுத்தல் ஊரடங்கு மேலும் நீடிக்கப்படுமோ என்பது தெரியவில்லை. எனினும் நாடு திறக்கப்பட்ட பின்னர் மக்கள் -



தொழிற்சங்கங்கள் - வீதிக்கு இறங்கும் சாத்தியங்கள் அதிகமாகும். தற்போது அரசாங்கத்துக்குச் சவால் விடுத்து அதிபர், ஆசிரியர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். பல ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் நிகழ்நிலை வகுப்புக்களைப் புறக்கணித்தும், பரீட்சைக் கடமைகளில் இருந்து விலகியும் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கிறார்கள். அவர்கள் 23 வருடங்களாக நீடிக்கும் சம்பள முரண்பாட்டினைத் தீர்க்கக் கோரியே -சுபோதினி ஆணைக்குழுவில் முன்மொழியப்பட்ட சம்பளத்தை வழங்குமாறு கோரியே - போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். அரசாங்கமோ முன்மொழியப்பட்ட தொகையின் ஒரு பகுதியை மூன்று வருடங்களில் பகுதி பகுதியாக வழங்குவதாகத் தெரிவித்துள்ளது. இடைக்காலக் கொடுப்பனவாக இரண்டு மாதங்களுக்கு தலா ஐந்தாயிரம் ரூபா வழங்குவதாகவும் அறிவித்தது.

தற்போது கல்வி அமைச்சு சுற்றுநிருபமொன்றை அனுப்பி வைத்துள்ளது. ஆசிரியர்கள் நிகழ்நிலை வகுப்புக்களை நடத்தியோ, ஏனைய வழிகளிலோ மாணவர்களுக்குக் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்பதை அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரால் உறுதிப்படுத்துபவர்களுக்கு மட்டுமே இந்தக் கொடுப்பனவை வழங்குமாறு சுற்றுநிருபத்தில் கூறப்பட்டுள்ளது. இது தொழிற்சங்கங்களை மேலும் கொதிக்கச் செய்துள்ளது. குறித்த கொடுப்பனவைப் பெற்று, போராட்டத்தைக் காட்டிக் கொடுக்க வேண்டாம் என்று ஆசிரிய சங்கங்கள் ஆசிரியர்களுக்கு அறிவித்துள்ளன. தமக்குத் குறித்த ஐந்தாயிரம் ரூபா கொடுப்பனவு வேண்டாம் என்று அதிபருக்கு குறுந் தகவலில் அறிவிப்பதன் மூலம் இந்தப் போராட்டத்தில் இணைந்து உரிமைகளை வென்றெடுக்க அணி திரளுமாறு தொழிற்சங்கக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் தொழிற்படும் ஒரு தமிழர் ஆசிரியர் சங்கம், அரசாங்கக் கட்சியின் ஆசிரியர் சங்கங்கள் தவிர பெரும்பாலான ஆசிரிய சங்கங்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. பொதுவாகவே தமிழர் தரப்பு இத்தகைய போராட்டங்களில் குளிர் காய்வது வழமையே என்றும் ஒரு கருத்துண்டு. இலங்கை முழுவதும் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட வடக்கு மாகாணம் மட்டும் நிகழ்நிலை வகுப்புக்களை நடத்தியும், பரீட்சைக் கடமைகளுக்கு விண்ணப்பித்தும் தீங்கு விளைவிக்கின்றது என்று தென்னிலங்கையில் உள்ள தொழிற்சங்கங்கள் குற்றஞ் சாட்டுகின்றன.

மறுபுறத்தில் வடக்கு மாகாணக் கல்வி அதிகாரிகள் அரசாங்கம் எள் என்றால் எண்ணெய்யாக நின்று செயற்படுவார்கள் என்கின்றன தொழிற்சங்கங்கள். நிகழ்நிலை வகுப்புக்களை நடத்துவோர், பங்குபற்றும் மாணவர்கள் போன்ற தரவுகளை மாகாண அதிகாரிகள் வலய அதிகாரிகளைக் கோரியுளள்ளனர். அவர்கள் அதிபர்கள், ஆசிரியர்களிடம் விபரங்களைக் கோர, நிலைமை சற்று விபரீதமாகியுள்ளது.

நிகழ்நிலை வகுப்புக்களைத் தமது சொந்த முயற்சியில், சொந்த நிதியில் செய்யும் நிலையில் அந்தத் தரவுகளை நாம் ஏன் வழங்க வேண்டும்? என்பது ஆசிரியர்களின் கேள்வியாகும். இந்த ஐந்தாயிரம் பூச்சாண்டிக்காக எமது தன்மானத்தை இழக்கோம் என்கின்றனர் இவர்களில் பலரும். ஆயினும் நாடு திறந்த கையோடு பாடசாலைகளையும் திறக்க அரசாங்கம் எண்ணுகிறது. பாடசாலைகளைத் திறந்தால் இந்தப் போராட்டம் நீர்த்துப் போகும். சொந்த லீவில் நின்று போராட்டம் செய்ய அதிபர், ஆசிரியர்கள் துணிய மாட்டார்கள் என்பது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். மறுபுறம் ஆர்ப்பாட்டங்கள் முதலான போராட்டங்கள் தீவிரமடையும் என்ற நிலைமையும் உள்ளது. ஆக, நாடு திறந்த பின்னர் நடக்கப் போகிறவையும் அரசாங்கத்துக்கு நல்ல சமிக்ஞையைத் தரப் போவதில்லை.

■

---

# “பேய் அரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்!”

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

அமைச்சர் ஒருவர் மதுபோதையில் தனது சகாக்களையும் அழைத்துக்கொண்டு இரண்டு சிறைச்சாலைகளுக்குள் அத்துமீறிப் பிரவேசித்துத் தனது கைத்துப்பாக்கியைக் காண்பித்துத் தமிழ்க் கைதிகளை முழந்தாளிட வைத்து வெருட்டியிருக்கிறார்.

சிறைக்காவலர்கள் தடுத்தமையால், அங்கு துப்பாக்கிப்பிரயோகம் நடக்கவில்லை. அவ்வாறு நடந்திருந்தாலும், இலங்கை அதிபர் அந்தக் குற்றவாளிக்குப் பொதுமன்னிப்பு வழங்கியிருப்பார்.

ஏற்கனவே இரண்டு முக்கிய நபர்கள் கொலைக்குற்றத்தின் பேரில் மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்து, சமகால அதிபரினால் பொது மன்னிப்பின் கீழ் வெளியே வந்து அனைத்து சௌகரியங்களையும் அனுபவித்துவருகின்றனர்.

இந்தத் தவறான முன்னுதாரணங்கள்தான், பொறுப்பு வாய்ந்த பதவிக்காக மக்களினால் வாக்குகள் மூலம் தெரிவாகி நாடாளுமன்றம் சென்று இராஜாங்க அமைச்சராகவும் பதவியேற்றிருந்த ஒருவருக்கு அசட்டுத்தனமான தைரியத்தை வழங்கியிருக்கிறது.

தம்மிடம் அதிகாரம் இருந்தால், எதனையும் செய்யலாம் என்ற நிலைக்கு ஆட்சியின் பங்குதாரர்கள் மாறிவிடும்போது, மகாகவி பாரதி சொன்ன கூற்றுத்தான் நினைவுக்கு வருகிறது.

இற்றைக்கு 38 வருடங்களுக்கு முன்னர் 1983 ஆம் ஆண்டு கொழும்பு வெலிக்கடைச் சிறையில் அடுத்தடுத்து நடந்த தாக்குதல் சம்பவங்களில் கொல்லப்பட்ட அரசியல் கைதிகள் தொடர்பான ஆவணம் இன்றளவும் பேசப்படுகிறது. கறுப்பு ஜூலை வரும் ஒவ்வொரு ஆண்டும் அந்தக் கொடூரச்சம்பவம் ஊடகங்களில் பேசப்படுகிறது.

அந்த அனுபவம் எத்தகையது என்பது பற்றி, இன்றைய அரசில் அங்கம் வகிக்கும் மாண்புமிகு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் நன்கு தெரியும்.

ஒரு இராஜாங்க அமைச்சர் கைத்துப்பாக்கியுடன் சிறைச்சாலை வளாகத்துள் நுழைந்து, அங்கிருக்கும் தமிழ்க்கைதிகளின் தலையில் அதனை வைத்து அச்சுறுத்தும் அளவுக்குச் சென்றிருக்கிறார்.

அந்தக்கணப்பொழுதில் குறிப்பிட்ட கைதிகளின் மனநிலை எவ்வாறிருந்திருக்கும் என்பதை அறியாதவர் அல்ல, இன்றைய தமிழ் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

விசாரணையின்றித் தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்கவேண்டும் என்ற குரல், வெளியே தொடர்ந்து ஒலித்துக்கொண்டிருக்கிறது.

மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச மாநாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதற்கு ஆட்சியின் அதிபரும் சென்றுவருகிறார். இந்தப்பின்னணியில் அவரது அரசின் இராஜாங்க அமைச்சரான லொகான் ரத்வத்தையின் அராஜக செயற்பாட்டுக்கு அரச தரப்பு வருத்தம் தெரிவித்து இந்தப் பிரச்சினையிலிருந்து கடந்து செல்லப்பார்க்கிறது.

சிறைச்சாலைக்குள் போதைவஸ்து எடுத்துச்செல்லப்படுவது எத்தகைய பாரிய குற்றமோ, அவ்வாறே தனிநபர் ஒருவர் துப்பாக்கியுடன் அங்கே பிரவேசிப்பதுமாகும்.

இதற்கு என்ன தண்



டனை..? அவரது இராஜாங்க அமைச்சர் பதவியை பறிப்பது மாத்திரம் தானா..? அவ்வாறெனில் அது ஒருவகையில் கண்துடைப்பு முயற்சிதான்!

குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினரை நீதியின் முன்னால் நிறுத்தித் தகுந்த தண்டனை பெற்றுக்கொடுக்கவேண்டியது அரசின் கடமை. அத்துடன் அன்னாரை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்குவதற்கு சபாநாயகர் நடவடிக்கை எடுக்கத்தக்கதாக நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகள் சார்ந்த சட்டங்களில் திருத்தங்கள் கொண்டுவரப்படல்வேண்டும்.

இதுவரையில் குறிப்பிட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சருக்கு எதிராக எவரும் வழக்குத்தாக்கல் செய்ய முன்வரவில்லை ! அதற்கான காரணமும் தெரியவில்லை.

இன்று சிறைச்சாலைக்குள் தனது கைத்துப்பாக்கியுடன் சென்றிருப்பவர், நாளை ஒரு நாள் நாடாளுமன்றத்திற்குள்ளும் அதனை எடுத்துவரமாட்டார் என்பது என்ன நிச்சயம்?.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, தற்பொழுது சிறைவாசம் அனுபவித்து வருகிறார். அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் பறிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறாயின் புனர்வாழ்வுக்காக சிறைக்குள் அடைக்கப்பட்டிருக்கும் கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய அரசு என்ன செய்திருக்க வேண்டும்..? சிறைச்சாலைகள் தொடர்பாக அமைச்சுப் பதவிகளுக்கு வரும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தேசியப்பட்டியல் ஊடாகத் தெரிவாகின்றவர்களுக்கும் ஒரு காலகட்டத்தில் இந்தியா திகார் சிறைச்சாலை அதிகாரியாகப் பதவியிலிருந்த கிரண்பேடியின் “நான் துணிந்தவள்” என்ற வாழ்க்கைச் சரித நூலைப் பாட நூலாக்க வேண்டும்.

இந்த நூல் ஆங்கிலமொழியிலும் கிடைக்கிறது. நாடாளுமன்ற நூல் நிலையத்தில் இதுபோன்ற நூல்கள் இடம்பெற்று, காலத்துக்குக் காலம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வாசிப்பு அனுபவப்பகிர்வு நிகழ்ச்சிகளை சபாநாயகரே முன்னின்று நடத்த வேண்டும்.

ஒருவர் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகி வரும் பட்சத்தில், அவர்களின் கல்வி, அறிவு, சமூக விழுமியம் சார்ந்த பண்பாட்டு தகுதிகள் தொடர்பாக நேர்முகத் தேர்வு நடத்தும் வகையில் சட்டங்கள் வரையப்படல் வேண்டும்.

நல்லதோர் சமுதாயத்தை உருவாக்கும் பெரும் பொறுப்பு, மக்களிடம் மாத்திரம் தங்கியிருப்பதில்லை. அரசினை நடத்திவரும் ஆட்சியாளர்களுக்கும் அமைச்சர் பிரதானிகளுக்கும் இருத்தல் வேண்டும்.

இல்லையேல் பேய்களின் அரசாட்சியாகிவிடும். நீதி சாத்திர நூல்களை பிணம் தின்னும் காலம் கனிந்துவிடும்!

■




# அதிகாரிகளின் அச்சுறுத்தல் அதிபர் ஆசிரியர் சங்கப் போராட்டத்தை

## திசை மாற வைக்கும் முயற்சியா?

கண்ணபிரான்

ஆசிரியர்களின் போராட்டம் மூன்று மாதங்களை அண்மித்துக்கொண்டிருக்கின்றது. இந்தப் போராட்டம் குறித்த சாதகமான, பாதகமான கருத்துக்கள் சமூகமட்டத்தில் பல தரப்பினராலும் முன்வைக்கப்படுகின்றன. உண்மையில் ஆசிரியர்களின் போராட்டத்தின் நீடித்த நிலைக்குக் காரணம், இந்தப் போராட்டத்தைக் கையாழ்வதில் அரசுகொண்டிருக்கின்ற மெத்தனப் போக்காகும். ஆசிரியர்கள் தாங்கள் போராடுவதற்கான நியாயபூர்வமான காரணத்தை முன்வைத்தே இருக்கின்றனர். உண்மையில் இந்தப் போராட்டத்தை வெறும் அதிபர் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கான போராட்டமாகக் கருதும் நிலைமயே கல்வித்துறை சார்ந்த மட்டத்தில் இன்னும் இருக்கின்றது. இதனால்தான் உயர் அதிகாரிகளினால் அதிபர் ஆசிரியர்கள் மீது தொடர்ச்சியாக அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.

அதிபர் ஆசிரியர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு முழு உரித்துடையவர்கள் என்பதை முதலில் இந்த அதிகார மட்டத்தில் இருக்கின்றவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுகின்றவர்கள் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதென்பது முற்றிலும் மனித உரிமை மீறலாக மட்டுமன்றி ஜனநாயகப் பண்புக்கு முற்றிலும் விரோதமானதும் கூட. எனவே போராட்டத்தில் ஈடுபடுகின்றவர்களின் மீது அழுத்தங்களை மேற்கொண்டு போராட்டத்தை நீத்துப்போகச் செய்கின்றவர்கள் மீது சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போராடும் தரப்பு முன்வரவேண்டும்.

மேல்மட்டத்தில் இருந்து வருகின்ற அழுத்தங்களின் காரணமாகத் தாங்கள் ஆசிரியர்கள் மீது அழுத்தங்களை மேற்கொள்ள வேண்டிய நிலை இருப்பதாகச் சில பாடசாலைகளின் அதிபர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். அதிகார மட்டத்தில் இருப்பவர்கள் போராட்டத்தை குழப்ப விழைவார்கள் என்பது எதிர்பார்க்கத்தக்கதே. போராட்டம் என்பது அத்தகைய அதிகார மையங்களுக்கு எதிரானதுதான் என்பதை முதலில் போராட்டக்காரர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

> **மேல்மட்டத்தில் இருந்து வருகின்ற அழுத்தங்களின் காரணமாக தாங்கள் ஆசிரியர்கள் மீது அழுத்தங்களை மேற்கொள்ள வேண்டிய நிலை இருப்பதாக சில பாடசாலைகளின் அதிபர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். அதிகார மட்டத்தில் இருப்பவர்கள் போராட்டத்தைக் குளப்ப விழைவார்கள் என்பது எதிர்பார்க்கத்தக்கதே. போராட்டம் என்பது அத்தகைய அதிகார மையங்களுக்கு எதிரானதுதான் என்பதை முதலில் போராட்டக்காரர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.**

இந்தப் போராட்டத்தைச் சமூகமட்டத்தில் தவறுடையதாக சித்தரிப்பதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவர்கள் மாணவர்களின் நலன்களில் அக்கறை கொள்ளாது தமது நலனில் அக்கறைகொண்டு போராடுகின்றார்கள். மாணவர்களின் எதிர்காலத்தின் மீது விளையாடுகின்றார்கள். இது நாட்டை எதிர்காலத்தில் பாரிய நெருக்கடிக்குள் உள்ளாக்கும் என்ற விதமான கருத்துக்கள் மக்கள் மத்தியில் பரப்பப்பட்டு வருகின்றன. மறுபுறமாக, போராட்டக்காரர்களும் தங்களுடைய நியாயங்களை ஊடகங்கள் மூலமாக முன்வைத்து வருகின்றனர். தற்போது போராட்டக்காரர்களின் கோரிக்கைகள் நியாயபூர்வமானதாக சமூகமட்டத்தில் பார்க்கப்படுகின்றது.

அரசு போராட்டக்காரர்களை அணுகி, தீர்வுக்கான வழியை ஏற்படுத்துவதை விடுத்து, போராட்டத்தின் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றது. அது அதிபர் ஆசிரியர்களை வடக்குக் கிழக்காகப் பிரித்து போராட்டத்தை வலுவிழக்கச் செய்ய முனைகின்றது. இனவாதத்தை வெளிப்படுத்துவதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் போராட்டத்துக்கு எதிரான நிலையை உருவாக்க முயன்றுவருகின்றது. நிகழ்நிலை வகுப்புக்கள் வடக்குக் கிழக்கில் வழமைபோலவே நடைபெறுகின்றது எனவும் ஆதலால் இந்தப் போராட்டத்தில் சிங்கள மாணவர்களே பாதிக்கப்படுவதாகவும் கருத்துப்பரவலாக்கத்தைச் செய்து வருகின்றது. உண்மையில் முன்னைய காலங்களைப் போல இனவாதச் சிந்தனையை தீவிரமாக முன்னெடுக்க முடியாது என்பதே வெளிப்படை. இன்றைய அரசின் மீது மக்கள் மத்தியில் திருப்திகரமான நோக்குநிலை இல்லை. நாளாந்த வாழ்க்கையே போராட்டமாக மாறியிருக்கின்ற நிலையில் அதற்கான தீர்வுகளைப் பற்றியே அதிகமும் மக்கள் சிந்தித்துக்கொண்டிருக்கின்றனர்.

உண்மையில் வடக்கு நிலவரங்கள் எவ்வாறு இருக்கின்றன என்பதை இங்கு கவனிப்பது முக்கியமானது. வடக்குகில் சில பாடசாலைகளில் இன்னும் நிகழ்நிலை வகுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுத்தான் வருகின்றன. வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களமோ அதன் கீழ் இயங்குகின்ற வலயக்கல்வி அலுவலகங்களோ ஆசிரியர்களின் போராட்டத்திற்கு ஆதரவாகச் செயற்படவில்லை என்பது வெளிப்படையானதுதான். கடந்த காலங்களில் இவர்கள் அதிபர் ஆசிரியர்களை நடத்துகின்ற முறைகளும் அதிகார மனப்பாங்கோடு கூடிய அணுகுமுறைதான் என்பதை கல்விப்புலத்தில் செயற்படுகின்ற அனைவரும் அறிந்துகொள்வார்கள். இவர்களது செயற்பாடுகள் ஆசிரியர்களிலும் தாமே மாணவர்களில் அதிக அக்கறை கொண்டவர்கள் என்று காட்டிக் கொள்ளுகின்ற அணுகுமுறையே அன்றி வேறில்லை. இவர்கள் தங்களின் வேலைகளைக் கூட ஆசிரியர்கள் மீது திணித்துத் தாம் வெறுமனே பெயரைச் சூட்டிக் கொள்பவர்களாக இருக்கின்றனர். இதிலும் பல உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மாணவர்களுக்கான சொல்லட்டைகள், வினாத்தாள்களைத் தயாரிப்பதில் முற்றுமுழுதாக ஆசிரியரை நம்பி இருப்பதும், ஆசிரியர்களுக்கான மேலதிகமான சுமையாக்கலை ஏற்படுத்துவதும் கவனத்துக்குரியது.

அண்மையில் ஆசிரியர் ஒருவர் தனக்கு அதிபரினால் அனுப்பப்பட்ட வைபர் தகவல் ஒன்றினைக் காட்டியிருந்தார். அதில் குறித்த ஆசிரியரை நிகழ்நிலை வகுப்பில் ஈடுபடும் படியும் அல்லாது விடில் வகுப்பில் ஈடுபட முடியாமைக்கான காரணத்தைத் தனக்குத் தனிப்பட்ட ரீதியில் வெளிப்படுத்தும் படியும் அச்சுறுத்தும் பாணியில் குறிப்பிட்டிருந்தார். உண்மையில் பூமிக்கு வெளியில் அவர் இன்னும் வசித்துக்கொண்டு இருப்பவர் என்றே நினைக்கத்தூண்டியது. சமகாலத்தில் நிகழ்கின்ற போராட்டத்துக்கு தனிப்பட்ட காரணத்தைக் கேட்பது அந்த அதிபரின் அறியாமையன்றி வேறு என்னவாக இருக்கும். இந்தப் போராட்டம் தன்னை உட்படுத்திய போராட்டம் என்பதைப் புரியாமல் இருப்பதை எந்தவகையான புத்திசாலித்தனத்துக்குள் வைத்துப் பார்ப்பது என்று புரியவில்லை. குறித்த அதிபருக்கு மேல் அதிகாரிகளினால் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருக்கலாம். அவர் அதனைத் தன்கீழ் பணியாற்றும் ஆசிரியர் மீது வெளிப்படுத்தியிருக்கலாம் எனக் கருதுவதிலும் தவறு இல்லை. ஆனால் தொழிற்சங்கப் போராட்டத்தில் தான் ஈடுபடுகின்றேன் எனவே தன் மீது யாரும் அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாது என்று சொல்லக்கூடிய வலிமை இல்லாதிருப்பது தான் கவலைக்குரியது.

கல்வியில் அதிகார அடுக்கு என்பது கீழிருந்து மேல் நோக்கியது என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். ஆசிரியர்களில் இருந்துதான் இந்த அதிகாரக் கட்டமைப்பு விரிகின்றது. இதனால் ஆசிரியர்கள் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து அவர்களின் உரிமைகளுக்குத் தடையாக இருப்பதென்பது சமூகத்தில் பல வழிகளிலும் பாதிப்பையே ஏற்படுத்தும். இன்னொரு விதத்தில் அதிகார மட்டத்தில் இருப்பவர்களின் மீது கேள்விகளை ஏற்படுத்தவும் காரணமாகும். முதலில் அதிபர் ஆசிரியர்களின் உரிமைகள் குறித்தும் நலன் குறித்தும் அதிகாரிகள் தங்கள் கரிசனையை வெளிப்படுத்த வேண்டும். போராட்டத்திற்கு ஆதரவளிக்காதவிடத்தும் அழுத்தங்களையாவது பிரயோகிக்காதிருக்க வேண்டும். தம் நிர்வாகச் செயற்பாடுகளுக்கு அதிபர் ஆசிரியர்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை என்ற நியாயத்தைக்கூறிக்கொண்டு அமைச்சு மட்டத்திலிருந்து பிரயோகிக்கப்படுகின்ற அழுத்தங்களைக் கடந்தாவது செல்லவேண்டும். ஆனால் இவர்களின் பதவிநிலை சார்ந்த மோகங்கள் இவர்களின் சிந்தனைக்குத் தடையாகவே இருக்கின்றது என்பதுதான் உண்மை. ■

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 25.09.2021 அன்று ஜெயஸ்ரீ அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது,